ஓம்

தத்சத்

காத்திருந்தமாதைப்

பார்த்திருந்தவேந்தன் கொண்டுபோன

# மதனசேகரன்.

இஃது

ஸ்ரீமான் பாலஸ்வரூபானந்த சுவாமிகள்

பேரப்புதல்வராகிய

ம-ள-ள-ஸ்ரீ,

## வேலூர் - கன்னைய நாயுடு

அவர்களால் இயற்றப்பட்டு

வே. ஜெயவேலு முதலியாரவர்களால்

சென்னை:

மதருஸ் டைமண்டு அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1916.

—

ரிஜிஸ்டர்காப்பிரைட்.] [விலை அணா 8

ஓம்

தத்ஸத்.

# கார்த்திருந்த மாதைப் பார்த்திருந்த வேந்தன் கொண்டுபோன

# மதனசேகரன்.

சீர்பெற்றேங்கிய கைலாசத்தில் நந்திபிரிங்கி முதலான முப்பத்துமுக்கோடி தேவர்களும் நார்ப்பத்தெண்ணுயிர ரிஷிகளும், கின்னரர், கிம்புருடர், கருடகாந்தர்வ, சித்யவித்தியாதனர்சூழ சாக்ஷாத் கைலாசபதியாகிய சிவசங்கரமூர்த்தி பார்வதாதேவியை வாமபாகம் கொண்டு கொலுவீற்றிருக்கும்சமயத்தில்; அப்பார்வதாதேவி தனது நாயகனைப்பார்த்து ஒ நாயகா! நீர் பூலோகமெங்கும் வாசம் செய்யப்பட்ட எண்பத்திநான்குலக்ஷ ஜீவகோடிகளுக்கும் ஆதாரண புருஷனாக இருக்கின்றீரல்லவா; அப்படியிருக்க மாயாவதாரியாகிய எம்பெருமான் உந்தி கமலத்திலுற்பவித்த பிரமதேவ னிட்ட விதியைமாற்றி நடத்துவதற்கு உம்மாலாகாதாவெனக் கேட்டவுடனே பரமசிவன் புன்னகைப்படைந்து ஹே! மாதரசே! நான் சொல்வதைக் கவனத்துடன்கேள் எப்படியென்றால்—

(சுலோகம்)

ஹரிணாபி ஹரேனாபி பிரம்மனாபிசுரைரபி
லலாட லிகிதாரேக பரிமாஷ்டம் நஸக்யதே.

என்பதுபோல் பிரம்மதேவனிட்ட விதிப்பயனை மாற்றுவதற்கு என்னாலும்முடியாது, அந்த வைகுண்டபதியாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியாலும் முடியாது. ஆகையால் அந்தவிதிப்பயனை மாற்றுவதற்கு உலகத்தில் யாரால் முடியப்போகிறதெனச் சொன்ன உடனே அச்

சபைதன்னிலிருந்த நாரதமுனிபுங்கவரெழுந்து லோகபிராட்டியாகிய உமாதேவியை வலப்பிரதக்ஷணமாக சுத்திவந்து அநேககோடி வந்தனங்கள்புரிந்து என்னை ஈன்றெடுத்த ஆதிபராசத்தியே சாக்ஷாத் சங்கரமூர்த்தியைக்கேட்ட வினவிற்கு அடியேன் கண்டமாத்திரம் விடைத்தருகுறேன். அது எப்படியென்றால் ஓர் வணிகக்கூட்டத்தில் புத்திரபாக்கியமில்லாமல் கவலையிடும்சமயத்தில் தெய்வக்கன்னிகை வரத்தால் பிறந்தமாதை தாய்தந்தை பெண் அம்மானுக்குகொடுக்க இச்சைவைத்திருக்க அன்நாட்டின் நந்தவனத்தில் கார்த்துக்கொண்ருந்த வேந்தனுக்கு மாலையிட்டதெப்படி? இது பிரம்மனுடைய விதிப்பயனன்றி வேருண்டா யெனச்சொன்னவுடனே உமாதேவி நாரதரைப்பார்த்து ஓ நாரதமுநியே அவ்வேந்தன் யெப்படி மாலையிட்டது அதினுடைய சவிஸ்தாரத்தை பூர்த்தியாகச் சொல்வீரானல் யென்மனமும் இச்சபையிலிருப்பவர் மனமும் சந்துஷ்டியடையுமென்று சொன்னவுடனே நாரதர்வெகுசந்தோஷமடைந்து உமாதேவியைப்பார்த்து அம்மணி உமதிஷ்டப்படி அடியேன் சொல்லுகிறேன் ஆனல் நீங்கள் இதரயோசனையில்லாமல் ஊக்கமுடன் மனம்நிறுத்தி கேழ்க்கவேண்டுமென்றுசொல்லி அக்கதையைச் சொல்ல நாரதர் ஆரம்பித்தார்.

---

## கதாசங்கம்.

| | |
|---|---|
| நாடு | அமராபுரி |
| வேந்தன் | கருணாகர பூபாலன் |
| மந்திரி | நீதிலோலன் |
| முதல் மனைவி | சற்குணம்பிகை |
| இரண்டாவது மனைவி | பங்குஜ வல்லி |
| தோழிமார் | கீர்வாணி, மோஹன, சுந்தரி |
| முதல் மனைவி புதல்வன் | மதனசேகரன் கதா நாயகன் |

**நாரதர்:**—கேளும் உமாதேவியே! சீர்பெற்றோங்கிய நெடியகடல் சூழ்ந்த அமராபுரியென்னும் நாட்டைச்சார்ந்த மலைகளும், குன்றுகளும், சோலைகளும், நீர்வளம், நிலவளம், பொருந்திய செந்தாமரைத் தடாகங்கள் நந்தவனங்கள் தேவாலயம் பிரம்மாலயம் விஷ்ணுவாலயம் இப்படிக்கொற்ற விநோதங்களுமிருந்துகூடகோபுர மாடமாளிகைச் சிங்காரமண்டப விசித்திர

விநோதங்களும் வாய்ந்திலகா நின்ற அமராபுரி யென்றொருப் பட்டணமுண்டு. அப்பட்டணத்தை பரிபாலனம் செய்கின்ற கருணாகர பூபாலன் யென்றதோர் வேந்தன் அரசு செய்துக் கொண்டிருந்தான். அன்னவன் நான்குவேதம்,ஆறுசாஸ்திரம், பதினெண் புராணம், அறுபத்தி நான்கு கலைக்கியானம், தொண்ணூற்றாறு தத்துவங்கள், மனுவிக்கியானமுதலானதும் குறைவில்லாமல் கற்றுணர்ந்தவனாகயிருந்து பிரம்ம, க்ஷத்ரிய, வைஸ்ய,சூத்ர இந்நான்கு வருணத்தாரும் புகழும்படியாய்குடிகளிடம் ஆறிலொருகடமை பெற்றுக்கொண்டு மனுநீதிவழுவாமல் ஆராய்ச்சிமணி கட்டி மந்திரி பிரதானிகள்சூழ இராஜ்யபரிபாலனம் செய்துக்கொண்டிருந்தான். இப்படிக்கிருக்கிர காலத்தில் தனது முதல் மந்திரியை நோக்கி மந்திரிவர்யா நான் இது காலபரியந்திரம் இன் நாட்டை தர்மநீதி தவரிடாமல் செங்கோல் செலுத்திவந்தும் அநேக தான தர்மங்களும் செய்து, மடங்கள் தடாகங்கள் கட்டியும் யெனக்குப்பிர்ப்பாடு இந்நாட்டை பரிபாலிப்பதற்கு புத்திரபாக்கியமில்லையென்று மனவருத்தமடைந்து இரண்டாவது மனைவியை விவாகம்செய்துக்கொண்டும் அப்பலனைக் காணவில்லையே இப்பேர்க்கொற்ற சண்டாளதிரேகமெடுத்து வாழ்வதைவிட இந்த ஆவியைப்போக்குவது நலமென்று என் மனம் கிடமிட்டேனென்றுச்சொல்ல இதைக் கேட்ட மந்திரிச்சொல்லத் தொடர்ந்தான்.

மந்திரி:—இராஜோத்தமா ! நீர் இப்படியெல்லாம் துயரப்படுவதில் நலமாகுமா எப்படியென்றால் நான் சொல்வதைக்கேள். (சுலோகம்) "ருணானுபந்து ரூபேணும் பசுபத்தினி சுதாலய ருணக்ஷயே க்ஷபம்யாது காதத்ரூபரிவேதண" யென்பதுபோல் ருணானுசம்பந்தமிருக்குமாகில் வீடு மக்கள் மனைவி சம்பத்து சேரும் அந்த ருணானுசம்பந்த மில்லாவிட்டால் யேதும்சேராது. ஆனபோதிலும் நான் அனேக புராணங்களும் சாஸ்திரங்களும் பார்த்திருக்கின்றேன் இதில்லாமல் பெரியோர் சொல்லக் கேட்டிருகின்றேன். அது யெப்படியென்றால் நீரும் தேவிமாரும் காஷாயம் தரித்து காய்கனிப்புசித்து காட்டில் சிவபெருமானைக்கோரித் தவம் புரிந்தால் புத்திரபாக்கியம் பெருவீரென்றுச்சொல்ல அம்மொழியைக் கேட்ட வேந்தன் சொல்லத்தொடர்ந்தான்.

**கருணாகரன்:**—கேட்டீரா மந்திரி! நீ சொன்ன சங்கதி உண்மை தான் ஆனால் உனதிஷ்டப்படி நானும் எனது தேவிமார்களும் போவதற்கு யேதும் தடையில்லை. நீயெனது முத்திரைமோதிரத்தைக் கைபற்றிக்கொண்டு நான் பரிபாலித்தது போல் இந்நாட்டை பரிபாலித்துக்கொண்டுவந்தால் இதற்குள்ளாக நான் சென்றகாரியம் பூர்த்திசெய்துக்கொண்டு கூடியசீக்கிரத்தில் வந்துசேருகிறேன் யென்றுச்சொல்லிமோதிரம் கொடுத்துவிட்டு மந்திரியிடம் விடைப்பெற்றுக்கொண்டு முதல் மனைவி இருக்கும்படியான அந்தப்புரம் சென்றான்.

---

## அந்தப்புரம்.

**சற்குணாம்பிகை:**—அடிசகியா மோஹனா! நான் யென்னவென்றுச்சொல்வேன் யெனது நாயகன் என்னை விவாகம்செய்து யென்னுடன் சந்தோஷமாய் மொழியாடிக் கொண்டிருந்தவர் இப்போது இந்தபங்குஜவல்லியை மாலையிட்டப்பிறகு யென்னுடன் பேசாமல் யென்னை இப்படி தனியாக மஹடிகட்டி ஒண்டியாக யிவ்விடத்தில் விட்டு தான் அம்மாதுடன் சந்தோஷமாயிருந்து காலம்கழிப்பது நீதியாகுமா? இதில்லாமல் தெய்வசங்கல்பத்தால் யெனக்கு கர்பமும்தரிக்காமல் மலடிபோலிருப்பதால் இப்படி நாயகன் வெருக்கக் காலமாச்சுது இதற்கேது செய்குவேன் சகியா.

**மோஹன:**-அம்மணி நீ துயர்படுவது நலமல்ல அய்யனுடையவிதி போல் முடியுமே தவிர மற்றப்படி நடக்கயேதும் காரணமில்லை. நாம் நாம் செய்தவினையை நாம்தானே அனுபவிக்கவேண்டியது ஆகையால் நீர் துக்கசாகரத்தில் மூழ்குவது நலமல்ல அம்மணி.

**கருணாகரன்:**—அடி சேடிகளே நாயகி யென்னசெய்கின்றாள்?

**மோஹன:**—மகாராஜ்! தங்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டு சோகமாக யிருக்கின்றாள்.

**கருணாகரன்:**—அடி சேடிகளே என் வரவை தேவிக்குத்தெரிவிப்பீர்.

மோஹன:—சித்தம் அம்மா உமது நாயகர் துவாரத்தில் வந்திருக்கின்றூர்.

சற்குணம்பிகை:—ஆ! அப்படியா! இதோவந்தேன் நாயகா உமது திருப்பாதங்களுக்கு வந்தனம் செய்கின்றேன்.

கருணகரன்:—கல்யாண் நாயகி நீயென்றுமில்லாத முகவாட்டமாக இன்று இருக்கவேண்டிய கவலையேது அதை உண்மையாகச்சொல்லவேண்டுமென்று கேட்ட வுடனே சற்குணம்பிகை நாயகனைப்பார்த்து சொல்லத்தொடர்ந்தாள்.

சற்குணம்பிகை:—நாயகா தன்னைத்தான் அறியாதபடிக்கி தாம் கேழ்க்கும் வினவை நான் யேதென்றுச்சொல்வேன். ஆனல் பெரிதல்ல தங்களுக்குமுந்தி இருந்த ஆசையும் அன்பும் இப்போ திருக்கிரதும் இல்லாததும் நீரேதெரிந்துக்கொள்ளலாம் ஆனலும் பெரிதல்ல இப்பேதையைத்தேடிவந்தக்காரணமேது சற்றுதயை புரிந்துச் சொல்வீர்.

கருணகரன்:—ஒ யென் பிராணநாயகி! நேற்றியதினம் கொலுவமர்ந்திருக்கும் சமயத்தில் புத்திரபாக்கியமில்லையென மனவருத்தமடைந்திருக்கும் காலத்தில் மந்திரி இதைத்தெரிந்து யென்னையும் உன்னையும் கானகம் சென்று காஷாயம் தரித்து தவம்புரிந்தால் புத்திரபாக்கியம் பெறுவோமென்று சொல்ல அதைக்கேட்டுசந்தோஷமடைந்து உன்னையழைத்துக்கொண்டு போகலாமென யெண்ணமிட்டு வருகலானேன் உன்கருத்தெதுவோ வெளியிடும் மாதரசே.

சற்குணம்பிகை:—நாயகா நீர் சொல்வது சர்க்கரைப்பந்தலில் தேன்மாரிப்பொழிந்தாப்போலிருக்கின்றது ஆனலும் சந்தோஷந்தான். ஏதோ உமக்கு ஆசைநாயகியொருத்தி இருக்கின்றளல்லவா அந்தநாயகியும் நீரும்சென்று தவம்புரிந்தால் புத்திரபாக்கியம் பெருவீர். இந்தக்கொடிய சண்டாளி வந்தாலும் பதவி பெறமாட்டீர் இதுவுமல்லாமல் அப்படி கானகம்சென்று தவம்புரியும் காலத்தில் வரமளிக்கும் பரமசிவன் இவ்விடத்தில் வந்து வரம் கொடாமல் போவானு. ஆனல் நீர் சொல்லும்படியான நீதிக்கு யான் சம்மதிக்கமாட்டேன் நாயகா.

**கருணாகரன்:**—ஆ! ஆ! அப்படியா கீர்மூடி கரும்புதின்க கூலிக் கேட்டக்கதைபோல் புத்திரபாக்கியம் பெருவதற்கு வரும்படி யழைக்க இதைக்கேட்டு என்னையும் நிந்தித்து சிவனை சிந்தித்து வெருப்பானமொழியாடுகின்ருய் சீ! சீ! இனி உன் முகதரி செய்வதைவிட நீச்சநாய்ப்பிறப்பது நலம்.

**சற்குணாம்பிகை:**—நாயகா அப்படியும் விதியிருந்தால் முடியா மல் போகாது உமதிஷ்டப்படி போவீர்.

—

## இரண்டாவது அந்தப்புரம்.

**பங்குஜவல்லி:**—அடி கீர்வாணி, சுந்தரி, இதென்ன கொடுமை எனது நாயகன் காலம் தவரிடாமல் யென்மனைக்கு வரப்பட்ட வர் இன்று நாழிகை பத்தாகியும் இன்னும் வராமலிருக் கக் காரணமேதோ தெரியவில்லையே. அல்லது யெனக்கு தெரி யாதப்படிக்கு அம்மாது மனைசென்ருரோ யேதும் தெரியே னென்றுச் சொல்ல தோழியாகிய கீர்வாணி சொல்லத்தொ டர்ந்தாள்.

**கீர்வாணி:**—அம்மணி நீர் சொல்வது நீதியல்ல அம்மாதை வேந் தன் வெருத்து உன்னை மாலை யிட்டபிறகு அவள் மனைக்குப் போகிறதில்லை அவளுடன் வசிக்கிரதுமில்லை அப்படிகொற்ற உத்தமர் யெக்காலமும் போகமாட்டார் யேதாகிலும் கச்சேரி அலுவலைப்பார்த்துக்கொண்டல்லவா அந்தப்புரம் வருவார் நீ இப்புடிக்கு துயரப்படுவது நீதி யல்லவம்மணி.

**கருணாகரன்:**—ஆரடி துவாரத்தில்?

**கீர்வாணி:**—வந்தனம் புரிகின்றேன் மகராஜ்.

**கருணாகரன்:**—அடிசேடிகளே எனது நாயகி யேதுசெய்கின்ருள்?

**கீர்வாணி:**—மகராஜ் தங்களுடைய தேவி தாங்கள் வரவில்லையென் று பெரும் துயரமடைந்து உமது வரவை யெதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ருள்.

கருணாகரன்:—ஆ! ஆ! அப்படியா நான் வந்ததாகயெனது தேவிக்கு தெரியச் சொல்வீர்.

கீர்வாணி:—சித்தம் அப்படியேசொல்லுகிறேன். அம்மணி நீ துயரப்பட்டதுபோல் நாயகன் துவாரத்தில் வந்திருக்கின்றார்.

பங்குஜவல்லி:—சேடிகளே நாயகன் வந்தாரு? யெதோ! வருவீர் ஆ! ஆ! பிராணநாயகா இதோ வந்தனம் செய்கின்றேன் நாதா. நீர்முகம் வேர்வைப்பட்டு கண்கள் சிவந்து கோபக்குரியுடன் இவ்வளவு துயரத்துடன் வரக்காரணமேது, அடியாள் யேது குற்றம்செய்தேன் அதை விவரமாகசொல்லுமென்று கேழ்க்க வேந்தன் சொல்லத்தொடர்ந்தான்.

கருணாகரன்:—நாயகி நேற்றியதினம் நான்கொலுவமர்ந்து நீதிதவரிடாமல் செங்கோல்பரிபாலித்து பிறகு யெனக்கு இருக்கப்பட்ட சம்பத்தை பிற்காலத்தில் பரிபாலிப்பதற்கு புத்திரபாக்கியமில்லையென்று மனவ்யாகூலமடைந்து துக்கசாகரத்தில் மூழ்கி நிற்கும் சமயத்தில் என்னருகிலிருந்த மந்திரி யென் துக்கத்தைப்பார்த்து தேருதலைச்சொல்லி யென்னையும் தேவிமாரிரண்டுபேரையும் காஷாயம் தரித்து காய்கனி புசித்து கானகம்சென்று தவம் புரிந்தால் பரமன் சித்தமிரங்கி நமதிடம் வந்து புத்திரபாக்ய பலன் தருவாரென்று சொல்ல அதைக்கேட்டு சந்தோஷமடைந்து நாட்டை மந்திரியிடம் வொப்பிவித்து அந்தப்புரம்சென்றுபட்டத்துதேவியைக்கண்டு மந்திரிசொன்ன விபரமெல்லாம் சொல்லி தவத்திற்கழைக்க அம்மாது யென்னையும் நிந்தித்து அச்சிவனைச்சிந்தித்து தவத்திற்கு வரமாட்டேனென்று வெறுத்தாள். அம்மொழி கேட்டவுடனே கோபம் பிறந்து இன்று முதல் அந்தியம்வரைக்கும் முகதரிசனம் செய்வதில்லையென்று உறுதிமொழிக்கூறி இரண்டாவது அந்தப்புரம் வந்தேன். உன்கருத்தேதோ வெளியிடும் பிராணநாயகி.

பங்குஜவல்லி:—நாயகர் நாம் இத்தனைகாலமாக இந்த பூலோகத்தில் வாழ்ந்து யேதுப்பயனடைந்தோம். நமது பிற்காலத்தில் இன்னாட்டையும் இருக்கும்பொருளையும் பரிபாலிப்பதற்கு புத்திரபாக்கியமில்லையென்று மனவருத்தமடைந்து இருக்கும் சம

யத்தில் நீரும் யென்கருத்திற்கு தக்கபடி வாக்களித்தீர் ஆனல் உமதிஷ்டப்படி நடப்பதற்கு ஏதும்தடையில்லை பிராணநாதா.

கருணாகரன்:—நாயகி நீயேதும் துயரப்படாமல் கூடியசீக்கிரத்தில் காவி ஆடை தரித்துக்கொள் நானும்தரித்துக்கொள்ளுகிறேன்.

பங்குஜவல்லி:—நாயகா உமதிஷ்டப்படி உடுத்திக்கொண்டனன் இனி காட்டிற்கு போகலாம் வருவீர்.

கருணாகரன்:—உமதிஷ்டப்படி வருகிறேன் நாயகி.

---

## காட்டின் மார்க்கம்.

கருணாகரன்:—நாயகி நாம் நமது நாட்டைவிட்டு காடு, மலை, வனம், வனாந்திரங்களை கடந்து வருக நாம் தவம்செய்வதற்கு தகுந்த இடம் அகப்படவில்லையே இனியென்னசெய்வது ஆ! ஆ! நாயகி பஞ்சணை மெத்தைவிட்டிரங்காமல் தாதிமார்கள் புடை சூழ வீற்றிருந்த உன்பாதம் இந்த காட்டிலிருக்கப்பட்ட கல் முற்களை மிதித்து நடக்க பிரம்மனிட்டவிதி இதுவே யாகும். ஆ! ஆ! நாயகி இன்னம் கொஞ்சம்தூரம் நடந்துவருவாய். அதோ தோற்றுகிற விருக்ஷங்கள் கூட்டமதைப்பார்த்தால் யேதோ ஓர் நந்தவனம்போல் தோற்றுகிறது அருகில்சென்று பார்ப்போம் மாதரசே.

பங்குஜவல்லி:—நாயகா உமதிஷ்டப்படி நடப்பதற்கு யேதும் தடையில்லை பிராண நாதா.

கருணாகரன்:—ஆ! ஆ! நாயகி இந்த நந்தவனத்தின்பெருமையை நான் யெப்படி வர்னிப்பது. இதோ இருக்கப்பட்ட கதலி, பலா, வாழை, மா முதலான விருக்ஷத்தினுடைய சாலையின் அழகே யழகு. இதில்லாமல் இங்கு மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, செண்பகம், மனோரஞ்சிதம், பாரிஜாதம்முதலான புஷ்பங்கள் பூர்த்து கமகமவென்று வாசனைவீச இந்தசுகந்தபரிமளத்திற்கு தக்கப்படி இத்திருக்குளத்தில் செந்தாமரைமலர் பூர்த்து பனிநீர்போல் இருக்கப்பட்ட ஜலத்தைப்பார்க்க மனம் சந்தோஷமடையலானேன், ஆ! ஆ! நாயகி இதோ நமக்குநேராகஇருக்கும்படியான செடிகள்மீது பரவைகள் குப்பல்குப்பலாககுந்தி

ராஜப்பரவையாகிய குயில்பாடும்சங்கீதமதைக்கேட்டு இந்தபரவைகள் மெய்மரந்திருப்பதைப்பார்த்தால் இவ்விடத்தில் பரம்பொருளாகிய பரமசிவன் பார்வதிதேவியுடன் யெக்காலமும் வாசம் செய்யப்பட்ட கைலாயத்திற்கு சமானமான திச்சோலையில் நாம் தவம்புரிந்தால் அப்பெருமான் மனமகிழ்ந்து கூடியசீக்கிரத்தில் நமதுமுன் வந்து நாம்கோரிய வரம் தந்தருள்புரிவார். ஆகையால் இதுதான் நாம் தவம் செய்யத்தகுந்தயிடமாகும் நாயகி! இனிதேடினாலும் இதுபோல் இடம் கிடைப்பதரிது. ஆனபடியால் நாமிருவரும் இந்தநதியில் ஸ்நானம் செய்து இந்த மடத்தில் பரமனைக்கோரி தவம்புரிவோம் வருவாய் மாதரசே.

பங்குஜவல்லி:—நாயகா! இதைவிட இதரமானயிடம் கிடைப்பதரிது. ஆகையால் தாமதம் செய்யாமல் ஸ்நானம் செய்யலாம் வருவீர்.

கருணாகரன்:—நாயகி! இதோ ஸ்நானம் செய்து விட்டோம் தூளிதமணிந்து இந்தமடத்தில் நாமிருவம் குந்தி தவம்செய்ய இது தான் சமயம்.

---

கருணாகரன் சொல்லும்,

எண்சீர் ஆசிரிய விருத்தம்.

உடலெனும் பெருங்கடலில் ஓங்கார வீடுகட்டி
உண்மையுடன் அகரமென்ற உருதிகம்பத்தைநட்டு
திடமுடனே உகரமென்ற திவ்யக்கதவைப்பூட்டி
தேடரிய மகரமென்ற பீடமதில் குந்தி
நிடமுடனே சுழியென்ற தீபமதையேத்தி
நீனிலத்தில் நான் தேடி நின்றிட்டேனய்யா
படபடப்பா யோடிவந்து யென்துயரம் தீர்த்து
பக்ஷமுடன் கார்த்தளிப்பீர் பார்வதி நேசா.

கருணாகரன்:—ஓ சிவப்பெருமானே! சம்போ சங்கர மஹாதேவா கைலாசப்பதியே நான் நாடிவந்தக்காரியத்தை பூர்த்திச் செய்து, அடியேனைக்கார்த்தளிக்க வேண்டும் கருணாநிதியே.

## கைலங்கிரி தர்பார்.

பார்வதி:—நாயகா! இதுயென்னக்காரணம்? இது வரைக்கும் நாம் கைலங்கிரியில் வாசம் செய்துக்கொண்டு வருகின்றோமல்லவா. அப்படியிருக்க யென்றுமில்லாதித்திரேகம் யெரிச்சல் இன்று காணவேண்டிய காரணமேது? அதனுடைய சவிஸ்தாரத்தை அடியேனுக்கு சொல்லும் நாதா.

பரமசிவன்:—நாயகி! நான் யென்னவென்றுச் சொல்லுவேன். பூலோகத்தில் அமராபுரி யென்றொரு இராஜ்யமுண்டு. அன்னாட்டிற்கு அதிபதியாகிய கருணாகர பூபாலனென்றொரு வேந்தனுண்டு. அன்னவனுக்கு புத்திரசந்தானமில்லாமல் மனவ்யாகூலமடைந்து அரசில் துயரமடையும் சமயத்தில் மந்திரி இதைத் தெரிந்து அவ்வேந்தனை இரண்டு மாதருடன் தவம் செய்யும் பொருட்டு திட்டம் செய்ய அக்கருத்துக்கு சம்மதமடைந்து தான் தனது பட்டத்து தேவியிடம் சென்று கருத்தைக்கூற அம்மாததற்கு சம்மதிக்காமல் வெருக்க வேந்தன் கோபமடைந்து இரண்டாவது மனைவியிடம் வந்து சொல்லஅதற்கம்மாதுசம்மதமடைந்துஇருவரும்காவிஅணிந்து இந்த கைலாயத்திற்கு சமீபத்தில் இராநின்ற காட்டில்கோரமாகிய தவம் புரிகின்றார். அத்தவத்தின் கடூரமானது நமது திரேகம் யெரிச்சலுண்டாயிற்று. இதுதான் சவிஸ்தாரம் மாதரசே.

பார்வதி:—நாயகா! பேதமைதங்கிய வேந்தன் அன்னவன் மனைவியும் இப்படி நாடு நகரமெல்லாம் விட்டு காஷாயம் தரித்து அன்னபானாதிகளைவெருத்துகாய்கனிகளைப்புசித்துபுத்திராபாக்கியத்துக்காயிப்படி கொடூரத் தவம் செய்யப்பட்ட பேதைகள் முன்னில் சென்று அவர்கோரியகோரிக்கை ஈடேர செய்யாமல் இருப்பது உமக்கு தர்மமா. அபயமென்னப்பட்டவரை காற்கும் குணம் உம்மிடத்திலிருந்தும் இப்படி பராமுகமாயிருக்க நீதியாகுமா. லோகரக்ஷகரென்று பிருதுவகித்து காற்காமலிருப்பது நமக்கு நலமல்ல நாமிருவரும் சென்று அன்னவருக்கு வேண்டிய வரத்தை தந்து விட்டு வரலாம் வருவீர் நாயகா.

பரமசிவன்:—பார்வதி! நீசொல்லும்படியான நீதி யெல்லாம் நன்மைதான் ஆனால் நாம் போவதற்கு யேதும் தடையில்லை வருவாயடி மாதே.

பார்வதி:—ஆ! ஆ! நாயகா இந்த இரண்டு பேரும் தன்னைத்தான் மறந்து தலமென்னும் பெரும் வீட்டில் புகுந்து ஞானமென்னும் தீபமதையேத்தி இருவரும் அச்சுடர்மார்கத்தில் பார்த்த கண் பூர்த்திருக்கின்றார். ஆ! நாதா இவர்களுடைய ஞான கித்திரை தெளியும் பொருட்டு உமது மாய்கை யென்னும் மோக காற்றை வீசுவீர். இல்லாவிட்டால் வருடம்பத்தானபோதிலும் நேத்திரம் திரக்கமாட்டார் இதனால் கைலங்கிரி பஸ்மீகரமாகும் போல் காட்டுகிறது யென்ன இன்னம் தடைசெய்கின்றீர்.

பரமசிவன்:—மாதே இதோ மோகக்காற்றை வீசினேன், அன்னவர் பிரமித்துயெழுந்து மெய்மறந்து துயரமடைவதை பார்போம் சற்று நேரம் நாமிருவரும் அச்செடி மறைவில்வொளிந்து நிற்போம்.

பார்வதி:—நாதா உமதிஷ்டப்படி செய்வீர்.

சருணகரன்:—பிராண நாயகி! இதென்னவிந்தை நான் நேத்திரஸ்தம்பனம்செய்து சுடர்வொளிமார்க்கத்தில் பார்க்கும்சமயத்தில் யாரோவொருவர் சடைமுடிதரித்த உத்தம புருஷர் யென்னருகில் வந்து தட்டி யெழுப்பினதுபோல் திடுக்கிட்டு கண் விழித்துப்பார்க்க இங்கெவரும் காணேமே அய்யோ யென் தவம் பங்கமடைந்ததே இதற்கேது செய்குவேன் இனி இவ்வுடலை வைத்து யெப்படிபாரில் வாழ்வது இதோ யெனது சந்திராயுதத்தால் யென்னுயிரையைப்போக்குகின்றேன் (யெனக் கத்தியை வோங்க)

பரமசிவன்:—ஆ! ஆ! இராஜனேநீ பதராதே நீயே உத்தமன்நீயே அன்பன் நீயே இன்பன் இதோ வந்துவிட்டேன் வந்துவிட்டேன் கோரிய வரத்தைதருகின்றேன் கில்கில் (யெனச்சொல்லி கையைப்பிடிப்பது.)

---

கருணாகரபூபாலன்சொல்
தேவாரம்.

அத்தனே சுடரே போற்றி ஆதியே ஞானசோதிபோற்றி
நித்தனே நிர்மலா போற்றி நீலகண்ட தேவா போற்றி
பித்தனே கைலைவாசா பேசிடும் பிரணவநேசா
சுத்தனே யென்னையாளும் சொக்கினேன் பதமேபோற்றி.

கருணாகரன்:—ஓ தீனரக்ஷகா அடியேன்செய்தகுற்றமதைப்பொருத்து யென்முன்வந்த கருணாகர உமது திருப்பாதங்களுக்கு வந்தனம்.

பரமசிவன்:—ஆ! ஆ! பூபாலா நீயும் உமது தேவியும் மனப்பூர்த்தியுடன் யென்னைக்கோரித் தவம்செய்யவேண்டிய காரணமேது அக்கருத்தை வெளியிடுவீர்.

கருணாகரன்:—ஓ! சம்போ சங்கரா மஹாதேவா தங்களுடைய கிருபா கடாக்ஷத்தால் யெனக்கு மிதமில்லாத தன சம்பத்திருந்தும் இதையெல்லாம் பரிபாலிப்பதற்கு புத்திரபாக்கியமில்லாமல் மனக்கவலை யடைந்து உம்மைக்கோரித் தவம் புரிந்தேன். இதைவிட இதர பாக்கியம் யெந்தனுக்கிருந்தும் யேதுபலன்.

பரமசிவன்:—ஓ! வேந்தனே நீ யேதுக்கும்துயர்படவேண்டாம் உனது பட்டத்துதேவிக்கு ஓர் புதல்வனும், இரண்டாவது தேவிக்கு ஓர் புதல்வியும் பெரும்படி ஆசீர்வதித்தேன் இனி உனது நாட்டிற்கு தேவியுடன் சந்தோஷமாய் சென்று சுகமாய் வாழ்ந்திருப்பீர்.

கருணாகரன்:—ஆ! ஆ! மஹா சந்தோஷம் உமதிஷ்டப்படி நாட்டிற்கு செல்குரோம் உமது திருப்பாதங்களுக்கு வந்தனமய்யனே.

பரமசிவன்:—அப்படியே போகுவீர்நான்கைலங்கிரிக்குச்செல்லுகிறேன்.

கருணாகபன்:—பிராணநாயகி இனி நாம் நமது நாட்டிற்கு போகுவோம்வருவாய்.

பங்குஜவல்லிஃ—நாயகா! உமதிஷ்டப்படி போகுவோம் ஆனல் உம்முடன் சொல்லவேண்டிய விஷயமொன்று அதுயேதென்றால் நீர் நாட்டிற்கு சென்றவுடன் மூத்தபனேவியிடம் மொழியாடலாகாது யேனென்றால் இப்பரமசிவன் மூத்தமனவிக்குப் புத்திரபாக்கியபலிதம் தந்தே னென்று வரம் தந்தாரல்லவா ஆகையால் நீரவ்விடம்போகாமல் நின்றால் யெப்படி கற்பமுண்டாகிறதோ யதைப்பார்க்கலாம் நாயகா.

கருணகரன்:—சீ! சீ! மூடமதியடைந்த மாதரசே? லோக ரக்ஷகராகிய பரமசிவன் யென்பத்தி நான்கு லக்ஷகோடிஜீவ ராசிகளுக்கும் பிராணதாரம் உண்டாக்கும்படி செய்த மெய்யன் இதை செய்யயோர்பெரிதா. நாம்பரிக்ஷிப்பதென்பது யோர் நீதியா, ஆனல் உனதிஷ்டப்படி அங்குபோகாமல் இருக்குரேன்.

பங்குஜவல்லி:—ஆனல் மகாபாக்கியம் நான் சொன்னதை மனதில் கோபம்வையாதீர்.

கருணகரன்:—ஆ! ஆ! பிராண நாயகி நாம்மொழியாடிக்கொண்டே கானகம்விட்டு நமது நாட்டிற்கு வந்துவிட்டோம். இனி நீ யந்தப்புரம்சென்று உனது காரியங்களைப் பார்த்துக்கொண்டிரு. நான் கொலுவிற்குச்சென்று இந்த ஓர்மாத காலமாய் நாட்டின் விசேடங்களை விசாரித்தபிறகு அந்தப்புரம் வருகின்றேன்.

பங்குஜவல்லி:—நாயகா உமதிஷ்டத்திற்கு யேதும் தடையில்லை கொலுவிற்கு சென்று யதிசீக்கிரத்தில் வருவீர்.

## தர்பார்.

---

நீதிலோலன்:—மகாராஜ் உமது திருப்பாதங்களுக்கு வந்தனம்.

கருணகரன்:—மந்திரி. இந்த ஆசனத்தி லமருவீர். ஆனல் நான் தவத்திற்குசென்றதுமுதல் நமது நாட்டில் வாழும்படியான குடிகளுக்கு யேதும்தீங்கில்லாமலும் காலம்தவரிடாமல் செங்கோல் செலுத்திக்கொண்டு வந்தீரா?

நீதிலோலன்:—மகராஜ் நீர்சென்றதுமுதல் இருந்ததுபோல் இன் நாட்டை பரிபாலித்துக்கொண்டுவந்தேன். ஆனல் தாங்களும் தமது தேவியும் காட்டிற்குச்சென்றவர் யென்ன வரம் பெற்றுவந்தீர் அடியேனுக்கு அருள்செய்குவீர்.

கருணாகரன்:—மந்திரிவர்யா! வெகுசந்தோஷமடைந்தேன். ஆனல் நீர்சொன்னதுபோல் தேவியும் நானுமாகக் காஷாயம் தரித்து காட்டிற்குச்சென்று கோரதவம்புரிந்து நிற்க பரமன் மன மகிக்ஷியடைந்து சதி நாதருடன் இருவரும் யென்முன்பாக வந்து நிற்க பரமனோடு எனது குறைகளைச்சொல்ல சந்தோஷ மடைந்து இரண்டு தேவிமாருக்கும் சந்தானமுண்டாகும்படி வரம் தந்துவிட்டு கைலாயம் சென்றூர்பிறகு நாங்களிருவரும் சந்தோஷமாய் நாட்டிற்கு வந்துவிட்டோம்.

நீதிலோலன்:—(அவனன்றி யோரணுவு மசையாது) யென்பது போல் ஐயனுடைய சித்தமில்லாமல் நாம் யென்னசெய்த போதிலும் ப்ராப்தமடைவது துர்லபம் ஆகையால் போட்ட விடத்தில் தேடினல் அகப்படுமேதவிர போடாதயிடத்தில் தேடினல் அகப்படாது. ஆனதுபற்றி நீர்பெற்றுவந்த பாக்கியமே பாக்கியம்.

கருணாகரன்:—சந்தோஷம் நாம் அந்தப்புரம் போகலாம்வருவீர்.

நீதிலோலன்:—மஹாபாக்கியம்.

## அந்தப்புரம்.

சற்குணாம்பிகை:—ஆ! ஆ! சகிமாரே இதென்ன ஆச்சரியகரமாயிருக்கிறது நான் ஆறுமாதமாக யென் நாதருடைய திருமுகவிலாச மிப்படி இருக்குமென்று நான் பார்த்ததும் கிடையாது இப்படி இருக்க நாயகன் காட்டிற்குசென்றபிறகு நான்புசிப் பருந்தி இராத்திரி மஞ்சத்தின்மீது நித்திரைசெய்யும் சமயத்தில் நாயகன் வந்து ஸ்நானபானஞ்செய்து ஜெபதபங்களைமுடித்துக்கொண்டு போஜனமிடச்சொன்னர். நான் பஞ்சவித பதார்த்தத்துடன் போஜனமிட்டேன் அவர் போஜனம்செய்த பிறகு சய்யாக்ரஹத்திற்கு வந்து யென்னுடன்சரசசல்லாப

களாடி நித்திரைசெய்ததுபோல் யான் கினவு கண்டவுடனே திடுக்கிட்டெழுந்து பார்க்க நாதரில்லாமல் போனபடியால் மனம் சஞ்சலமடைந்து துக்கசாகரத்தில் மூழ்கி நின்றேன். அது முதற்கொண்டு இதுவரைக்கும் எனக்கு கெற்பசின்ன மோங்கி தசமாதமாச்சுது இதையொருவருக்கும் வெளியிடாமல் மர்மமாக இருந்தேன். இப்போது பூர்த்தியானபடியால் மன விசனமடைந்து உங்களுக்குவெளியிட்டேன். ஆனபடியால் நீங்கள் கொடியசீக்கிரத்தில் இதற்கு தகுந்த உபசரணை செய்குவீரென சொன்னவுடனே நல்ல சுபதினத்தில் சூர்யப் பிரகாசம்பொருந்திய ஓர் புதல்வனை ஈன்றனள்.

தோழிகள்:—இதைப்பார்த்த தோழிகள் வேகமாய்சென்று வேந்தனைக்கண்டு அய்யனே உமது பட்டத்து தேவியாகிய சற்குணம்பிகை ஓர் புதல்வனை ஈன்றனள் யெனச்சொன்னவுடனே வேந்தன் சந்தோஷமடைந்து இளையதேவியுடன் இவ்விர்த்தாந்தத்தை சொல்லாமல் வேதியரை யழைத்து அய்யா வேதியரே யெனது பட்டத்துதேவி புதல்வனை ஈன்றனள், அப்பாலகனுக்கு நாமகரணமிடவேண்டுமெனச் சொல்ல;

வேதியர்:—ஓ இராஜோத்தமா உமது பட்டத்துதேவி ஈன்ற புதல்வனுக்கு யான் அனேக சாஸ்திரங்களைப்பார்க்க (மதனசேகரன்) யென்ற பெயர் தகுந்தபடியால் இதுவே நாமகரணமென்று வேதியர் நாமகரணமிட்டு வேண்டியவெகுமதிகள் பெற்றுக்கொண்டு அவர் வீட்டிற்குச்சென்றனர். அதன்பிறகு அப்புதல்வன் தினமொருமேனியும் பொழுதொரு வண்ணமாய் வளர்ந்துகொண்டுவந்தான்.

கருணாகரன்:—மந்திரி பரமன் கிருபாகடாக்ஷத்தால் நமக்கு புத்திர பாக்கியம் கிடைத்தது ஆகையால் இப்பாலகனுக்கு கல்வி போதிக்கவேண்டியதால் தகுந்த உபாத்தியாயரைத் தேடி பாடசாலைக்கு அனுப்புவீர்.

மந்திரி:—மகாபாக்கியம் அப்படியே செய்கிறேன்.

மதனசேகரன்:—தந்தையே இதோ வந்தனம் தமது கிருபாகடாக்ஷத்தால் நான் நாலுவேதமும் ஆறுசாஸ்திரம் அறுபத்து

நான்கு கலைக்கியானமும் கற்றுணர்ந்தேன். ஆனால் இப்பவும்யானும் எனது தாயாரும் வேற்றுமையாக தனித்து இருப்பதால் நாங்கள் ஜீவிக்கும் பொருட்டு இந்த நாட்டிற்கு வடபாகத்திலிருக்கும் பாலக்காட்டை தருவீரானால் யான் அதில் யேதாகிலும் பயிரிட்டு ஜீவனம் செய்துக்கொள்வேன் இதைக் கேட்கதான் ஆவலுடன் வந்தேன்.

**கருணாகரன்:**—மந்திரி இச்சபையில் கேட்ட கேள்வியை கவனித்தீர்களா கத்திரிபிஞ்சுக்கு காலும் கைமுளைத்ததுபோல் முளைத்து இச்சபைக்கு வந்து முந்தி பிந்தி யோசிக்காமல் நாங்கள் ஜீவனம் செய்வதற்குபாலக்காட்டைத்தருமென்றுக்கேட்டான். இவன் பிழைக்க தகுந்த புதல்வனு இவனு தாய்தந்தையை காப்பாற்றத்தக்க தீரன் இதற்கு யென்ன விடை தரலாம் சொல்வீர் மந்திரி?

**நீதிலோலன்:**—மகராஜ் சிருப்பிள்ளையாக யிருந்தபோதிலும் புத்தி யுடையவன் தான் ஞானபுருஷன் ஆனபடியால் பாலகன் கேட்டதுபோல் தடைசெய்யாமல் கொடுத்து தான் பார்க்கவேண்டியது.

**கருணாகரன்:**—மந்திரி உன் மொழிக்கு மாருதல் சொல்லாமல் தருகிறேன் அடா மதனசேகராஉன் கருத்தின்படி அக்காட்டை தந்துவிட்டேன் யெக்காரியம் செய்கின்றுயோ யானும் பார்க்கின்றேன்.

**மதனசேகரன்:**—தந்தையே! இக்காட்டை தந்ததுபெரிதல்ல இக்காட்டைவெட்டி சமபூமி செய்யும்படியாக சிலது ஆட்களை அனுக்ரகஞ்செய்யவேண்டியது.

**கருணாகரன்:**—அப்படியே உனதிஷ்டப்படி ஆட்களை யழைத்துக்கொண்டு போவாயடா மதனசேகரா.

**மதனசேகரன்:**—தந்தையே! மகா பாக்கியம் அடாகூலியாள்களே இதோ இருக்கப்பட்ட பாலக்காட்டை நாற்புரமும் வெட்டி சமபூமி செய்து யென்னுடன் சொல்வீர்,

**கூலிகள்:**—அப்படியே சொல்லுகின்ரேம்.

கூலிகள்:—அடா அண்ணமாரே இதென்னகோலம் கிணறுவெட்ட பூதம் புறப்பட்டதுபோல் நாம் காட்டைவெட்டிக்கொண்டு வரும் சமயத்தில் இந்த தென்திசை மூலையில் கோடாலி இடிக்கு கண் கண் னென்று சப்தம் கேட்கிரது நீங்கள் யெல்லோரும் வருவீர் வெட்டிப்பார்ப்போம்.

கூலித்தலைவன்:—அடா கூலிகளே இந்த வேலிதனை நாலுபக்கம் வெட்டித்தள்ளுவீர் அதின்பிறகு யோசிப்போம்.

கூலிகள்:—இதோ பார்த்தீரு வேலியை வெட்டித்தள்ளிவிட்டோம் ஆ! ஆ! இந்தக்கானகத்தில் இரும்புக்கதவு மூடி இருக்கவேண்டியக்காரணமேது. அடா அண்ணமாரே நமது கோடாலியை கதவின் தாளத்தில் மாட்டி திறப்போம் வாரீர்.

பூதம்:—ஆ! ஆ! அடா நரமனிதரே, நீங்கள் இங்கு நிற்காமல் அதிவேகமாகச்சென்று உங்கள் வேந்தனுக்கு சொல்லுவீர் யென்னவென்றால் உத்தமகுண சீலனாகவும் பத்துவயது பாலனாகவும் தாய்க்கு ஒருபிள்ளையாகவுமிருப்பவனை கொண்டுவந்து யிங்கு பலியிட்டால் இந்தக்கிணத்தில் ஆறு அண்டா பொருள்கிடைக்குமென்று சொல்வீர் அப்படி சொல்லாமலிருந்தால் உங்களை ஆகாரம்செய்துவிடுவேன்.

கூலிக்காரர்:—அப்படியே சென்றுச் சொல்லுகின்றோம் ஆனால் யெங்களை யேதும் செய்யவேண்டாம்.

பூதம்:—கூடிய சீக்கிரத்தில் சொல்லி நாளையதினம் அழைத்து வருவீர்.

கூலித்தலைவன்:—அப்படியே. வந்தனம் ராஜ பூபனே தங்கள் உத்திரவின்படி பாலக்காட்டைவெட்டி கிர்த்துளிசெய்யும் காலத்தில் அக்காட்டில் தென்திசைதன்னில் ஓர் இரும்பு கதவு அகப்பட்டது. அந்தக்கதவை நாங்கள் கோடாலியால் திறக்கும் சமயத்தில் ஓர். பூதம் வெளிவந்து யெங்களைமிரட்டி அடா உங்கள் வேந்தனுக்குசொல்லுமென்று பெரும் கூச்சலிட்டது நாங்கள் யேதென்றுகேட்டோம். அதற்கப்பூதமானது உத்தமகுண சீலனாகவும் பத்துவயது பாலனாகவும் தாய்க்கு ஒரு

பிள்ளையாகவும் இருக்கப்பட்டவனை கொண்டுவந்து இங்கு பலிகொடுத்தால் ஆறு அண்டா நிரய திரவியம் கொடுக்கிறேன் யென சொல்லி யெங்களை மிரட்டியோட்டியது நாங்கள் அதிக பயமடைந்து ஒடிவந்துவிட்டோம் மகராஜ்.

கருணாகரன்:—ஆ! ஆ! அப்படியா அடா கூலிக்காரர்களே நீங்கள் இச்சேதிதனை யொருவருடன் சொல்லாதீர் மந்திரி இவர்கள் ஜீவிப்பதற்கு வேண்டியபொருள்கொடுத்தனுப்புவீர்.

நீதிலோலன்:—மகாபாக்கியம் அப்படியே கொடுத்தனுப்புகிறேன்.

கருணாகரன்:—மந்திரி இதற்கெப்படியோசனை நமது நாட்டிலெவரிருக்கின்றாரோ தேடிவந்து சொல்லும் யான் அந்தப்புரம் போகின்றேன்.

நீதிலோலன்:—அப்படியே தேடிவருகின்றேன் மகராஜ்.

பங்குஜவல்லி.—பிராண நாயகா நீர் யெக்காலத்திலும் அந்தப்புரம்வரும் சமயத்தில் செந்தாமரைக்கமலம்போல் முகமானது வொளிர்காந்தியுடன் இருக்கப்பட்ட உமது முகம் இன்று சூரியனைக்கண்ட செந்தாமரை யெப்படிவாடிவதங்கிநிற்குமோ அதுபோலிருக்கவேண்டிய காரணமேது அதை யடியாளுக்கு தெரிவிப்பீர் நாயகா.

கருணாகரன்:—நாயகி யெனக்கேதும் துயரமில்லையாது ஆனால் நேற்றியதினம் யான்கேட்டமொழியைக்குறித்து துயரப்படுகிறேன் என் துன்பத்தை தீர்ப்பவர் யெவருமில்லையென்று பெரும் துக்கத்துடனிருக்கின்றேன் இதனால்தான் எனது முகம் வாட்டமடைந்தது நாயகி.

பங்குஜவல்லி:—நாயகா உமக்கு எத்துன்பம் வந்தபோதிலும் அதை தீர்க்க நானிருக்க நீர்யேன் துக்கமடைவது அது யெப்படிக்கொற்ற துன்பமோ அதை யடியாள் கேழ்க்கும்படி சொல்லும் யென் நாயகா.

கருணாகரன்:—நாயகி சொல்லுகிறேன்கேள். எப்படியென்றால் இன்றைக்கு மூன்றாம்தினம் யான்கொலுவில் இருக்கும்சமயத்

தில் அந்தத்தருதலை பையனான மதனசேகரன் பத்துவயது சீராகாதப்படி இருந்தும் ஒட்டமாய்வந்து எனக்கு பாலக்காடு தேவையிருப்பதால் தாவெனக்கேட்டான் அப்படியே தருக நமது வேலைக்காரரை யழைத்துக்கொண்டுப்போய் கானகம் வெட்டும்படி திட்டம்செய்துவிட்டு தன் மனைக்குவந்து விட்டான். அந்தவேலைக்காரர்கள் காட்டைவெட்டும் சமயத்தில் ஓர் இரும்புக்கதவைகண்டாராம் அதை திரந்து பார்க்கும்சமயத்தில் ஓர் பூதம் வெளியில்வந்து உத்தமகுணசீலனாகவும் பத்துவயதுப்பாலகனாகவும் தாய்க்குத் தலைப்பிள்ளையாகவும் இருக்கப்பட்டவனை யிங்கு பலிகொடுத்தால் ஆறு அண்டா பொருள் தருகிரதாக சொல்லி மறைந்ததாம் அந்த சங்கதி காவலர் சொல்லக்கேட்டு பொருள்களைப்பற்றி என்மனம் பதருகின்றது, அப்படி பலிக்கொடுப்பதற்கு தகுந்தவர் நமது நாட்டில் கிடையாது ஆனால் என்மனம்போல் நீ இருப்பதாலும் நான் சொல்லும் காரியத்தை வெளியிடமாட்டாயென்று பெருமனமிட்டு சொல்லுகிறேன். யென்னவென்றால் அந்தத் தருதலைப்பையனான மதனசேகரன் நமது குலவிர்த்திக்கு தகுந்தவனல்லவென்று யென்மனம் வெறுத்து நாளை சாயந்திரம் பலி இடப்போகிறேன் உன் கருத்தேதோ சொல்லும்மாதே.

**பங்குஜவல்லி:**—நாயகா நமக்கு இதுகாலபரியந்தம் புத்திரபாக்கியமில்லாமல் மனவருத்தமடைந்து தவம்புரிந்து புத்திரன் ஜனிக்க அப்புத்திரனை கேவலமாகிய பொருளுக்காசித்து பலியிடமனம் யெப்படி துணியும் நம்மைப்போலொத்த வேந்தர் அறிந்தால் நகைப்புக்கிடமல்லவா இப்படிசொல்வது நலமல்ல பிராண நாயகா.

**கருணாகரன்:**—சீ! சீ! துஷ்டி எனக்கடங்கி இருக்காதப் பாலகன் இருந்தால் யேதுபலன் எப்படி யென்றால்,

### சுலோகம்.

யேகோபி குணவான்புத்ரோ நிற்குணே நசதைரபி
யேகசந்திரப்ரகாஸேஹ நக்ஷத்திரகிம்பிரயோஜனம்.

குணத்திற்குகந்த புத்திரன் யொருவனிருந்தால் குலம் விர்த்தியடையும் குணமில்லாதப்புத்திரர் கோடானகோடி இருந

தேதுபயன் இதற்கு திருஷ்டாந்திரம் யெப்படியென்றால் உலகத்தில் கோடானகோடி நக்ஷத்திரம் உதித்தால் யென்னபயன் ஓர் சந்திரன் உதித்தால் எப்படிபிரகாசமடைகின்றதோ அதுபோலொத்த புத்திரனுமிருக்கவேண்டுமல்லவா எனக்கடங்காதப்பிள்ளை நான் நாளையதினம் பலிக்கொடாமல் இருக்கமாட்டேன் யெனக்கு நீதி போதிக்கவேண்டாம் அப்புறம்போகுவாய்.

பங்குஜவல்லி:—நாதா உமதிஷ்டம் ஆ! ஆ! நாம் இந்தமொழியைக்கேட்டு சும்மாயிருந்தால் இந்தப்பாதகம் நம்மை சுற்றும் ஆகையால் நாம் இத்தருணமே சென்று இதையெல்லாம் அம்மாதுடன்சொல்லி மறுதேசம்சென்று பிழைத்திருந்தால் அவனால் நமது குலவிர்த்தியடையும் இதுதான்யோசனை நாம் சற்குணும்பிகை யிருக்குமிடம் போகலாம். ஆரடி தோழிகளே?

தோழி:—அம்மா வந்தனம் புரிகின்றோம் யென்ன விசேடம்?

பங்குஜவல்லி:—அடி தோழிகளே எனது அக்காளுக்கு என்வரவை தெரியச் சொல்வீர்.

தோழி:—அப்படியே சொல்லுகிறோம் அம்மா நமது வேந்தனிட இரண்டாவது மனைவி துவாரத்தில் வந்திருக்கிறார்.

சற்குணும்பிகை:—ஆ! ஆ! அப்படியா என்னைதேடி இந்த இராத்திரிக்காலத்தில் வரவேண்டியக்காரணமேது கூடியசீக்கிரத்தில் யழைத்துவருவீர.

தோழி:—அப்படியே யழைத்துவருகிறேன் அம்மா தங்களையழைத்துவரும்படி சொன்னார் கூடியசீக்கிரத்தில் வருவீர்.

பங்குஜவல்லி:—இதோவருகின்றேன் அக்கா இதோ வந்தனம்.

சற்குணும்பிகை:—அம்மா தங்காய் இதுகாலபெரியந்தம் இந்த பாதகியை தேடாமல் இந்த இராத்திரிகாலத்தில் தேடி வரவேண்டிய காரணமேது அதை தெரியச்சொல்லும்.

பங்குஜவல்லி:—அக்கா நான் யேதென்றுசொல்லுவேன் நான் கடந்த சங்கதிகளை மனம் தாளாமல் சொல்வேனுகில் சக்கா

ளத்திபொச்சுருப்பென்று நினைந்திடுவீர் அப்படி எண்ணமிடாமல் மனப்பூர்த்தியுடன் கேழ்ப்பீராகில் யான்சொல்லுகிறேன்.

சற்குணம்பிகை:—அம்மா நீயேதக்கும் துயர்படாமல் சொல்வீர்.

பங்குஜவல்லி:—அக்கா நமது தவப்புதல்வன் நேற்றியதினம் நமது நாயகரிடம்சென்று பாலக்காடென்னும் காட்டைகேட்டு உத்திரவுபெற்றுக்கொண்டு கூலி ஆட்களைவிட்டு வெட்டும்படி செய்ய கூலிகள் வெட்டும்போது அங்கு பூதம் வெளியாகி உத்தமகுண சீலனுகவும் தலைப்பிள்ளையாகவும் இருப்பவனை பலியிட்டால் ஆறு அண்டா பொருள் கிடைக்குமென்றுசொல்ல நமது நாயகன் அதற்கு சம்மதித்து நமது பாலகனை பலிகொடுக்க நாளையதினம் எத்தனமிட்டிருக்கிறார் ஆகையால் தாங்கள் நமது புதல்வனை அழைததுக்கொண்டு இந்த இராக்காலத்தில் மறுதேசம்சென்று இருந்தால் நாயகன் பாலகனை பார்த்து ஓடிப்போய்விட்டானென்று யெவரையாகிலும் பலிகொடுப்பார் பிறகு நமது நாட்டிற்குவந்துசேரலாம் இதுதான் எனது எண்ணம்.

சர்குணம்பிகை:—அய்யோ சிவமே இப்படியும் பிரமன் என் தலையிலெழுதி இருப்பானு புத்திரனில்லையென்று பெரும் தவம் புரிந்தாரே இப்போது கொல்லுவதற்கு எப்படி மனமிட்டார் ஆனாலும் பெரிதல்ல அம்மா பங்குஜவல்லி நாங்களிருவரும் நீ சொல்லுகிறதுபோல் யேதும் தடையின்றி நடக்கின்றோம் ஆனால் நீ என் செல்வப்பாலகன் உயிரைக்காற்றப்படியால் நீதான் யென் குலதேவதை எனவாழ்த்தி நான் இதுசமயம் போவது நிக்ஷபமென்று தைர்யமொழிச்சொல்லி பங்குஜவல்லியையனுப்பிவிட்டு கொஞ்சம் திரவியமெடுத்துக்கொண்டு தனது புதல்வனைப்பார்த்து அடா என் செல்வமே கட்டிக்கரும்பே நான்பெற்ற அரும்பே நாம்இப்படிக்கொற்ற தினத்தில் அரண்மனையிலிருக்கலாகாது அடுத்த நாட்டில் உனது மாமன்வீடிருக்கிறது அங்கு சென்று நமது குறைகளைச் சொல்லி அவரால் வேண்டிய ஆதானைப்பெற்று வருவோம் வாடா யென்செல்வமே.

மதனசேகரன்:—அம்மா! என்னைப்பெற்றதாயே நான் தந்தை யிடம் பாலக்காட்டைப்பெற்றுக்கொண்டு அதைவெட்டும்படி ஆள்களை விட்டிருக்கின்றேனே இதற்கேதுசெய்வேன் ஆனால் தாய்மொழிக்கு மறுமொழிகூறலாகாதென அநேக சாஸ்திரம் சொல்லி இருப்பதால் நான் வரயேதும் தடையில்லையெனச் சொல்லி உடனே இருவரும் புறப்பட்டு அந்நகரத்தைவிட்டு காடு மலை வனம் வனாந்திரம் கடந்தும்போகும் சமயத்தில் சூரி யன் உதித்து பன்னிரெண்டு நாழிகை ஆனவுடனே இருவரும் பெரும் கானகத்தில் வந்து நின்றார்.

சற்குணாம்பிகை:—அடா என்கண்மணியே நான் நடக்கசாத்தி யப்படமாட்டாது எந்தனுக்கு நாவறட்டுகிறது ஆகையால் நான் இந்த ஆலவிருக்ஷத்தின்கீழ் தங்கியிருக்கிறேன் நீ சென்று ஜலம்தேடிக்கொண்டுவந்தால் என் ஆவிநிற்கும் இல்லாமல்போ னால் நான் நடக்கமுடியாதென்று சொல்லி மரத்தடியில் தங்கிவிட்டாள்.

மதனசேகரன்:—அம்மா என்னை அருந்தவம்புரிந்து ஈன்றதாயே இதோ அரைவினாடியில் ஜலம்கொண்டுவந்து தருகிறேன் நீ யேதுக்கும் துயர்படாமல் இங்கு குந்தியிருப்பாய் அம்மணி.

சற்குணாம்பிகை:—அப்படியே இருக்கின்றேன் கூடியசீக்கிரத்தில் வருவாயடா யென்செல்வமே.

மதனசேகரன்:—நாம் நமது தாயாரைவிட்டு தனியாக வெகுதூ ரம் வந்து பார்த்தும் எங்கும் ஜலவோடைக்காணவில்லை இனி என்னசெய்வது இதோ வோர் திட்டிக்கதவுகாண்கின்றது அ தின் மார்க்கமாகினும் சென்றுபார்ப்போம் எனசசொல்லி (குஹைக்குள் செல்லுதல்) ஆ! ஆ! நலம். இந்த குகைதன் னில் வந்துபார்க்க மகா விசித்திரமாக இருக்கிறது. இது எந் நாடோ! அல்லது தேவர் வசிக்குமிடமோ! குபேரன் வா சம் செய்யப்பட்ட கொலுமண்டபமோ! ஆ! ஆ! யென்ன அழகு என்னகாந்தி சுவர்களெல்லாம் தங்கமென்னும் மண் ணால் பச்சை, வைடூர்யம், மரகதம், கோமேதகமென்னும் கற்களால் பொதித்து ரவைகளை பிளந்து கதவுகளை ஜோடித்

திருக்கிற அழகே அழகு. இதுபோல நாட்டை நாம் எங்கும் கண்டதில்லை இதுவுமல்லாமல் இங்கிருக்கப்பட்ட கதலி, பெலா, வாழை, மா, எலந்தை, தேங்கு இச்செடிகளுடைய அழகே அழகு, யென்னவரிசையாக இருக்கிற உன்னதம் பார்தையா, ஆ! ஆ! இதோ இருக்கப்பட்ட பூங்காவனத்தின் விந்தையே விந்தை நமக்கு நேராக மல்லிகை முல்லை, காட்டு மல்லி, குண்டுமல்லி, குரிவேர், சவனம், மருவு, மரிக்கொழுந்து செண்பகம், நந்தியாவட்டை இப்படிக்கொற்ற மேன்மையான புஷ்பங்கள் பூர்த்து கமகமவென்னும் வாசனைவீச காலத்திற்கு தக்கபடி தென்றல்வீச சந்திரன்காய மகாகுளிர்ந்த நிழல் செடிகள்தர இந்த வைபோகத்தில் பறவைகள் கும்பல்கும்ப லாக செடிகள்மீது குந்திருக்க இராஜபரவையாகிய குயில் கீதம் பாட மற்ற பறவைகள் ஆனந்தமாக கேழ்க்க இதுதான் இவ்வ ளவு உன்னதமென்றுபார்த்தாலோ ஆ!ஆ! அதோ பார்த்தாயா! மயிலானது தனது இறகை விறித்து ஆடும் உன்னதமே உன் னதம் இவ்வளவு அழகுடைய ஜீவஜெந்துவானபடியால் அந்த சிவசுப்பிரமண்யக்கடவுள் தனக்கு வாகனமாக்கிக்கொண்டார் இல்லாவிட்டால் இதரமான ஜந்துக்கள் மீது மனம் கொள்ள மாட்டாரா இவ்வளவு ஆனந்தத்துடன் இருக்க இதோ இருக் கப்பட்ட தடாகத்தை பார்த்தாயா இதில் செந்தாமரைப் புஷ் ப்பங்கள் பூர்த்திருக்கிறதில் வண்டுகள் அதினிடமிருக்கப்பட்ட தேனை அடைவதற்கு என்ன கீதத்துடன் போகின்றது ஆ! ஆ! இந்த ஜலத்தை நாம் யெப்படிவர்ணிப்பது இதில் இந்தத்தோ ட்டத்தில் வாழப்பட்டதோட்டக்காரன் இளநீரை உடைத்து ஓடையாக்கி இந்த தடாகத்தில் விட்டானோ எதும்தெரியேன் ஆனால் இந்த ஜலம் போவதற்கு இடம் காணோமே அப்படி யிருக்க ஒர்விதமான துற்வாசனைக்கு இடம்தருமே அதுவும் கிடையாது ஆனல் நாம் இன்னம் முன்னுக்குச்சென்று அவ் விடத்திலிருக்கப்பட்ட வேடிக்கையெல்லாம் பார்த்துவிட்டு திரும்பி வரும்போது நமது தாயாருக்கு ஜலத்தையெடுத்துக் கொண்டு போகலாம் இதுதான் எண்ணம்.

ஆ!ஆ! இது என்ன ஆச்சர்யம், இவ்வளவு அழகுடைய இட த்தில் தனியாகவோர் மாதுசயனித்திருக்கவேண்டிய காரண மேது நாம் வருகின்ரோமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்

கின்றாளோ நாம் போகலாகாது ஒரு சமயம் நம்மை என்ன
செய்யதுணிகுராளோ பூதமோ, பேயோ, அல்லது இந்தயிடத்
தில் வாழப்பட்ட வனதேவதையோ ஏதும்தெரியேன் ஓ சிவ
பெருமானே தனியாகயிங்கு யான் துயரப்பட நலமாகுமா
சி!சி! பேதைமனதே ஏன் இப்படி தயங்குகின்றாய் முன்னிட்ட
காலைப் பின்னிடலாகுமா வரும்விதிவழிதங்காது ஆனால் நாம்
யருகில்சென்று பார்ப்போம் ஆ! ஆ! இதென்ன ஆச்சரியமா
கயிருக்கிறது இம்மாது தேவகன்னிகையோ வனதேவதை
யோ ரம்பை ஊர்வசி மேனகா திலோத்தமா யென்னும் மாதர்
கள் இம்மாதுக்கு நிகரல்ல மங்கைலக்ஷிமியோ மஹநீயர்
பூஜிக்கும் உமாதேவியோ என்ன அழகு என்ன காந்தி என்ன
தேஜஸ்ஸு ஆ! ஆ! இம்மாதைப்படைத்த அப்பிரமதேவன்
நமக்கென்றுதானோ உருவெடுத்து அமைத்தானோ ஆ! இது
என்ன ஆச்சரியம் ! இம்மாது சயநித்திருப்பதாகயெண்ணமிட்
டோமே சபாஷ் நன்றாயிருக்கிரது(யோசனை இல்லாக்காரியம்
மோசத்திற் கிடமென்பது திண்ணம்.) நாம் பார்க்காதப்படிக்
கே இப்படியெல்லாம் புகழ்ந்தோம் அய்யோபாவம் யெப்பாவி
கள் இம்மாதைக்கொண்டுவந்து இவ்விடத்தில் கொலைசெய்து
விட்டுசென்றாரோ அச்சண்டாளரைக் யான்கண்டால் எனது
வாளுக்கு இரையிடுவேன் சி! சி! அப்படி கொலைசெய்திருந்
தால் உதிரம்பொங்கி துர்வாசனையுடனிருக்குமல்லவா இல்லை
யே யேதோ சூதுமார்க்கமாய்தோற்றுகிறது ஆனால் இம்மா
தின் சுற்றிலும் பார்ப்போம்.

ஆ! ஆ! இவளருகில் ஓர் மைச் சிமிழும் வெள்ளிப்
பிரம்பும் சந்திராயுதமு மிருக்கிறது ஆனால் இவளை எப்படி
எழுப்புகிரது போய்ப்பார்க்கலாம் சரி இத்தன்மைதான் முண்
டத்திற்கும் சிரசிற்கும் தடவி இரண்டுமொன்றாகச் சேர்த்து
வைத்து பிரப்பால் தட்டிப்பார்க்கலாம் அப்படி யெழுந்தால்
எழுந்திருக்கட்டும் எழுந்திருக்காமல்போனால் பிறகு யோசனை
செய்யலாம் எனச்சொல்லி மைதீட்டி பிரம்பினால் தட்டிவிட்டு
தான் வொளித்துக்கொண்டான்.

அம்பிகை:—ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம் நம்மைகொண்டுவந்த
பூதம் இதுகாலமட்டும் சூரியன் அஸ்தமித்தபிறகு இவ்விட

த்திற்குவந்து தான்கொண்டுவந்த கனிவர்க்கங்களை யென் முன்னில் வைத்துவிட்டு பிறகு என்னை எழுப்புவார் அப்படி இருக்க இச்சமயத்தில் இங்குவந்து என்னை எழுப்பினதெவர். ஆ! இப்படியும்பரியாசம் செய்யலாகுமா? நீர் என்னை சிறை யெடுத்துக்கொண்டுவந்தது முதல் இதுகாலம் யென்முன்னில் நிற்காமல் வொளிந்ததுண்டா? ஓடிவருவீர்! ஓடிவருவீர்!! (யெனச்சொல்லிக்கொண்டு தியங்கி நின்றாள்.)

மதனசேகரன்:—ஆ! ஆ!! அரக்கன் கொண்டுவந்ததுபோல்சொல் லுகின்றாள் நாம் வொளித்திருக்கலாகாது. நேரில்சென்று விசா ரிபபோம்.—ஓ மாதரசே! இக்கரேமான கானகத்தில் விசித்தி ரமண்டபம் எற்படுத்தி இதில் நீ தனித்திருக்கக் காரணமேது, உன்னை மாலையிட்ட நாயகன் எங்கே, உன் தேசமெது, உன் பெயரென்ன? எனக்குத்தெரியப்படச் சொல்லும்.

அம்பிகை.—ஆ! ஆ! இவர்யார் மாயனோ, மாது சரஸ்வதி நாய கனோ, மங்கைபார்வதி நேயனோ, அல்லது மாரனோ, தீரனோ, வொய்யாரனோ, கெம்பீரனோ, சூரனோ, வீரனோ, இவ்வளவு அழகுடன் பிரமதேவன் எப்படி உண்டாக்கினானோ. நாம் இப் படி துக்கசாகரதில்மூழ்கி இருப்பது தெரிந்து பிரம்மதேவன் நம்மிடமனுப்பிவிட்டானோ எதும் தெரியேன். ஐயோ கொ டியபாதகனாகிய இராக்ஷதன்வந்தால் இவரையும்கொன்று நம் மையும் இம்சைசெய்குவான். நாம் அவன் வாராமுந்தி அவர் கேட்ட வினவிற்கு விடைதந்து பிறகு நம்மிஷ்டத்தை பூர்த்தி செய்யலாம். ஐயா நான் இருப்பது விந்தியபுரம் என் தந்தை யின்பெயர் காந்த பூபன் அன்னவருக்கு வெகுநாளாய் புத்திர பாக்கியமில்லாமல் பரமன்கிருபையால் நான் ஜனித்தேன். என க்கு அம்பிகையென்று நாமதேயமிட்டு தினமொருமேனியும் பொழுதொருவண்ணமாக வளர்ந்துவரும் சமயத்தில் நான் புஷ்பவதியாகி அந்தப்புரமிருக்கும் காலத்தில் யான் தனியாக நந்தவனமடைந்து சிவபூஜைக்கு புஷ்பம் பரித்துக்கொண்டு வரும்போது இந்தரக்கன் என்னைக்கொண்டுவந்து இந்த குகைதனில் வைத்து தான் வெளியேபோகும் சமயத்தில் என் சிரசை அறுத்துவேறு செய்துவிட்டு அன்னவன் கானகம் சென்று ஆகாரம் புசித்து எனக்கு காய்கனியைக்கொண்டு

வந்து தந்து சந்தோஷ மொழிகளாடி போவது. ஆனால் அக்கொடிய சண்டாளன் வரும்சமயமாச்சுது. ஆகையால் உனது பேரும் நாடும் தாய்தந்தையர் பெயரும் சொன்னால் என் மனம் சந்துஷ்டியடையும்.

மதனசேகரன்:—ஓ மாதரசே! எனதுநாடு அமராபுரி தந்தை பெயர் கருணாகரன் எனது பெயர் மதனசேகரன் ஆனால் உன்னைக்கண்டு உன் துயரந்தீர்க்காதப்படிக்கி நான் போவேனாகில் இராஜகுலத்திற்கு ஈனமல்லவா ஆகையால் நீ இன்று இராத்திரிக்கு அந்த அரக்கன் வந்தவுடனே அன்னவனுடன் சந்தோஷமொழிகளாடி அவன் உயிர் நிலைதனை தெரிந்துக்கொண்டு நாளையதினம் நான் வந்த உடனே தெரிவித்தால் அந்தரக்கனை கொன்றுவிட்டு உன்னை என்னிருப்பிடம் அழைத்தேகின்றேன்.

அம்பிகை:—ஐயா! உமதிஷ்டப்படி தெரிந்துச்சொல்லுகிறேன் ஆனால் நீர் உமதுமேல்குட்டைதனை இந்த பூமியில் பரப்பினால் யான் சயனித்துக்கொள்கிறேன், என்னை இந்த சந்திராயுதத்தால் வெட்டினவுடனே உதிரத்தை குட்டையில் துவட்டிக்கொண்டு நீர் எந்தவிடத்தில் தங்கி இருக்கின்றீரோ அந்தவிடம் சென்று பிரித்துப்பாரும்; இதுமத்தியில் அவிழ்த்துப்பார்க்கலாகாது.

மதனசேகரன்:—அப்படியே செய்கிறேன்.

(இங்கு அம்பிகைதனை வெட்டி தள்ளிவிட்டுப்போகிறான்.)

மதனசேகரன்:—நாம்வந்து வெகுநேரமாயிற்று நமது தாயார் காற்றுக்கொண்டிருப்பாள். ஆகையால் நாம் இந்த ஜலத்தை எடுத்துக்கொண்டுபோய் தாயாருக்கு நடந்த சங்கதியெல்லாம் தெரிவித்து ஓர் விடத்தில் இருக்கும்படி திட்டம்செய்துவிட்டு இம்மாதிடம் வந்து சங்கதிதெரிந்து பிறகுதாயாரை ஓர் நாட்டில் விட்டு நாம் நாடி இருக்குமெண்ணத்தை பூர்த்தி செய்துக்கொள்ளலாம்.

சற்குணம்பிகை:—ஆ! ஆ! இதென்னகாலக்கொடுமை ஜலம்கொண்டுவருவதாக சென்றபாலகன் இதுவரைக்கும் காணோமே!

எங்குசென்ருனே, ஜலமில்லாமல் அலைகின்ருனே, கானகத்தில் பூதமேதாகிலும் கண்டு வதைப்புரிந்ததோ, ஐயோ தெய்வமே கொண்ட கணவன் பாலகனைக்கொல்லயெண்ணமிட்டானென்று சக்காளத்தியின் மொழிகேட்டு பாலகனை அழைத்துக் கொண்டு காட்டின்மார்க்கமாக வரும்பொழுது பாழும் தாக மெனக்கெடுக்க பாலகனைக்கண்டு தாகமெனச்சொல்ல பாலகன் ஜலம்கொண்டுவருவதற்கு சென்ருனே இதுவரைக்கும் காணுமே ஐயோ சிவபெருமானே புத்திரசோகமடைய இவ்வுடலையெடுத்தேன் சிவசிவா இனி என்னசெய்குவேன்.

மதனசேகரன்:—ஆ! ஆ! நமது தாயார் நாம் வரவில்லையென்று துக்கமடைந்து சோகத்துடன் பூமிமீது அயர்ந்து படுத்துக் கொண்டிருக்கின்ருள் நாம் சீக்கிரமாகப் போகாவிட்டால் சோக மதிகமடைவாள்போல் காட்டுகின்றது துரிதமாய் போகுவோம். அம்மா! இதோவந்தேன்! எழுந்திரும்.

சற்குணம்பிகை:—அடா என் கட்டிக்கரும்பே யென்னை இப்படி அலையவிட்டு நீ எங்குசென்ருயடா ஜலமகப்படாமல்போனல் வந்துவிடலாமே கண்மணியே.

மதனசேகரன்:—அம்மா உனதுதாகம்தீர்க்க ஜலம்தேடிவரும் சமயத்தில் ஓர் அபூர்வமான விந்தையை என்கண்ணுலேகண்டு திரும்பிவர மனம் வராமல் பதைத்து தியங்கிகின்றேன்.

சற்குணம்பிகை.—அடா என்செல்வமே! அப்படிக்கொற்ற அபூர்வமான விந்தையாவது என்ன தெரியச்சொல்லடா.

மதனசேகரன்:—அம்மா! அதைச்சொல்லுகிறேன்கேளும். எப்படியென்ருல் நான் ஜலம் தேடிக்கொண்டுபோகும் சமயத்தில் அடர்ந்தகாட்டில் நாலு பக்கத்திலும் மதில்சுவர்யெழுப்பி சுற்றிலும் அகழிருக்க அதைக்கண்டு ஆச்சரியமுற்று நிதானிக்க ஓர் சிரியகதவுதென்பட்டது. அதின்வழியாக உட்சென்றுப் பார்க்க மகாவிசித்திரமாகிய பெத்தை மேடைகளும் கூடகோபுரங்களும் இருக்கக்கண்டேன் இப்படியிருக்க மத்தியில் தங்கத்தை உருக்கி சிலையாக ஊத்தினதுபோல் ஓர் மாதை இரண்டு துண்டமாகவெட்டி கிடக்கக்கண்டுமனதில் திகிலடைந்து மெய்

மறந்து அம்மாது அருகிலிருந்த மைச்சிமிழ்தனை எனது புத்தி கூர்மையால்எடுத்து முண்டத்திற்கும் சிரசுக்கும் தடவி இரண்டுமொன்ருய்வைத்து சமீபத்திலிருந்த வெள்ளிப்பிரம்பால் தட்டி எழுப்பினேன் அம்மாது எழுந்து தனது வரலாற்றைக்கூறி தன்னைப் பூதம்கொண்டுவந்ததாகதெரிவித்தாள். நான் அம்மாதுடன் அவனுடைய உயிர்நிலைதனை தெரிந்துசொல்லும்படிச் சொன்னேன் இதையெல்லாம்கேட்டு அம்மாது நாளையதினம் உதையத்திற்கு வந்தால் சொல்லுகிறேன் எனச்சொல்லி எனது மேல்குட்டைதனை பூமியில்பரப்பி அதின்மேல் அம்மாது சயனித்து அருகிலிருந்த சந்திராயுதமெடுத்து சிரசு வேருக்கி அதில் வரும் உதிரத்தை குட்டையில்துவட்டிக்கொண்டு இதை எங்கையும் பிரிக்காமல் நீ இருக்குமிடம் சென்று பிரித்துபாரெனறு சொன்னுள் எனச்சொல்லி அந்த குட்டைதனை தாயார்கையில் கொடுத்தான்.

சற்குணப்பிகை:—அடா கண்மணியே! ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம் இந்தகுட்டையை அவிழ்த்துப்பார்க்க எல்லாம் இரத்தினங்களாக இருக்கிறது. நாம் இருக்கும்படியான கஷ்டமிலை தெரிந்து நாம் ஜீவிப்பதற்கு இவ்வளவு உபகாரம்செய்த மாதைவிட்டுப்போகலாகாது. ஆகையால் நாம் இந்த இராத்திரிக்கு இக்காட்டில் வாசம்செய்து உதையமானவுடனே நீ அங்கு சென்று அம்மாதை அழைத்துவருவாயடா செல்வமே.

மதனசேகரன்:—அப்படியே செய்கிரேன்.

---

## இராக்ஷதன் தர்ப்பார்.

இராக்ஷதன்:—ஆ! ஆ! நாயகி எழுந்திரும் ஆ! இதென்ன ஆச்சரியமாக இருக்கிறது யென்றுமில்லாத நரவாடை இன்று வீசக்காரணமேது மாதரசே.

அம்பிகை:—நன்ருய்த்தெரிவித்தீர் ஈ எரும்பு நாடாத இடத்தில் என்னைக்கொண்டுவநது வைத்ததுமல்லாமல் பொய்குறியொன்றுச்சொல்லுகிறீரே இதுவேபோதும் நீர் தின்றுவந்த பாமி

சத்தின் வாடையல்லவா இப்படி உம்மைச் சொல்லச்சொல்லு
கிறது.

இராக்ஷதன்:—ஆ! ஆ! ஆ! ஆ! வெகு சந்தோஷம்மாதே இத்தனை
நாளாக உனது முகம் சந்திரனைக்கண்ட செந்தாமரைக்கமல
மெப்படி மலர்ந்திருக்குமோ அப்படி இருந்த முகமானது
இன்று சூரியனைக்கண்ட செந்தாமரை எப்படி வதங்குமோ
அதுபோல முகமானது வாட்டத்துடன் இருக்கக்காரணமேது
உனது தாய்தந்தைகளை நினைந்து துக்கமடைந்தாயோ அதின்
விபரத்தை தெரியச்சொல்லு மாதரசே.

அம்பிகை:—ஐயா என்னமொழிக் கூறுகின்றீர் தாயும் தந்தை
யும் சுற்றமும் நீரன்றி மற்றெவருண்டு இது எல்லாம் துக்க
மல்ல என்னவென்றால் நீர் கானகம்போகும்காலத்தில் என்
னை இரண்டு துண்டமாகசெய்துவிட்டுபோகுறீர். அச்சமயத்தில்
காட்டில் யாராகிலும் உனக்கு விரோதமடைந்தவர் உம்மை
கொன்றுவிட்டால் நான் எப்படிபிழைப்பது இதை எல்லாம்
எண்ணி மனக்கவலையடைந்து துக்கத்தில் மூழ்கி நிற்கின்
றேன் தவிர மற்றது ஏதும் துக்கம்கிடையாது.

இராக்ஷதன்.—ஆ! ஆ! நன்றாகச்சொல்லிவிட்டாய் என்னைக்கொல்
வதற்கு அரிஹராதி பிரம்மாதிகள்வந்தாலும்கொல்லமுடியாது
உன் அருகிலிருக்கப்பட்ட சந்திராயுதமெடுத்து பூங்காவனத்
தின் மத்தியில் இருக்கப்பட்ட தாளிப்பனைமரத்தை இரண்டு
துண்டமாகவெட்டிப்பார்த்தால் அதினடுவில் ஓர் தங்கக்
கிண்ணமிருக்கிறது அதை எடுத்து கையில் பிடித்தால் அச்சம
யத்தில் எனக்கு தலைபாரமுண்டாகும் இதை தெரிந்து அரை
நொடியில்வந்து அக்கொடியசண்டாளனை வாட்டாமல் விடு
வேனோ இதுயெல்லாம்தெரியாமல் துயரமடைவது நலமல்ல.

அம்பிகை:—ஐயா! இப்போது நீர் சொன்னபிறகு என் மனதிற்
கு சந்தோஷமாச்சுது இனி எனக்கு என்னபயமிருக்கிறது.

இராக்ஷதன்:—ஓ நாயகி! உதயமாக இனி ஓர் ஜாமமிருக்கிறது.
யான் கானகம்செல்லுகின்றேன் வெகு பத்திரமாயிரு என்றுச்

சொல்லி அம்மாதை இரண்டுதுண்டம்செய்துவிட்டு இராக்ஷ தன் கானகம்போய்விட்டான்.

மதனசேகரன்:—அம்மா இச்சமத்தில் சூரியனும் உதயமாகிவிட் டது நான்போய்வருகவிடைத் தருவாய் யென்னம்மணி.

சற்குணாம்பிகை:—அடா என்கண்மணியே நீ ஏதும் துயசமில் லாமல்சென்று பரமனுடைய திருப்பாதத்தை மனதில் நாட்டி நீ எந்தக்காரியத்தைசெய்தாலும் ஏதும் குறைவில்லாமல் கைக் கூடுமடா செல்வமே.

மதனசேகரன்:—அம்மா உனதிஷ்டப்படியே பரமனை தியானித் துக்கொண்டு அக்காரியத்தை செய்கின்றேன் ஆனால் போய் வரட்டுமா எனையீன்ற அன்னையே.

சற்குணாம்பிகை:—அப்படியே போய்வருவாயடா கண்மணியே.

மதனசேகரன்:—ஆ! ஆ! நாம் எப்படிவெட்டிவிட்டுப்போனமோ அதுபோலாகவே இருக்கிறது இனி நாம் எழுப்புவோம் ஓ மாதரசே எழுந்திரும்.

அம்பிகை:—ஐயா இராஜபுதல்வனே நேற்கையதினம் இராத்திரி இராக்ஷதன் வந்தவுடன் நீர் சொன்னபடி வினயத்துடன்கேட் க அன்னவன் சந்தோஷமடைந்து மாதே என் உயிர்நிலை இந்த பூங்காவனத்திலிருக்கும் தாளிப்பனையை வெட்டித்தள்ளிப்பார் க்க மத்தியில் தங்கமயமாகிய பரணை யொன்று இருக்கிறதாம் அதை எடுத்துதிரந்து பார்த்தால் அதில் ஓர்வண்டு இருக்கின்ற தாம் அதைப்பிடித்துக்கொன்றால் அவன் உயிர்போகுமென்று உறுதியாகச்சொன்னான்.

மதனசேகரன்:—ஆ! ஆ! மாதே இது உண்மைதானா?

அம்பிகை:—நிக்ஷயந்தான்! நிக்ஷயந்தான்! அதிவேகமாக அரக்க னைக்கொன்றுவிட்டு என்துயரத்தைத்தீர்த்து தங்கள் இருப்பி டம் அழைத்துச்செல்வீர்.

மதனசேகரன்.—ஓ மாதரசே! இதோ பார்த்தாயா அந்த அரக்க னுடைய உயிர்நிலை என்கையில் பிடித்துக்கொண்டேன் அண்ட

சராசரம் நடுங்கும்படி வேகமாய் கோபத்துடன் வருகின்றான் சற்றுநேரம் மறைந்திருப்பாய் மாதே.

அம்பிகை:—அப்படியே இருக்கின்றேன் நாயகா.

இராக்ஷதன்:—ஆ! ஆ! அக்கொடியசண்டாளி சந்தோஷமாக என்னைக்கேழ்க்க அன்னவளுக்கு என் உயிர்நிலை தெரிவிக்க இச்சமயத்தில் வாட்ட யெத்தனமிட்டாள்போல் காட்டுகின்றது. தலைவலிக்கின்றதே உயிர்வண்டை பிடித்துக்கொண்டான் அடாபயலே அவ்வண்டை என்கையில் கொடுத்துவிடு உனக்கு அம்மாமாதையும் வேணடியப்பொருள்களைத்தருகின்றேன்.

மதனசேகரன்:—அடா இராக்ஷதப்பயலே துஷ்டனை சிஷ்டபரிபாலனம் என்னும் பழமொழி தெரியாதா ஆனபடியால் உன்னைவிட்டால் இப்படி அனேகங்கோடி மாதர்களைக்கொண்டுவந்து வதைப்புரிவாயடா உன்னைக்கொல்லாமல்விடலாகாது.

இராக்ஷதன்:—ஆ! ஆ! நான் எவ்வளவோ இரக்கத்துடன் சொல்லியும் பதருகிராய் இதோ அரைவிநாடியில் எனது கையிலிருக்கும் கதையால் உன்சிரசைச் சிதரச்செய்குறேன்பாரடா.

மதனசேகரன்:—அடா பயித்தியனே நீயா என் சிரசை சிதரச்செய்யப்பட்டவன் உன்னை எமனுக்கு விருந்துசெய்ய நான் வந்திருக்கின்றேன் மிஞ்சிவராதே இதோ உனக்கு இரண்டு கால்களையும் ஒடித்துவிட்டேன் இனி எப்படி நடந்துவருவாயடா.

இராக்ஷதன்:—ஆ! ஆ! ஆனைக்கொழுத்தால் தானே மண்ணை வாரிக்கொட்டிக்கொண்டதுபோல் நானே என் புத்தியை அல்பமாக்கிவிட்டேன் இனி நாம் சும்மாயிருந்தால் நலமல்ல இந்தக் கதைதன்னை அவன்மீது விட்டெரிந்து அவனைக்கொல்லாமல் விடலாகாது.

மதனசேகரன்:—அடா மனிதரைப்பிடிங்கித்தின்னும் கொடிய சண்டாளா இதோ உன் ஆவியை எமனுக்கு விருந்துசெய்கின்றேன் உனது குலதேவதைதன்னை தியானம் செய்துக்கொள்வாயடா பயித்தியனே.

இராக்ஷதன்:—அடா பயலே பதராதே! பதராதே! சிரசை துண்டம் செய்யாதே அம்மாதை நீயே அழைத்துச்செல்வாயடா உன்னுடன் அனுப்புகிறேன் என்னை விட்டுவிடடா.

மதனசேகரன்:—அடாபயித்தியக்காரனே எமன்கையில்சிக்கிய உயிர் மறுபடியும் நம்மிடம் வருமென்பது நிக்ஷயமா? இதோ உன் சிரசைக்கிள்ளிவிட்டேன் ஆ! மாதரசே உன்னைக்கொண்டுவந்து சிறைவைத்ததுமல்லாமல் சிரசைக்கண்டித்தும் சாவுக்குறியுடன் செய்த கொடியசச்சண்டாளனை யமனுக்கு விருந்து செய்துவிட்டேன் இனி இவனை யெடுத்து தகனம் செய்துவிட்டு நமதிருப்பிடம் வருவாயடி மாதே.

அம்பிகைசோல் விருத்தம்.

எட்டால் யெழுதப் படாதந்த நாளையி லெனதுதுயர்
கேட்டால் இரண்டு செவிக்கடங்கா கிள்ளை கேழ்புனத்தில்
கோட்டானை மின்குத்தக் கொம்பானை பின்குத்தக் கோதைத்துயர்
மீட்டாமற் கையோ பிறரை விரும்புவது.

நாயகா எனது துயரை தீர்த்து யெனக்கு பிராணபிச்சைத் தந்த நீரே எனக்கு நாத நன்றி வேருண்டா நீர் அழைக்க நான் வாரேன் என்றுச்சொல்ல என்நாவருமா அப்படியே போகலாம். ஆனல் வோர் விண்ணப்பம் அதாவது நான் புஷ்பவதியானது முதல் இதுவரைக்கும் சிறையடைந்திருந்தேன் இச்சமயத்தில் பகவான் உம்மைக்காட்டினர் ஆகையால் நாமிருவரும் இங்கு விவாகம் செய்துக்கொண்டு உமதிஷ்டப்படிப் போகலாம் நாதா.

மதனசேகரன்:—மாதரசே! எனது தாயாரை காட்டில் விட்டு யான் உனது துயர் தீர்க்கவந்து இப்போது தாயார் இல்லாதப்படிக்கு உம்மை விவாகம் செய்துக்கொண்டால் நலமாகுமா என் தாயார் சம்மதிக்காதப்படிக்கி யான் விவாகம்செய்யேன்.

அம்பிகை:—நாதா! விவாகத்தில் எட்டுவித மிருக்கின்றது ஆனதுபற்றி நாமிருவரும் முகதரிசனம் செய்து சம்மதமடைந்து ஒருவற்கொருவர் கணையாழி மாற்றிக்கொள்வது காந்தர்வ விவாகமெனச் சொல்வார் இதுவே தேவாதி தேவருக்கும்

வேந்தருக்கும் உண்மையான திவ்விவாகம் செய்துக்கொண் டால் நலமாகும்.

மதனசேகரன்:—உனதிஷ்டப்படி கணையாழியை மாற்றிக்கொள் வோம், இனி இந்த வுப்பரிகையைபூட்டிவிட்டு நாம்போகலாம் வருவாயடி மாதுரத்தினமே.

அம்பிகை:—ஓ பரம்பொருளே தேவாதிதேவா நான் கற்புபிசகா தது உண்மையானல் இந்த உப்பரிகையை இதரமானவற்கு பூமிபோல் தோற்றவேண்டியது, எனது நாயகன் யெக்கா லத்தில் வந்துபார்க்கின்றாரோ அக்காலத்தில் அவர் நேத்திரத் திற்கு மாத்திரம் தோற்றவேணும். நாயகா இனி போகலாம் வருவீர்.

மதனசேகரன்:—போகலாம் வருவாயடி மாதரசே.

சற்குணாம்பிகை.—ஐயோ தெய்வமே எனதருந்தவப் புதல்வ ன் அரக்கனைக்கொன்றுவிட்டு குஹைறதன்னி லிருக்கப்பட்ட மாதை கொண்டுவருகின்றேன் எனச்சொல்லி போனமகன் இன்னம்வரவில்லையே,ஏது ஆபத்துகள் நடந்ததோ, அரக்கன் கண்டுஇவனை கொன்றுவிட்டானே, ஓ தேய்வமே புத்திரன் நம் மைக்காப்பாற்றுவான் என்று பெருமனமிட்டுக்கொண்டு நாத னை விரோதமடைந்து இக்காட்டில் பாலகனைவிட்டு நிற்ககால மாச்சுதே இனி இவ்வுடலைவைத்து நான் எப்படி வாழ்வது தெய்வமே.

மதனசேகரன்:—அம்மா ஏன் இப்படி துயரமடைகின்றீர் இதோயான் சொன்ன காரியம் பூர்த்திசெய்துவிட்டு அம்மா ளை அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன் அம்மணி.

அம்பிகை:—அம்மா வந்தனம் செய்கின்றேன்.

சற்குணாம்பிகை:—கல்யாண் அம்மா நீ என் நாடு? இப்படி அரக்கனிடம் அகப்பட்டகாரணமேது? உனது பெயரேது? தெரியச் சொல்லும் அம்மணி.

அம்பிகை:—அம்மா யான் இருப்பது விந்தியபுறம், என்தந்தை பெயர் காந்தபூபன், அன்னவருக்கு புத்திரபாக்கியமில்லாமல்

ஈஸ்வரன் கிருபையால் என்னை ஈன்றெடுத்து யான்யௌவன மடையுங்காலத்தில் அரக்கன் நிரந்தரமாக கொண்டுபோய் இந்த குஹைதனில்வைத்து வெகுஜாக்கிரதையாக இருந்தான். இப்படியிருக்கும்சமயத்தில் தங்களுடைய புத்திரர் சகாயத்தி ஞல் அந்த இராக்ஷதனைக் கொன்றுவிட்டு உமது புதல்வனை காந்தர்வ விவாகம் புரிந்துவந்தபடியால் இந்த குற்றத்தை பொறுத்து ஆட்கொள்வீரென உமது இரு பாதகமலங்களுக் கு வந்தனம்செய்கின்றேன் அம்மா.

சற்குணம்பிகை:—அம்மா! அம்பிகை யான் வெகுபாக்கியசாலி யாகிவிட்டேன் இனி நாம் மூவரும் மறுதேசமடைந்து ஜீவித் திடலாம் வருவாயடி எனது செல்வமே.

அம்பிகை:—அம்மா நாம் என் மறுதேசம்சென்று பிழைக்கவே ண்டியக்காரணம்? என்னை சிறையெடுத்த அரக்கனுடைய கோட்டை தன்னை தங்கள் புதல்வனுக்கு மகுடம்சூட்டி புதிய நாடென பெயர்சூட்டி வாழலாகாதா இதைவிட்டு மறுதேசம் போவது நலமாகுமா,

மதனசேகரன்:—ஒ மாதரசே! நீ சொல்லும்படியான நீதியெல் லாம் உண்மைதான். ஆனல் ஒருவன் சம்பாதித்துவைத்தப் பொருளை நாம் அபகரிப்பது நீதியல்ல. உந்தனைப்பற்றி அவ் வரக்கனைக்கொன்று உன்னை மீட்டிக்கொண்டுவந்தேன், ஆகி லும் பெரிதல்ல இன்னம் சிலதினத்தில் யான் ஸ்வயார்ஜிதமாக சம்பாதித்த காணி பூமியில் ஒர் நாட்டையுண்டுபண்ணி அவ் விடத்தில்யென் சிறிய தாயாரையும் தந்தையும் அழைபித்து அன்னவரை கேட்க்கவேண்டிய வினவெல்லாம் கேட்டு பிறகு உன்னை நால்வறரிய விவாகம் செய்து இன்னட்டை அதன் பிறகு பரிபாலிக்கலாம். இப்போது யெனது தாயார் சொன் னக்கருத்தைப்போல் நடக்கலாம்.

அம்பிகை:—நாயகா! உன் கருத்தைப்போல் நடக்கயேதும்தடை யில்லை. இனி சூரியன் உதயமாக ஒர் ஜாமபொழுதிருப்பதால் நாம் மூவரும் மெதுவாகநடந்து அதோ நமது கண்ணுக்குத் தோன்றும் சோலை வோர் நாடாகதோற்றுகிறது அங்கு சென் று நமது காலத்தைக் கழிப்போம் வருவீர்.

மதனசேகரன்:—அம்மா இம்மாது சொன்ன மொழியெல்லாம் கேட்டனையா இனி நாம் இக்காட்டிலிருக்க நலமல்ல மெதுவாக நடந்து அம்மாது சொன்னதுபோல் அதோ தோற்று நாட்டிற்குச்சென்று ஓர் விடத்தில்தங்கி காலத்தைக்கழிக்கலாம் அம்மணி.

சற்குணாம்பிகை:—அப்படியே போகலாம் வருவாயடா.

மதனசேகரன்:—அம்மணி! இதோ மறுதேசத்திற்கு வந்துவிட்டோம். இனி தங்குவதற்கு இடம் தேடலாம் வருவாய் அம்மா.

சற்குணாம்பிகை:—உனதிஷ்டப்படி தேடலாம் வருவாயடா கண்மணியே.

கமலாபாயி:—ஆ! ஆ! தங்கைமார்களே நாமெல்லோரும் ஜலம் திரட்டிக்கொண்டு வரலாம் வருவீர். இதென்ன ஆச்சரியம் நமக்கெதிராக இரண்டு பெண்பாவைகளும் ஓர் சிறுவனும் மகா துக்கசாகரத்தில் மூழ்கி வருகின்றார். அவரை பார்க்கும்போது இராஜக்குறி லக்ஷணங்கள் தோற்றுகின்றது நாம் நின்று அவர் என்னாடோ எங்கு செல்லுகின்றாரோ அதை விசாரித்து பிறகு நாம் நாடிய காரியத்திற்கு போகலாம்.

இராதாபாயி:—அக்கா நீசொன்னதெல்லாம் உண்மைதான் நமது தர்மபுரிக்கு தக்கபடி தர்மநீதியாக விசாரிக்கவேண்டியது ஆகையால் நீரே விசாரிக்க நலமாகும்.

கமலாபாயி:—அம்மா தங்களைப்பார்த்தால் ஆதி லக்ஷிமிபோல் தோற்றுகின்றது தாங்கள் என்நாட்டிலிருப்பது இந்நாட்டிற்கு வர காரணமேது தெரியச்சொல்வீர்.

சற்குணாம்பிகை:—அம்மா நாங்களிருப்பது இந்நாட்டிற்கு வடமேற்கு நாங்கள் க்ஷத்திரியகுலத்தில் பிறந்தவர் அந்நாட்டில் க்ஷாமகாலமடைந்தபடியால் எதாகிலும் நாட்டில்சென்று பிழைப்போமென மனமிட்டு இத்தனைதூரம் வந்துவிட்டோம் இது என்னாடோ எதும் தோற்றவில்லை அடியாளுக்கு தெரியச்சொல்வீர்.

கமலாபாயி:—அம்மா ;நீங்கள் துயரப்படவேண்டுவதில்லை இதுவோ தர்மபுரிநாடு யெனது வீட்டில் நீங்கள் மூவரும் இருப்பதற்கு விடம் தருகின்றேன் ;யென்பின் பற்றிவருவீர் அம்மணி.

சற்குணாம்பிகை:—அப்படியே வருகின்றேன்.

கமலாபாயி:—அம்மா இதோ பார்த்தீரா தாங்களிருப்பதற்கு விடம் தந்தேன் இதோ இருக்கப்பட்டக்கூலி ஆளுடன்சென்று கடை வீதியில் வேண்டிய சாமக்கிரிகைகளை வாங்கி வந்து சமயல் செய்து சாப்பிடுவீர் அம்மா.

சற்குணாம்பிகை:—அப்படியே செய்குறேன்.

---

# இரண்டாவது இராஜ்யம்.

## நாடு—தர்மபுரி.

| | |
|---|---|
| வேந்தன் | தர்மாங்கதன். |
| மனைவி | சித்திரைரேகை. |
| புதல்வி | வசந்த. |
| மந்திரி | உத்தமகுணன். |
| மனைவி | ஸ்ரீமனி. |
| புதல்வி | லலித. |

தர்மாங்கதன்:—மந்திரி நான் வெகுநாளாக புத்திரிபாக்கியமில்லாமல் மனக்கவலையடைந்து இருக்கும் சமயத்தில் பகவானுடைய கிருபாகடாக்ஷத்தினால் எனக்கும் உனக்கும் சந்தானம் உண்டாச்சுது இது பெரியோர்கள் செய்தபாக்கியம்தான். ஆனால் எனது புதல்வி சகல சாஸ்திரங்கள் தெரிந்து வல்லமையடைந்து இருப்பதால் அப்புதல்வி வாழ்வதற்கு ஓர் திவ்வியமான உப்பரிகை கட்டி முடியவேண்டியது ஆகையால் நமது நாட்டிலிருக்கப்பட்ட சில்ப ஸாஸ்திரம் தெரிந்தவரை கூடிய சீக்கிரத்தில் அழைத்து வருவீர்.

உத்தமகுணன்:—இராஜகெம்பீரா ! தாங்கள் சொன்னதுபோல் இதோ தூதுவரைவிட்டு சில்பஸாஸ்திரம் தெரிந்தவரையழைத்

துவரும்படி திட்டம் செய்குறேன். அடா காவலனே நீங்கள் சென்று நமது நாட்டிலிருக்கப்பட்ட சில்பஸாஸ்திரியை வேந்தன் யழைப்பதாகசொல்லி யழைத்துவருவீர்.

**சேவகன்:**—அப்படியே அழைத்து வருகின்றேன். ஐயா சில்பியரே உம்மை வேந்தன் அதிவேகமாக அழைத்துவரும்படி சொன்னர் வருகின்றீரு.

**சில்பியர்:**—அப்படியா இதோ வருகின்றேன். ஐயா வந்தனம் என்னே அழைத்தக் காரியம் யாது யதை விபரமாகச் சொல்லும் இராஜோத்தமா.

**தர்மாங்கதன்:**—அப்பா சில்பியரே எனது நந்தவனத்தில் விசித்திரமாக மாடியொன்றுக்கட்டி அதில் ஜலக்கிரீடை செய்யுமிடமும் சய்யாகிரஹமிடமும் சதுரங்கமாடுமிடமும் இன்னமனேக மிடங்களே எட்டுதினத்தில் கட்டி முடிக்கவேண்டியது. அப்படி முடிக்காவிட்டால் சிரச்சேதமாகிவிடும் ஆனல் இதற்கு எவ்வளவு பட்டுபடித்தொகை வேணுமோ அதைத் தெரிவித்தால் உடனே தருகின்றேன்.

**சில்பியர்:**—ஐயா மகாருஜா! நீர் சொல்லும்படியான மஹடி கட்டி முடிக்க வேண்டுமானல் சுமார் ஓர் லக்ஷம் திரவ்யம் வேண்டியது அப்படி கொடுப்பீரானல் எட்டு தினத்தில் தீர்த்து முடிக்கின்றேன் மகருஜ்.

**தர்மாங்கதன்:**—உனதிஷ்டப்படி தருகின்றேன். மந்திரி இந்த சில்பியிடம் இரண்டு லக்ஷம் திரவ்யம்கொடுத்து அனுப்புவீர்.

**உத்தமகுணன்:**—அப்படியே கொடுத்து அனுப்புகின்றேன். அப்பா சில்பியரே இதோ வேந்தன் சொன்னபடிக்கு த்ரவ்யத்தை கொடுத்துவிட்டேன் கூடிய சீக்கிரத்தில் கட்டி முடிக்க வேண்டியது.

**சில்பியர்:**—அப்படியே செய்கின்றேன்.

(இங்கு மஹடிகட்டி முடிகிறது)

**சில்பியர்:**—மகருஜ்! தங்கள் உத்திரவின்படி மஹடி கட்டி முடிந்துவிட்டது அதை வந்து பாருங்கள்.

தர்மாங்கதன்:—மந்திரி மஹடி கட்டி முடிந்துவிட்டதாம், நாம் சென்று பார்ப்பது நீதியல்ல நமது நாட்டிலிருக்கும்குடிஜனங்கள் சென்று பார்த்து சந்தோஷப்பட்டால் அதின்பிறகு நாம் சென்று கிரஹப்ரவேசமாகலாம். ஆகையால் நமது நாட்டிலுள்ள ஜனங்கள் சென்று பார்க்கும்படி தண்டோரு மூலமாக தெரியப்படுத்துவீர்.

உத்தமகுணன்:—அப்படியே தெரியப்படச் செய்குரேன் அடா காவலனே கொடியசீக்கிரம் சென்று நமது நாட்டிலிருக்கும் படியான வெட்டியானை வேந்தன் அழைப்பதாக அழைத்து வருவாயடா.

சேவகன்:—மகாபாக்கியம் இதோ சென்று அழைத்துவருகின்றேன். அடா வெட்டியானே உன்னை அரசன் அழைத்து வரும்படி சொன்னர் வருவாயடா.

வெட்டியான்:—ஐயே! சேவக ஆண்டே இதோவாரேண்டப்பா.

வெட்டியான்:—ஓ ஆண்டே இதோ கொம்புரேன் சேதியென்ன சொல்லும் ஆண்டே.

உத்தமகுணன்:—அடா வெட்டியானே நீ தண்டோரு மூலமாக இந்த நாட்டின் நந்தவனத்தில் ஓர் விசித்திரமாகிய மாடிகட்டி இருக்கின்றது அதின் வேடிக்கைதனை நாட்டிலுள்ள குடி ஜனங்கலெல்லோரும் சென்று பார்க்கும்படி தெரியப்படுத்தி வருவாயடா.

வெட்டியான்:—அப்படியே செய்குறேன் ஆண்டே.

வெட்டியான்:—ஓ நாட்டிலுள்ள ஜனங்களே நீங்கலெல்லோரும் நமது இராஜா கட்டி முடித்த மாடிதனை போய் பார்க்காமல் போனல் உங்களுடைய சிரசு கொய்யப்படும். அறிவீர்! அறிவீர்!! அறிவீர்!!!

மதனசேகரன்:—அம்மா நான் இந்த வீதிதன்னில் சில பால்யருடன் சற்று நேரம் விளையாடி வருகின்றேன் அம்மணி

சற்குணாம்பிகை:—அடா என் கண்மணியே நாம் வந்திருப்பது மறுதேசம் உனக்கு வயது ஈரெட்டாகியும்இன்னம்விளையாட்டு புத்திவிடவில்லையா உன்னைபோலொத்த வேந்தர் உன்னைக்கண்டால் ஏளனம் செய்யமாட்டாரா இது யெல்லாம் விட்டுவிடடா கண்மணியே.

மதனசேகரன்:—அம்மா யெனக்கு தாய் தந்தை இருக்கிறபரியந்திரம் யான் குழந்தை தானே யான் நாட்டிலிருந்தால் பாலருடன் ஆடாமல் இருப்பேனோ ஆகையால் கொஞ்சநேரம் விளையாடி வருகின்றேன்.

சற்குணாம்பிகை:—அடா யென் செல்வமே அப்படியே போய் வருவாயடா கண்மணியே.

மதனசேகரன்:—ஆ! ஆ! நமது நாட்டிற்காகிலும் இன்னாடுயதிக மேன்மை பொருந்தியது. நாம் இன் நாட்டில் யெந்தப் பாலரைக் கூட்டிக்கொண்டு விளையாடலாம். அதோ நமக்குசரியான பாலகன் நிற்கின்றான், அன்னவனை விளையாட கூப்பிடலாம் அப்பா உன்னை பார்த்தால் சௌந்தர்யமுள்ளவனாக இருக்கின்றீர் நீ யெங்கிருப்பது! உன் நாடேது? உன் பெயரென்ன தெரியச்சொல்லுமப்பா.

வீரகாந்தன்:—அப்பா நான் இருப்பது இன் நாடுதான் யெனது தாய் தந்தைமார் மரணமடைந்துவிட்டார் யான் திக்கிலாதப் பாவியாகி ஆதரிக்க மனிதரில்லாமல் தியங்கி நிற்கின்றேன் யெனது பெயர் வீரகாந்தன்.

மதனசேகரன்:—அப்பா வீரகாந்தா! நீ யேதுக்கும் துயரப்பட வேண்டாம் யெனது ஆவியுள்ளமட்டும் உன்னை விட்டு பிரிவதில்லை நீயே யென் தமயன் நானே உன் தம்பி இப்படியாக இருந்து நமது காலத்தைக் கழிப்போம் அண்ணா.

வீரகாந்தன்.—மதனசேகரா! (இன்பமாய் பெற்றோர் இடர்தனை தீர்த்தோர் அன்புடன் அன்னமளித்து ரக்ஷித்தோர்) இம்மூவர்கள் தாய் தந்தை யென்று யெண்ணமிட்டவர்க்கு நற்கதிக் கிடைக்குமே தவிர நரகம் கிட்டாது அப்படி யெண்ணமிடாத

பாதகருக்கு நரகமே சொந்தவீடாக இருக்கும் நான் உன்னுடன் சேர்ந்திருந்தால் உன் தாய் தந்தை சம்மதமடைவாரு.

மதனசேகரன்:—அண்ணு நீயேதுக்கும் துயர்படவேண்டாம் உன்னைக்கண்டவுடனே யென்தாயார் யென்னிலும் மேன்மையாக உன்னை பாருட்டுவாள்நாமிருவரும்வீட்டுக்குப்போகலாம் வருவீர்.

வீரகாந்தன்:—அப்படியே போகலாம் வருவாயடா.

மதனசேகரன்:—அண்ணு இதென்ன ஆச்சரியம் தண்டோரு போட்டுக்கொண்டு போகின்ருனே யென்ன விசேடம்.

வீரகாந்தன்:—தம்பி மதனசேகரா! இன்னுட்டில் வாழும்படியான வேந்தன் தனது புதல்விக்கு இந்த நந்தவனத்தில் ஓர் விசித்திரமாகிய மஹடிகட்டி இருக்கின்ருர். அதைப்பார்க்கும்படி நாட்டின் குடிஜனங்களுக்கு திட்டம் செய்கின்ருர்.

மதனசேகரன்:—நாம் அங்கு சென்று பார்க்கலாமா?

வீரகாந்தன்:—ஏதும் தடையில்லை.

மதனசேகரன்:—ஆனல் அந்தவிடம் போய்பார்த்துவிட்டு பிறகு நமது வீட்டிற்கு போகலாம் அண்ணு.

வீரகாந்தன்:—உனதிஷ்டப்படி போகலாம் வருவாயடா.

மதனசேகரன்:—அண்ணு இதென்னஇந்திரன் நாடோ அல்லது குபோன் வாழப்பட்ட இடமாக இருக்கவேண்டும், இல்லாவிட்டால் நமது நாட்டில் வாழப்பட்ட சில்பிகள் கட்டுவதற்கு சாத்தியபடமாட்டாது. ஏனென்ருல் நாம் வெளியிலிருந்து மஹடியை பார்த்த மாத்திரத்தில் இவ்வளவு அழகுடன் இருக்க உட்புறம் சென்றுபார்க்கும் சமயத்தில் எப்படி மனம்தோற்றுமோ தெரியாது வருவீர் அண்ணு உட்புறம் சென்று பார்ப்போம்.

வீரகாந்தன்:—அப்படியே போகலாம் அப்பா தம்பி இதோ பார்த்தையா மாதர் ஸ்நாநனம் செய்யுமிடம் இது சதரங்கமா

டும் இடம் இது சிலமாதருடன் சந்தோஷமொழிகள் பேசு மிடம் இது தான் சய்யாகிரஹமென்றுச்சொல்வார்.

மதனசேகரன்:—ஆ! ஆ! அண்ணு இந்த சய்யாகிரஹத்தில் தெய்வமஞ்சம் போட்டிருக்க இதின் தலைபாகத்தில் தாமரை கமலம்போல் ஓர் கமலம் நியமித்திருக்கின்றுன் இது மத்தியில் ஓர் ரத்தினம் பொதித்தால் மகாகாந்தியாக இருக்கும் ஆனல் நம்மிடத்தில் விளையாடுவதற்கு இரண்டு கோலிகள் இருக்கின்றது அது செகப்புக்கல் அதில் வொன்றை யெடுத்து கமலத்தின் மத்தியில் விசிரியடிப்போம் அண்ணு.

வீரகாந்தன்:—தம்பி மதனசேகரா அந்த கோலிதனை காட்டு பார்ப்போம்.

மதனசேகரன்:—இதோ பாரும் அண்ணு.

வீரகாந்தன்:—(தனியாக பேசுவது) ஆ! ஆ! நமது தந்தை அநேககோடி ரத்தின வியாபாரம் செய்தப்போதிலும் இது போல் இரத்தினம் நாம் கண்டதில்லை ஆனல் ரத்தினம் இந்தக் கமலத்தில் பொதிக்கிவிட்டால் பிறகு இதனல் இவனுக்கு நல்ல கீர்த்தியும் புகழும் கிடைக்கும் நாம் அவன் இஷ்டப்படியே செய்யச்சொல்லுவோம். தம்பி உனதிஷ்டப்படி செய்குவாயடா.

மதனசேகரன்:—அண்ணு உனதிஷ்டப்படி இதோ இந்த கோலிதனைவிசிரி யெரிந்தேன் ஆ! ஆ! இதோ பார்த்தீரு மத்தியில் ஒட்டின பிறகு இந்த சய்யாக்கிரஹமெல்லாம் மகாபிரகாசத்துடனிருக்கிறது அண்ணு இனி நாம் இங்கிருந்தால் நம்மை எவராகிலும் பார்த்தால் ஹானிகரம் வரும் போல் காட்டுகின்றது நாம் நமது வீட்டிற்குபோகலாம் வருவீர்.

வீரகாந்தன்:—அப்படியே போகலாம் வாடா தம்பி.

சற்குணம்பிகை:—அடா என் கண்மணியே இப்பாலகனுர்? என் நாடு? இவனுடைய தாய்தந்தை பெயரென்ன? இவன்பெயரென்ன? உனக்கு இவன் எப்படி நேசமானுன் அதை விபரமாக தெரியச்சொல்லடா என் செல்வமே.

மதனசேகரன்:—அம்மா நான் வீதியில் விளையாடுவதற்கு போகும்சமயத்தில் இன்னாட்டில்யெவரும்தோற்றாதப்படிக்கு அங்கோர்விடத்தில் இவர் மகாசோகத்துடன் நின்றுக்கொண்டிருக்க யான்கண்டு இவரருகில்சென்று நீயாரென்று விசாரிக்க இன்னாட்டிலிருப்பவன் யெனக்கு தாய்தந்தைஇல்லை, ஆதரிக்க மனிதரில்லை யெனச்சொல்லவே யென் மனம்பரிதாபப்பட்டு ஐயா எனதாவியுள்ள வரைக்கும் நீரே என் தமயன் நானே உமக்கு இளையவனாக இருந்து காலம் கழிப்போமென வாக்களித்துவிட்டேன் ஆகையால் அம்மணி இவரை உனது மூத்தப் புதல்வனைப்போல்பாவித்து என்னைப்பார்க்கிலும் அதிகமாக பாதுகாக்கவேண்டியது அம்மா.

கமலாபாயி:—அம்மா சற்குணாம்பிகை! சந்தேகப்படவேண்டியதில்லை இப்பாலகனுடைய தாய்தந்தை இன்னாட்டில் இரத்தின வியாபாரம்செய்யப்பட்டவர் அவரிருவரும் மரணமடைந்து வெகு நாளாய்விட்டது இவனை காப்பாற்றுவதற்கு மனிதரில்லாமல் தத்தளித்திருந்தது வாஸ்தவந்தான் இதைப்பற்றி சந்தேகப்படாமல் காப்பாற்றினால் உமக்கு நற்கீர்த்தி உண்டாகுமம்மா.

சற்குணாம்பிகை:—ஆனால் அதிக சந்தோஷந்தான் இச்சிவனுடைய பெயரென்னடா மதனசேகரா.

மதனசேகரன்:—அம்மா! இவன்பெயர் வீரகாந்தனாம்.

சற்குணாம்பிகை.—சந்தோஷம்வீரகாந்தசெல்வமே! நீங்களிருவரும் கால்கைகளை சுத்திசெய்துக்கொண்டு இதோ அன்னமிட்டிருக்கின்றேன் புசிப்பீர்களடா என் கண்மணிகளே.

வீரகாந்தன்.—அப்படியே புசிக்கின்றோம் என்னை ஈன்றெடுத்த அன்னையே.

---

## தர்மாங்கதன் கொலுவு.

தர்மாங்கதன்:—மந்திரி! நான் எனது அருந்தவப்புதல்விக்கு விசித்திரமாகிய மஹடியொன்றுகட்டி தீர்மானம்செய்து நமது

நாட்டிலிருக்கப்பட்ட குடிஜனங்கள் பார்த்து சந்தோஷித்த பிறகு நல்ல முஹூர்த்ததினமறிந்து நமது புதல்வியை அழைத்துச்செல்வோமென வெண்ணமிட்டதற்கு குடிஜெனங்கள் எல்லோரும் பார்த்துவிட்டார்களா.

உத்தமகுணன்:—மகராஜ் தாங்கள் யென்று அந்த மஹாடியை பார்க்கும்படிச்சொன்னீரோ அன்றே குடிஜனங்களெல்லோரும்சென்று அங்கிருக்கும்படியான விநோதங்களைப்பார்த்து சந்தோஷமடைந்துவிட்டார் இனி நமது புரோஹிதரையழைத்து சுபதினத்தை நியமித்து அன்றையதினம் நமது புதல்வியை அழைத்துச்சென்று மஹாடியைகாட்டி அழைத்துவருவோம்.

தர்மாங்கதன்:—அப்படியா சரிதான் ஆனால் கூடியசீக்கிரத்தில் புரோஹிதரை அழைத்துவருவீர்.

உத்தமகுணன்:—தங்களுடைய இஷ்டம்போல் அழைத்துவருகின்றேன். அடா காவலனே, சீக்கிரம்சென்று நமது புரோஹிதரை அழைத்துவருவாயடா.

சேவகன்:—அப்படியே அழைத்துவருகின்றேன் அய்யா புரோஹிதரே நமது வேந்தன் உம்மை அழைத்துவரும்படி சொன்னார் ஆகையால் சீக்கிரத்தில் வருவீர்.

புரோஹிதர்:—ஆ! அப்படியா இதோ வருகின்றேன்.

தர்மாங்கதன்:—வந்தனம் வெகுவந்தனம் புரோஹிதரே இந்த ஆசனத்தில் அமருவீர்.

புரோஹிதர்:—சுபீபவா! சுபீபவா! இராஜோத்தமா என்னிடத்தில் தர்பாசனமிருக்கிறது தாங்களிடும்படியான ஆசனம்வேண்டாம் இந்த தர்ப்பாசனத்திலமருகிறேன் ஆனால் தாங்கள்யென்னை அழைப்பித்தகாரியம் யாது அதை தெரியப்படச்சொல்லும் இராஜோத்தமா.

தர்மாங்கதன்:—அய்யா புரோஹிதரே யான் எனது அருந்தவப் புதல்விக்கு நமது நந்தவனத்தில் ஒர் விசித்திரமாகிய மஹாடி

யொன்று கட்டிமுடிந்தது அந்தமஹடியில் வாசம்செய்ய யெந்த நாள் சுகமானது அதை விபரமாகசொல்லும்.

புரோஹிதர்:—மகராஜ் அப்படியே பஞ்சாங்கத்தைப்பார்த்து திவ்விய நாள் சொல்லுகிரேன்.

தர்மாங்கதன்:—சீக்கிரத்தில் சொல்லும்.

புரோஹிதர்:—அடா சீடா எதோ அந்த பஞ்சாங்கக் கட்டுக் கொடடா.

சீடன்:—குருமகராஜ் இதோ தருகின்றேன்.

புரோஹிதர்:—அடா சீடா இந்த மாதம் என்ன.

சீடன்:—குருமகராஜ் நேற்றியதினம் நமதுவீட்டில் சுகபதார்த்தத் துடன் புசித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் அந்தவிடத்தில் இந்தமாதம் வைத்துவந்தேன் விடைதருவீராணுல் கூடிய சீச்கி ரத்தில்சென்று எடுத்துக்கொண்டு வருகின்றேன்.

சேவகன்:—அடா வரட்டுத்தவளைப்பயலே குருவானவர் மாதம் கேழ்க்க அதை சாப்பிட்ட இடத்தில் வைத்துவந்தேனென் றுயே மாதம்கூட வைத்துவருவாரு நல்ல சீடன் நல்ல குருவு ஓய் வேதியரே இதை எல்லாம் வேந்தனுக்குதெரிந்தால் வெகு மதி நன்றுய்க்கிடைக்கும் நாள் பார்த்து சொல்லென்றுல் நறி யைப்பார்த்து மொறைக்கிரீர் சிக்கிரமாகபார்த்துச்சொல்லும்.

புரோஹிதர்:—அப்பா சேவகா அவன் சிறுபையன் அவனுக் கேதுதெரியும் நான்பார்த்துசொல்லுகிறேன் மகராஜ் நாளய தினம் கன்னியாலக்கினமானபடியால் நீர் நினைத்தபடி மனைக் குபோகலாம்.

தர்மாங்கதன்:—சரி! சரி! மந்திரி இந்த புரோஹிதருக்கு வேண்டிய வெகுமதிகள் தந்து யனுப்புவீர்.

உத்தமகுணன்:—மகாபாக்கியம் தங்களிஷ்டப்படிகொடுத்தனுப் புகிரேன் அடா காவலனே நமது பொக்கிஷத்தைத் திறந்து இந்த புரோஹிதருக்கு வேண்டியவெகுமதிகள் தந்தனுப்பும்.

**காவலன்:**—நல்லது ஒய் புரோஹிதரே வருவீர் நான் கொடுக்கும் வெகுமதியைப்பெருவீர்.

**புரோஷிதர்:**—அய்யா காவலனே நீர்கொடுத்ததுபோதும் நான் போகிறேன்.

**காவலன்:**—நான்கொடுத்ததை யெவருடன் சொல்லாதீர்.

**புரோஷிதர்:**—அப்படியே போய்வருகிறேன்.

**தர்மாங்கதன்:**—மந்திரி! நமது ஆஸ்தானமுதற்கொண்டு நந்தவனத்தில் நியமித்திருக்கும் மஹாடிவரைக்கும் பச்சென்ற பந்தல்போடும்படி திட்டம்செய்வீர்.

**உத்தமகுணன்:**—மகாராஜ் தங்களுடைய இஷ்டப்படி போட்டுவிக்கிறேன். அடா காவலனே சீக்கிறத்தில் வேந்தன் கொலுச்சாவடிமுதல் நந்தவனம் வரைக்கும் பச்சென்ற பந்தல்போடுவீர்.

**காவலன்:**—அய்யா நேற்றயதினம் தங்களிடத்தில் வேந்தன்சொல்லும்போது யான்கேட்டிருந்து அதுபோல் பந்தல்போட்டு முடிந்துவிட்டது யேதும் தடையில்லாமல் வேந்தருக்கு தெரிவித்துபோகும்படி சொல்லுவீர்.

**உத்தமகுணன்:**—சந்தோஷமடா காவலனே மகராஜ் தங்களுடையசொல் வாராமுந்தி சேவகன் பந்தல்போட்டு முடித்துவிட்டான் தாங்கள் யேதும்தடையில்லாமல் புறப்படுவீர்.

**தர்மாங்கதன்:**—சபாஷ் வெகுசந்தோஷம் ஆனல் யான் யெனது புத்திரியிருக்கும் கன்னிகாமடம் சென்று புதல்வியை அழைத்துக்கொண்டு வருகிறேன் மந்திரி.

**உத்தமகுணன்:**—அப்படியே சென்று அழைத்துவருவீர்

---

## கன்னிகாமடம்.

---

**சித்திரரேகை:**—கண்மணி! இதுகாலபரியந்தம் யான்வரும் சமயமெல்லாம் உனது முகத்தைப்பார்த்தால் செந்தாமரைக்கமலம்போல் பூர்த்திருக்கும் அப்படிப்பட்ட முகமானது தாம

ளைத்தண்டுபோல் வதங்கி இருக்கக்காரணமேது இந்த கன்யா மடத்தில் இருக்கப்பட்ட தோழிகள் யேதாகிலும் வெறுத்து பேசினறு அல்லது இதரமானவர் உன்னை துஷித்தாரா தெரியச்சொல்லும் புதல்வியே.

வசந்தா:—அம்மா! யென்று யான் விளையாடுவதை விட்டு கன்னிகா மடத்தில் நின்றேனே அதுமுதற்கொண்டு இதுவரைக்கும் தங்களுடைய ஆஞ்ஞைப்படி தோழிமார்கள்காலந்தவராதபடிக்குபோஜனமளித்து திவ்ய ஆபரண அலங்கிருதம் செய்து சிருட்டுகிறார்தவிர மற்றப்படி அவர்மீது குற்றம்சாட்டுவது நலமல்ல எதனல் மனக்கவலையென்றால் யென்னைப்பிரியத்துடன் பெற்றுவளர்த்த தந்தை எனக்கு நந்தவனத்தில் விசித்திரமாகிய மஹடியொன்று கட்டிதருகின்றேன்யெனச்சொன்னவர் அம்மொழியை மறந்துவிட்டார்போல்காட்டுகிறது தந்தைக்கு முந்திருந்த அபேக்ஷை இப்போதில்லை யேனென்றால் ஒருவர் வீட்டிற்கு போகும்படியான மாதுக்கு யென்ன செய்தால் பலிதமாகும் புத்திரனுகை இருந்தால் இதையெல்லாம் அனுபவிப்பானேயென என்னை மறந்து விட்டார்போல் தோற்றுகிறது இதுதான் பெருந்துயரமாகக்கொண்டு முகவாட்டமாக யிருக்கிறேன் தவிர மற்றது யேதுமில்லை அம்மணி.

சித்திரைரேகை:—அடி என் கண்மணியே நீ யேதுக்கும் துன்பப்படவேண்டாம் உன் தந்தைசொன்னதுபோல் நடத்தாமல் இருக்கமாட்டார் மஹடிகட்டிமுடிந்துவிட்டது நாம்சென்று பார்ப்பதற்கு சுபதினத்தைப்பார்க்கின்றார் கூடிய சீக்கிரத்தில் வந்து உன்னை அழைத்துச்சென்று அம்மாஹடிதனை காட்டுவார் சோகம் கொள்ளாதே செல்வமே.

வசந்தா:—அம்மா சோகமில்லாதப்படிக்கி கார்க்கவேண்டியது தாய்தந்தை கடமைதானே அப்படியிருக்க எனக்சேன் சோகம் இம்மொழிகேட்டமாத்திரத்தில் சோகம் தணிந்துவிட்டது.

தர்மாங்கதன்:—ஆரடி துவாரத்தில்?

தோழிமார்:—மகராஜ் வந்தனம்செய்கின்றேன். என்ன விசேடம்.

தர்மாங்கதன்:—கன்னிகாமடத்தில்என் புதல்வியென்னசெய்கிறாள்

தோழிமார்:—அய்யனே தந்தை வரவில்லையென யெதிர்பார்த்துக் கொண்டு சோகமாயிருக்கின்ருள்.

தர்மாங்கதன்:—ஆ! ஆ! அப்படியா? அம்மணி வசந்தா யேன் இப்படி துக்கசாரத்தில் மூழ்கி இருக்கவேண்டிய காரணமென்ன தெரியச்சொல்லும் யென் தவப் புதல்வியே.

வசந்தா:—தந்தயே யெனக்கு யேதும் துயர் கிடையாது. ஆனல் நீர் யெனக்கு மஹடிகட்டி தருகிரதாகசொன்னது மரந்துவிட்டீரோயென்று கவலைதவிர மற்றதொன்றுமில்லை.

தர்மாங்கதன்:—இதுதானு துயரம் ஆ! ஆ! யென்செல்வமே நீ யேதுக்கும் துயறப்படவேண்டியதில்லை உனது இஷடப்படி மஹடிகட்டி முடிந்துவிட்டது நீயும் புறப்பட்டு வந்து பார்த்து சந்தோஷமடைந்தால் நாளையதினம் கிரஹப்பிரவேசமாகலாம் வருவாயென்கண்மணியே.

வசந்தா:—அப்படியே வருகின்றேன் தந்தயே.

(மஹடியை பார்க்கப்போவது.)

தர்மாங்கதன்:—மந்திரி நாமெல்லோரும் சென்று புதல்வியுடன் மஹடி கட்டி இருக்கும் விநோதத்தை பார்த்து வருவோம் வருவீர்.

உத்தமகுணன்:—அப்படியேபோய்பார்க்கலாம் வருவீர் மகராஜ்

உத்தமகுணன்:—இராஜகெம்பீரா இது நீராடுமிடம் இது சதுரங்கமாடுமிடும் இது சில தோழிமாருடன் விளையாடுமிடம் இது சய்யாகிரஹமாகும்.

தர்மாங்கதன்:—ஆ! ஆ! மந்திரி இத்தனை இடம் பார்த்தும் மன சந்தோஷ்மடையாமலிருந்தும் இப்போது இந்த சய்யாகிரஹத்தைப்பார்த்தவுடனே மனதிற்கு அதிக சந்தோஷ்மேலிட்டது இம்மஹடி இவ்வளவு பிரகாசத்துடன் இருக்கக்காரணமேது அதை தெரியப்படச்சொல்லும்.

உத்தமகுணன்:—மகராஜ் இந்த சய்யாகிரஹத்தில் சில்பியானவன் ஒர் கமலம்செய்திருக்கின்ருன் அந்த கமலத்தின்மத்தியில்

ஓர் ரத்தினத்தை பொதித்திருக்கின்றான் அந்த ரத்தின காந்தி யானது இப்படி பிரகாசிக்கின்றது.

வசந்தா:—தந்தையே இதைச்செய்த சில்பியினுடைய வேலைத்திற மையை நான் யேதென்றுச்சொல்லுவேன் ஆனால் யிந்தரத் தினத்தை கழட்டித்தாரும் பார்ப்போம்.

தர்மாங்கதன்:—அப்படியே கழட்டித்தருகின்றேன் மந்திரி இந்த ரத்தினம் கழட்டித் தருவீர்.

உத்தமகுணன்:—இதோ கழட்டிவிட்டேன் பாரும் மகராஜ்.

தர்மாங்கதன்:—எதோ? தருவீர் ஆ! ஆ! யென்னகாந்தி இந்த ரத்தினம்போல் யெஙகும் கிட்டுவது துர்லபம் இதோ பாரும் யெனதம்மணி.

வசத்தா:—தந்தயே இந்த ரத்தினம் தெய்வலோகத்து மாதற் கள் அணியும்படியான ரத்தினம் இதைப்போல் இன்னமொன் று தருவிக்காவிட்டால் யெட்டுதினத்தில் யென்னுவியைப் போக்குவது நிக்ஷயம் கூடிய சீக்கிரத்தில் வரவழித்து தருக வேண்டியது இதோ நான் அந்தபுரம்போகின்றேன்.

தர்மாங்கதன்:—ஆ! ஆ! நாம் என்ன செய்வது நமக்கு புத்திர பாக்கியமில்லாமல் மனக்கவலையடைந்து பரமனைக்கூறி தவம் புரிய புத்திரநில்லாதப்படிக்கு புத்திரிபாக்கியம் தந்தார் அப் புத்திரி குணம்போல் நடந்தாமையால் நமக்கு இப்படி மொழி கேழ்க்கலாச்சுது. ஆனாலும் போய்பார்ப்போம் மந்திரி நாம் கொலுவிற்கு போகலாம் வருவீர்.

உத்தமகுணன்:—அப்படியே போகலாம் வருவீர்.

தர்மாங்கதன்:—அப்பா மந்திரி இந்த மஹடியைக்கட்டிய சிலபி யையதி சீக்கிரத்தில் அழைத்து வருவீர்.

உத்தமகுணன்:—அப்படியே அழைத்து வருகின்றேன் அடா காவனே நீ சென்று நமது மஹடி தன்னைக்கட்டிய சில்பியை கூடியசீக்கிரத்தில் வேந்தன் அழைத்தாகச்சொல்லி அழைத்து வருவாயடா.

சேவகன்:—அப்படியே தங்களுடைய இஷ்டம்போல் அழைத்து வருகின்றேன் ஐயா சில்பியரே நீர்கட்டிய மஹடிதனை வேந்தன் பார்த்து சந்தோஷமடைந்து வெகுமதிகள் கொடுக்க உம்மை யழைத்து வரும்படி சொன்னார் வருவீர்.

சில்பி:—ஐயயோ யென்ன ஆபத்காலம் நேரிட்டதோ தெரியவில்லை நாம் போகாவிடில் நமக்கு தண்டனை நேரிடும் இனி யென்ன செய்வது போகதான் வேண்டும். அப்பாகாவலனே! இதோ வருகின்றேன்.

சில்பி:—வந்தனம்! வெகுவந்தனம்! இராஜோத்தமா யென்னை அழைத்தக்காரணமேது தெரியச்சொல்லும் மகராஜ்.

தர்மாங்கதன்:—அடா சில்பியே! நீ கட்டிய மஹடியில் சய்யா கிரஹத்தில் பதித்திருக்கும் ரத்தினம் யெந்த நாட்டில் கிடைத்தது தெரியச்சொல்.

சில்பி:—மகருஜ்! யான் தாங்கள் சொல்லியதுபோல் மஹடிகட்டினேனே தவிர இதரமான வேலை யேதும் செய்யவில்லை ஆனால் யென்னிடத்தில் அப்படிக்கொற்ற ரத்தினம் இருக்குமாகில் யான் கூலிவேலைசெய்யவேண்டியக்காரணமேது ராஜோத்தமா.

தர்மாங்கதன்:—ஆனல் நீ இந்த ரத்தினம் பொதிக்கவில்லையா? பயப்படாமல் சொல்.

சில்பி:—கிடையாது! கிடையாது!

தர்மாங்கதன்:—சரிதான் நீ உனது வீட்டிற்கு போ.

சில்பி:—அப்படியே போகின்றேன் மகராஜ்.

தர்மாங்கதன்:—மந்திரி! இந்த ரத்தினத்தின் வரலாற்றை சில்பியை கேட்டபோதிலும் தெரியாதென்றுச் சொல்லுகின்றான் இதற்கென்ன செய்வேன் புதல்வியும் இதற்கு சமமாகிய ரத்தினம் தருவிக்காவிட்டால் தன் ஆவியைபோக்குவேனென திடமாகச்சொல்லி யிருக்கின்றாள் இதற்கென்ன யோசனை புதல்வியை பரிகொடுத்து பூமியில் யெப்படி வாழ்வது இதற்கு தக்கயோசனை சொல்வீர்.

உத்தமகுணன்:—மகராஜ் இப்படிக்கொற்ற ரத்தினத்தை நாம் யெங்கு சம்பாதிப்பது இந்த ரத்தினத்தை தேடுவதற்கு யெவரால் முடியும்.

தர்மாங்கதன்:—மந்திரி நீரே இப்படிச் சொல்லலாகுமா ஆனால் இந்த ரத்தினம் போல் மற்றொரு ரத்தினம் இனி பத்து தினத்திற்குள் சம்பாதித்துக்கொண்டுவராவிட்டால் உனது சிரசை கட்டாயம் வெட்டுவது நிஷ்சயம் கூடிய சீக்கிரத்தில் தேடிக் கொண்டு வருவீர்,

உத்தமகுணன்:—ராஜோத்தமா நீதியில்லா மொழிகூர நீதியாகுமா அகப்படாத வஸ்துவை தேடிக்கொண்டு வரவேண்டுமென்றால் எப்படி தேடலாகும் தங்க கத்தி யென்று கழுத்தை அறிந்துக்கொள்ளலாகுமா அப்படி மாள்வதற்கு விதியிருந்தால் பிரம்மன் விதிப்போல் முடியுமே தவிர மானிடரால் என்ன முடியப் போகின்றது இதோ போகின்றேன்.

## மந்திரி மாளிகை.

ஸ்ரீமணி:—இதென்ன ஆச்சரியம்! யென்றுமிப்படி முகவாட்டத்துடன் அன்னபானாதிகளை புசியாமல் மஞ்சத்தின் மீது சயனித்துக்கொண்டிருக்க வேண்டிய காரணமேது அடியாளுக்கு சற்று தெரிவிப்பீர் நாதா.

உத்தமகுணன்:—நாயகி! நான்யேதென்றுச் சொல்வேன் நமது மகராஜன் தனது புதல்விக்கு நந்தவனத்தில் விசித்திரமாகிய மஹடியொன்று கட்டி அந்த மஹடியிலுள்ள சய்யாகிரஹத்தை சில்பி மகாவிந்தையாக கொத்து வேலை செய்து முடித்தான். அதிலோர் தாமரைக்கமலத்தின் மத்தியில் ரத்தினம் ஒன்று பதிந்திருக்கின்றது அந்த ரத்தினத்தை இராஜப் புதல்விப்பார்த்து எட்டு தினத்தில் இதற்கு ஜதை கொண்டுவராவிட்டால் தன் ஆவிப்போக்குவேனென சபதமிட்டு சென்றனள் இதைவேந்தன் தெரிந்துசில்பியை அழைத்து விசாரித்து பிறகு யென்னை அழைத்து இந்த ரத்தினம்போல் ரத்தினம் பத்து

தினத்தில் கொண்டுவராவிட்டால் உன் சிரசை கண்டிக்கப்படுமென்றுசொல்லிவிட்டார் இது வரைக்கும் ஒன்பது நாள் தீர்ந்துவிட்டது இனிவோர் நாள் இருக்கின்றது யென்காவிப் போவதுநிச்சயம் மாதே நீ புதல்வியை அழைத்துக்கொண்டு தாய்வீடுசேர்ந்து சுகமாகவாழ்ந்திருப்பாயடி மாதே.

ஸ்ரீமணி:—நாயகா என்று தங்களை மாலையிட்டேனே அன்றயதினமே தாயும் தந்தை தமயன் தம்பிமார் அபேக்ஷதனை மறந்து தாங்களே யெல்லாம் சொந்தமென்று நம்பி வாழ்ந்திருக்க இப்போது தங்களுக்கு ஆபத்காலம் வரும் சமயத்தில் தங்களை விட்டு தாய் வீடுபோவது பெரிதா அப்படி சென்றாலும் யென்னை போலொத்தமாதர்கள் யென்னை ஆ! ஆ! சண்டாளி கணவனுக்கு ஆபத்காலம் வந்திருக்க அன்னவரைவிட்டு தாய் வீடு பெரிதென்று வந்தாளே இவள் யோக்கியமானவளா யென்று ஏளனம் செய்யமாட்டாரா அப்படியெல்லாம் யொருவரிடத்தில் சீழ்ச்சொல்பெராமல் அப்படி பிரம்மவிதிபோல் தங்களை தண்டனை விதித்தால் உடனே யான் அக்கினிகுண்டத்தில் குதித்த பிறகு நீர் சென்று வேந்தனுடைய ஆக்கினைக்குஉட்படுவீர்.

லலிதா:—பிதா இது காலபரியந்தம் யென்னை வளர்த்து சீராட்டி ஓர் உத்தமருக்கு கொடுத்து சந்தோஷம் பாராமல் துக்க சாகரத்தில் மூழ்கி இருப்பதுடன்கூட இப்பெரும் துன்பம் விளைய இதை எல்லாம் யான் நேத்ரோஸ்சவமாக பார்த்துக் கொண்டிருக்க நலமாகுமா யானும் எனது தாயுடன் கூட அக்கினிபிரவேசமாகின்றேன் ஆகையால் கூடிய சீக்கிரத்தில் அச்கினிகுண்டமதைக் காலிக்க சொல்வீர்.

உத்தமகுணன்:—அம்மணி நீ சொல்லும்படியான நீதியெல்லாம் உண்மைதான் இதை வேந்தன் கேழ்வியுற்றால் நாம் சொன்ன மொழிக்கேட்டு பயமடைந்து புதல்வியையும் மனைவியையும் யாககுண்டத்தில் தள்ளிவிட்டு தான் தப்பித்துக்கொள்ள மனம்காடி வந்தானென்று சொல்லமாட்டானா.

59072

லலிதா:—தந்தயே! இது யெல்லாம் வீண்வார்த்தை அந்த பத் தினம் அகப்படாமல் போனால் யெப்படியாகிலும் உம்மை சிரச்சேதம் செய்வது உண்மைதான் ஆகையால் யான் யாகத்

தில் முந்தி குதிக்கிரேன் பிறகு வேந்தன் இதை தெரிந்தால் மனம் சாந்திபட்டும் உம்மை பொறுத்து ரக்ஷிப்பார் ஆனது பற்றி உடனே யாககுண்டம் காவிப்பீர்.

## யாக குண்டம்.

மதனசேகரன்:—அம்மா இதென்ன விபரீதம் நமது வீட்டிற்கு யெதிர் வீட்டில் யேதோ யாக மூட்டி இருக்கின்றது அந்த வேடிக்கைதனே பார்த்து வருகின்றேன்.

சற்குணம்பிகை.—அப்பா கண்மணியே நீயோ சிறியவன் வெகு ஜாக்கிரதையுடன் போய் பார்த்து வருவாயடா செல்வமே.

மதனசேகரன்:—ஆ! ஆ! இதென்ன காரணம் பால்யதிசையடைந்த மாது மஞ்சள் வேஷ்டி தரித்து யாகத்தை சுற்றி வருகின்ருள் யென்ன ஆபத்காலமோ தெரியவில்லே இங்கிருப்பவரை விசாரிப்போம் அம்மா இதென்னக்காரணம் இப்படி யாகத்தில் விழவேண்டிய கவலேயேது அதையடியேனுக்கு தெரியச்சொல்லும் அம்மா.

ஸ்ரீமணி:—அப்பா குழந்தாய் நான் யேதென்றுச் சொல்வேன் எங்கள் தலேவிதியை ஆனல் சொல்கிரேன்கேள் எப்படி என்ருல் இன்னட்டை பரிபாலனம் செய்யும் வேந்தன் புதல்விக்கு நந்தவனத்தில் வோர் விசித்திரமாகிய மஹடி யொன்று கட்டி அதில் சய்யரகிரஹ மொன்று நியமித்து அவ்விடத்தில் சில்பி ஓர் விசித்திரமான கமலமொன்றை செய்துவைத்தான் அந்த கமலத்தின் மத்தியில் ஓர் ரத்தினம் பொதித்திருந்ததாம் அந்த ரத்தினத்தை அம்மாது எடுத்து இதைபோல் ரத்தினம் இன்னமொன்று கொண்டுவந்து கொடாவிட்டால் தன் ஆவியைபோக்குவேனெனச் சொன்னளாம் அம்மொழிவேந்தன் தெரிந்து சோகமுற்று யென்கணவனே அழைத்து இந்த ரத்தினம்போல் ரத்தினம் பத்து தினத்தில் கொண்டுவாருவிட்டால் உன் சிரசை கண்டிபேனென திட்டம் செய்து இன்றைக்கு வொன்பது நாள் ஆகிவிட்டது நாளேய தினம் யென்நாயகருடைய சிரசுப்போவது நிக்ஷபம் இனி இவ்வுடலே வைத்திருப்பதைவிட யாகத்தில்

வீழ்வோமென முந்தி யெனது புதல்வி வீழ்ந்தப்பிறகு நான் அக்கினி பிரவேசமாவோமென எண்ணமிட்டிருக்கின்றேன் இதுதான் சங்கதி பாலகா.

மதனசேகரன்:—அம்மா! உன் நாயகர் அவ்வேந்தரிடத்தில் யென்ன வேலைச் செய்வது.

ஸ்ரீமணி:—அப்பா அவ்வேந்தரிடத்தில் தலைமையாகிய மந்திரி யாகும்.

மதனசேகரன்:—சரிதான். அந்த ரத்தினம் கொடுத்தால் சிரச் சேதமில்லாமல் போகுமா.

ஸ்ரீமணி:—ஆம்! ஆம்! சிரச்சேதமில்லாமல் போவது நிச்சயம் தான்.

மதனசேகரன்:—ஆனால் உனது நாயகரை அழைத்துவருவா யம்மா.

ஸ்ரீமணி:—அப்படியே அழைத்து வருகின்றேன். நாயகா! நமது புதல்வி அக்கினி குண்டம் சுற்றி வரும் சமயத்தில் யாரோ ஓர் பாலகன் சவிஸ்தாரத்தை கேட்டு உம்மை அழைத்து வரும் படி திட்டம் செய்தான் ஆகையால் சீக்கிரத்தில் வருவீர்.

உத்தமகுணன்:—அப்படியே வருகின்றேன் எப்பாலகன் எதோ காட்டுவாயடி மாதே.

ஸ்ரீமணி:—இதோ நிற்கின்ற பாலகன்தான் சொன்னது.

உத்தமகுணன்:—சரிதான் அப்பா! பாலகா உன்னைப் பார்த்தால் இராஜவடிவமாக தோற்றுகிறது உன் நாடெது உன் தாய் தந்தையின் பெயரென்ன, இன்னாட்டிலெங்கு வாசம் செய் கின்றாய் தெரியச் சொல்லுமப்பா.

மதனசேகரன்:—ஐயா! யெனது நாடு அமராபுரி, தந்தையின் பெயர் கருணாகரபூபாலன், தாயின் பெயர் சற்குணாம்பிகை யானும் யென் தாயுமாக தனித்து இன் நாட்டில் வந்து உமது வீட்டிற்கு யெதிர் வீட்டில் வாசம் செய்கின்றோம்.

உத்தமகுணன்:—சரிதான்! சந்தோஷம், ஆனால் யென்னை அழைத்த காரியமேது.

மதனசேகரன்:—ஏதோ உமது புதல்வி அக்கினி பிரவேசமாவதைக்கண்டு ஏதுகாரணத்தைப்பற்றி இப்படி அக்கினிபிரவேசமாவது யெனவிசாரிக்க ரத்தினம்போல் ரத்தினம் கொடாவிட்டால் உம்மை சிரச்சேதம் செய்வதென்று வேந்தன் திட்டம் செய்ததாக உமது மனைவி சொல்லக்கேட்டேன் ஆகையால் நீர் துயரப்படவேண்டியதில்லை இதோ அந்த ரத்தினத்திற்கு பதில் ரத்தினம் தருகின்றேன் பெற்றுக்கொண்டு வேந்தனிடம் தந்து உமது சிரசைக் காப்பாற்றிக்கொள்வீர்.

உத்தமகுணன்:—ஆ! ஆ! நாம் செய்த பாக்கியமோ, அல்லது பெரியோர் செய்த தவப்பயனோ இன்றைத்தினம் நமது சிரமதைக்காப்பாற்றினது இப்பாலகன் மகா உத்தமன் நாம் நமது புதல்வியைப் இப்பாலகனுக்கு தான் கொடுக்கவேண்டியது இதைப்பற்றி பிறகு யோசிக்கலாம் அப்பா உம்மால் ரத்தினம் பெற்றேன் இதோ யான் வேந்தனிடம் கொடுத்து வருகின்றேன்.

மதனசேகரன்:—அப்படியே போய் வருவீர்.

---

## தர்பார்.

தர்மாங்கதன்:—ஆ! ஆ! இதென்ன ஆச்சர்யம் நமது மதியென்ன அல்பமடைந்துவிட்டது நமது புதல்வி மொழியை நம்பியல்லவா நீதிமார்க்கம் போதிக்கப்பட்ட மந்திரிக்கு ஆக்கினை நியமித்தோம் அந்த ரத்தினம் அகப்பட்டதோ அகப்படவில்லையோ என்ன பரிதாபப்படுகிறானோ தெரியவில்லை இன்றைத்தினம் நியமித்தகாலம் சரியாகப் போச்சுது எப்படி வருகின்றானோ பார்ப்போம்.

உத்தமகுணன்:—மகராஜ வந்தனம் செய்கின்றேன்.

தர்மாங்கதன்:—கல்யாண் மந்திரி! நான் சொன்னதுபோல் தேடிக்கொண்டு வந்தீரா.

உத்தமகுணன்:—மகராஜ் தெய்வகடாக்ஷத்தால் தாங்கள் கோரிய ரத்தினம் கிடைத்தது. இதோ பாரும் தங்களுடைய ரத்தினத்திற்கு சமமானதா.

தர்மாங்கதன்:—எதோ தாரும் பார்ப்போம் சேடிகளே சீக்கிரத்தில் யெனது புதல்வியை அழைத்து வருவீர்.

தோழிமார்:—மகா பாக்கியம் அப்படியே அழைத்து வருகின்றோம் அம்மா வசந்தா வந்தனம் செய்கின்றோம்.

வசந்தா:—சேடிகளே என்ன விசேடம் இப்படி அலங்கோலத்துடன் வரவேண்டிய காரணமென்ன தெரியச் சொல்வீர்.

தோழிமார்:—அம்மா நீ கோரியப்படி ரத்தினம் கொண்டு வரும்படி மந்திரியிடம் தந்தை திட்டம் செய்தாரல்லவா அந்த ரத்தினம் கொண்டு வந்ததுபோல் காட்டுகின்றது தந்தை உன்னை அதிசீக்கிரத்தில் அழைத்து வரும்படி திட்டம் செய்தார் வருவாயம்மா.

வசந்தா:—அப்படியா! வெகுசந்தோஷம் இதோ வருகின்றேன். தந்தையே வந்தனம் என்னை அழைத்த காரியமேது தெரியச் சொல்லும்.

தர்மாங்கதன்:—அம்மணி! நீ கோரியபடி ரத்தினம்கொண்டு வரும்படி மந்திரியிடம் திட்டம் செய்ய அவர் சென்று ரத்தினம் தேடிக்கொண்டு வந்து விட்டார் இதோ பாரும் அம்மணி.

வசந்தா:—வெகு சந்தோஷம் இப்படி தருவீர் ஆ! ஆ! தந்தையே இந்த ரத்தினம் எப்புருடன் வைத்திருந்தானோ அப்புருடனை நான் விவாஹம் செய்குவேன் தவிர இதரமானவரை என்மனதில் விரும்பமாட்டேன்.

தர்மாங்கதன்:—அப்படியே செய்குரேன் நீ அந்தபுரம் போகுவாய் அமமணி.

வசந்தா:—அப்படியே போகின்றேன் தந்தையே.

தர்மாங்கதன்:—மந்திரி வேந்தனுக்கு ஆபத்காலம் வருங்காலத்தில் அதைப்போக்குவதற்கல்லவா மந்திரிமார் இருப்பது உனது புத்திக்கு வெகு சந்தோஷமடைந்தேன் இனி நாம் அந்தப்புரம் போகலாம் வருவீர்.

---

## மந்திரி மாளிகை.

உத்தமகுணன்:—நாயகி எனது பிராணத்தைக்காப்பாற்றின அந்த உத்தமனுக்கு நமது புதல்வியை கொடுத்து விவாகம் செய்து வைத்தால் நலமென்று என் மனம் யெண்ணமிடுகின்றது உன் கருத்தைச் சொல்லும் நாயகி.

ஸ்ரீமணி:—நாயகா யென்று நமக்கு நன்மை செய்ய மனமிட்டானே அன்னவனுக்கே விவாகம் செய்தால் நலமாகும்.

உத்தமகுணன்.—அப்படியே செய்கின்றேன் அடா காவலனே நீ சென்று நமது வீட்டிற்கு எதிர் வீட்டிலிருக்கும் சற்குணம்பிகையென்னும் உத்தமியை நான் அழைத்ததாக சொல்லி அழைத்துவாடா.

சேவகன்:—அப்படியே அழைத்து வருகின்றேன் அம்மா வந்தனம் செய்கின்றேன் தங்களை இன்நாட்டின் மந்திரி அழைத்து வரும்படிச் சொன்னார் வருவீரம்மா.

சற்குணம்பிகை:—அப்பா காவலனே இதோ வருகின்றேன்.

உத்தமகுணன்:—அம்மா வந்தனம் இந்த ஆசனத்திலமருவீர்.

சற்குணம்பிகை:—அப்படியே அமருகின்றேன் ஆனால் என்னை அழைத்தக் காரியமேது தெரியச்சொல்லுமப்பா.

உத்தமகுணன்:—அம்மணி தங்களுடைய புதல்வனால் ஸவிஸ்தாரமெல்லாம் கேள்வியடைந்தேன் ஆனபோதிலும் பெரிதல்ல உனது புதல்வனால் கீர்த்தி பிரதாபமோங்கி சுகப்படப் போகுவீர் ஆனதுபற்றி எனது புதல்வியை தந்து விவாகம் செய்ய மனமிட்டேன் உன் கருத்தைச்சொல்லும் அம்மா.

சற்குணாம்பிகை:—பிறந்த மனையும் புகுந்த மனையும் விட்ட பேதைக்கு உற்றார் துணை செய்யாவிட்டாலும் உலகத்தோர் துணை செய்யமாட்டார் என்பதுபோல் நீர்தான்யெனக்கு பிறந்த வீடு ஆகையால் எப்படி செய்தாலும் உமது சித்தம் தங்களுடைய மொழிக்கு பதில் மொழி சொல்லமாட்டேன் அண்ணா.

உத்தமகுணன்:—வெகு சந்தோஷம் நீ உன்னிருப்பிடம் போகுவாயம்மணி.

சற்குணாம்பிகை:—அப்படியே போகின்றேன் அண்ணா.

உத்தமகுணன்:—அடா காவலனே நீ சீக்கிரம் சென்று நமது புரோஹிதரை அழைத்து வாடா.

காவலன்:—அழைத்து வருகின்றேன். ஐயா புரோஹிதரே! தங்களை மந்திரி அதி சீக்கிரத்தில் அழைத்து வரும்படி சொன்னார் வருவீர்.

புரோஹிதர்:—அப்படியா! இதோ வருகின்றேன்.

உத்தமகுணன்:—ஐயா புரோஹிதரே வந்தனம் செய்கின்றேன்.

புரோஹிதர்:—சுகீபவ மகராஜ்! எம்மை அழைத்த காரியமேது தெரியச் சொல்லும்.

உத்தமகுணன்:—ஐயா புரோஹிதரே எனதுபுதல்விக்கு விவாகம் செய்ய யெண்ணமிட்டபடியால் யென்றைக்கு சுபலக்கினம் அதை தெரியச்சொல்லும்.

புரோஹிதர்:—மகராஜ்! தாஙகள் சொன்ன விஷயத்தைப்பற்றி யோசிக்குமிடத்தில் இன்றைக்கெட்டாம் தினத்தில் முகூர்த்தமானபடியால் அன்றையதினம் முகூர்த்தமிட சுபமாகும்.

உத்தமகுணன்:—வெகு சந்தோஷம் அன்றையதினம் நீர் வந்து சேரவேண்டியது இதற்குள்ளாக நான் எல்லாம் சாமான்களை சித்தப்படுத்தி வைக்கிறேன்.

புரோஹிதர்:—மகாபாக்கியம் அரசே அப்படியே வருகின்றேன்.

உத்தமகுணன்:—அடா காவலனே சீக்கிரத்தில் நமது நாடெங்கும் அலங்காரம் செய்குவாயடா.

காவலன்:—ஐயனே தமது இஷ்டப்படி அலங்காரம் செய்கின்றேன்.

உத்தமகுணன்:—நாயகி நமது நாடெல்லாம் அலங்காரம் செய்துவிட்டேன் நீ சென்று சற்குணாம்பிகையையும் மதனசேகரனையும் அழைத்து வந்து அன்னவனுக்கு செய்யவேண்டிய சடங்குகளைச் செய்குவாயடி மாதரசே.

ஸ்ரீமணி:—உமதிஷ்டப்படி அழைத்து வந்து செய்யவேண்டிய சடங்குகளைச் செய்கின்றேன் அம்மா நீயும் உமது புதல்வனும் நமது வீட்டிற்கு வந்து அங்கு நடக்கவேண்டிய சடங்குகளை பூர்த்தி செய்வீர்.

சற்குணாம்பிகை:—அப்படியே வருகின்றேன் அம்மா. இன்றையதினம் எனது புதல்வனாகிய மதனசேகரனுக்கு இந்நாட்டின் வேந்தனுடைய பிரதம மந்திரியின் புதல்வியைத்தந்து விவாகம் முடிப்பதாக எண்ணமிட்டார் உன் கருத்தெதுவோ அதை வெளியிடுமம்மா.

அம்பிகை:—அம்மா நாயகருக்கு விவாகமாவதில் எனக்கேதும் மனவியாகூலம் கிடையாது. ஆனால் எனக்கோர் மனவியாகூலமிருக்கின்றது அது எதென்றால் ஓர் வேந்தனுடைய புதல்வி அகப்படாமல் கேவலமாகிய மந்திரிப் புதல்விதானா அகப்பட்டாள் நம்மைப்போலொத்த வேந்தற்கு அழகல்லவே யென என் மனம்வாட்டமிடுகின்றது அம்மா.

சற்குணாம்பிகை:—அம்பிகா! உனது குணத்திற்கு மெச்சினேன் ஆனால் எந்த காலத்தில் நாம் எதை அநுபவிக்கவேண்டுமோ அந்தந்தக்காலத்தில் அதை அநுபவிக்கதான் வேண்டும் ஆனபோதிலும் பெரிதல்ல நமக்கே நற்காலம் வந்து சேரும் நீ துன்பத்தைக்கொள்ளாதே.

அம்பிகை:—அம்மா உனதிஷ்டத்திற்கு ஏதும் தடையில்லை போகலாம் வருவீர்.

புரோஹிதர்:—மகராஜ் இன்னம் காலதாமதமேன் தங்களுடைய புதல்வியையும் மருமகனையும் அலங்காரம் செய்து கல்யாண மண்டபத்திற்கு அழைத்து வருவீர்.

உத்தமகுணன்:—சேடிகளே நீங்கள் சீக்கிரம் சென்று புதல்வியையும் மருமகனையும் அழைத்து வருவீர்.

தோழிகள்:—அப்படியே அழைத்து வருகின்றோம்.

---

## கல்யாண மண்டபம்.

புரோஹிதர்:—ஓ மதனசேகரு புஷ்ப மாலையை கையில் பிடித்து இதோ நிற்கும்படியான மாதுகண்டத்தில் தரிப்பீர்.

மதனசேகரன்:—அப்படியே தரிக்குரேன்.

வேதியர்கள்:—சுபம், சுபம், சுபம், சுபம்.

மதனசேகரன்:—நாயகி! இனிநாம் அந்தப்புரம் போகலாம் வருவாயடி மாதரசே.

லலிதா:—நாயகா! அப்படியே வருகின்றேன் வருவீர் பிராண நாயகா.

---

## தர்மாங்கதன் தர்பார்.

வசந்தா.—தந்தையே! இதுகாலபரியந்தம் நான் கன்னிகாமடத்தில் சன்னியாசிப்போல் நித்திரைச்செய்துக்கொண்டிருப்பது உமக்கு தர்மமா தாங்கள் என் விஷயத்தை கவனிக்காமல் இருப்பது நலமாகுமா இது தர்ம நீதியல்ல ஆகையால் கூடிய சீக்கிரத்தில் இந்த இரண்டு ரத்தினத்தைக் கொண்டு வந்த உத்தமனைத்தேடி என்னை விவாகம் செய்துக்கொடாவிட்டால் என் ஆவியை அக்கினி குண்டத்திற்கு இரையாக்குவேன் இது உண்மை என்று எண்ணுவீர் தந்தையே.

தர்மாங்கதன்:—அம்மா! நீ துயரமடையாதே நான் எப்படியாகிலும் தேடி வுனக்கு விவாகமுடிக்கின்றேன் நீ அந்தப்புரம் போகுவாயம்மா.

வசந்தர்:—அப்படியே போகின்றேன் தந்தையே.

தர்மாங்கதன்:—அடா காவலனே. நீ வேகமாகச் சென்று நமது மந்திரியை நானழைத்ததாகசசொல்லி அழைத்துவாடா.

காவலன்:—அப்படியே அழைத்து வருகின்றேன் ஐயா நமது வேந்தன் அதிசீக்கிரத்தில் அழைத்து வரும்படி சொன்னார் வருவீர்.

உத்தமகுணன்:—அடா காவலனே இதோ வருகின்றேன்.

உத்தமகுணன்:—ஆ! ஆ! முந்தி ரத்தினம்போல் ரத்தினம் கொண்டுவரும்படி திட்டம் செய்து தண்டனை விதித்தார் அப்படிக்கொற்ற ஆபத்காலம் என்ன நேருகின்றதோ தெரியாது எல்லாவற்றிற்கும் அந்தப்பரம்பொருளாகிய சிவபெருமான் தான் துணை. நாம் போகாவிடில் தண்டனை நேரிடும் போய்பார்ப்போம் வந்தனம் வெகுவந்தனம் என்னை அழைத்த காரியமேது சொல்வீர்.

தர்மாங்கதன்:—மந்திரி நான் ஏதென்றுச்சொல்வேன் எனது புதல்வி கன்யாமடத்திலிருந்து நித்திரை செய்வது நாம் பார்ப்பது நீதியாகுமா விவாகம் செய்யாமலிருப்பது நம்மை போலொத்த வேந்தர் நகைப்பாரே இதற்கென்ன யோசனை செய்யலாம் சொல்லும் மந்திரி.

உத்தமகுணன்:—மகராஜ்! நமது வயிற்றில் பிறந்ததோஷத்திற்கு நாம் கலியாணம் செய்து வைப்பது தான் நீதி இதுயெல்லாம் தெரிந்து எனது புதல்விக்கு விவாகம் முடித்துவிட்டேன் இராஜோத்தமா.

தர்மாங்தகன்:—மந்திரி உமது புதல்விக்கு எந்தவிடத்தில் சம்பந்தம் கூடியது அதைவிபரமாக தெரியச்சொல்லும்.

உத்தமகுணன் :—மகராஜ்! ஆனால் சொல்லுகிறேன் கேளும். எப்படியென்றால் தாங்கள் ரத்தினம் பத்துதினத்தில் கொண்டுவராவிட்டால் சிரச்சேதம் செய்வேனென்று திட்டம் செய்தீரே அதுமுதற் கொண்டு அன்னபானாதிகளை வெறுத்து மஞ்சத்தின் மீது எட்டு தினமாக சோகமாய் சயனித்திருக்க, இதைக் கண்ட எனது தேவியும் புதல்வியும் துக்கமடைந்து இனி ரத்தினம் கிடைக்கபோகிறதில்லை நமது பிதாவின் சிரம் வேந்தன் கொய்வது நிஷ்சயம்தான் இனி இவ்வுடலை வைத்திருப்பது நலமல்லவென எண்ணமிட்டு அக்கினி குண்டம் வளர்க்கச்செய்து புதல்வி மஞ்சளாடைதரித்து அக்கினிகுண்டத்தை இரண்டு சுற்று சுற்றிவரும்போது அநேக கோடிகும்புகள் சூழ்ந்திருக்க அச்சமயத்தில் ஓர் வாலிபன் எனை அழைத்து சவிஸ்தாரத்தை கேட்க அச்சமயத்தில் யான் நடந்த சங்கதியெல்லாம் விபரமாகச்சொல்ல இதைக்கேட்டு அந்தவாலிபன் நகைத்து ஐயா ஐம்பத்தைந்து தேசத்துக்கதிபதியாகியவேந்தன் கேவலமாகிய ரத்தினம் தேடுவதற்கு சக்தியற்று மந்திரி சிரம் கொய்ய மனமிடலாகுமா இது வேந்தற்கு நீதியாகுமா இப்படி கன்னிகா மடத்திலிருக்கும் பெண்பாவை அக்கினி பிரவேசமானால் இந்தப் பாதகம் அவ்வேந்தனை விடுமா இப்பாதகம்விடாது ஆனபோதிலும் நீ துயரப்படவேண்டாம் உனது புதல்வியை அழைத்து அந்தப்புரம் போகச்சொல்லும் அந்த ரத்தினம் நான் தருகின்றேன் எனச் சொல்லி ரத்தினம் கொடுத்துவிட்டு தன்மனைக்கு சென்றான் அதின் பிறகு ரத்தினத்தை பெற்றுக்கொண்டு புதல்வியை அந்தப்புரம் அனுப்பிவிட்டு ரத்தினம் யெடுத்துக்கொண்டுவந்து தங்களிடம் கொடுத்துவிட்டு என் மனைக்குச்சென்று அந்த வாலிபன் வாசம் செய்யப்பட்ட இடம் கண்டு பிடித்து அன்னவனுடைய தாயாரை அழைத்து விசாரிக்க அந்த தேவி தனது சவிஸ்தாரத்தை தெரிவித்தாள் அது எப்படி என்றால் அமருபுரிநாட்டின் வேந்தனாகிய கருணாகரபூபாலனுடைய முதல் மனைவியின் புத்திரனும் இந்த ரத்தினம் கொடுத்தவன் இதை அறிந்து சந்தோஷங்கொண்டு அவ்வேந்தப் புதல்வனுக்கு எனது புதல்வியைத் தந்து விவாகம் செய்து சந்தோஷமடைந்தேன் மகராஜ்.

தர்மாங்கதன்:—ஆ! ஆ! மந்திரி வெகு சந்தோஷமடைந்தேன் ஆனால் உனது மருமகனுக்கு என் புதல்வியைத் தருக மனமிட்டேன் உன் கருத்தைச்சொல்லும் மந்திரி.

உத்தமகுணன்:—அப்படி பிரம்ம விதியிருந்து முடிந்தால் சந்தோஷம் தான் நீர் கூடிய சீக்கிரத்தில் முடிப்பீர்.

தர்மாங்கதன்:—ஆகட்டும் அப்படியே செய்கின்றேன் நான் அந்தபுரஞ் போகின்றேன்;

உத்தமகுணன்:—அப்படியே போகுவீர் மகராஜ்.

---

## அந்தப்புரம்.

சித்திரரேகை:—அடிசேடிகளே நான்யென்னவென்றுச் சொல்வேன் எனது கற்பத்தில் உதித்த புதல்வி புஷ்பவதியாகி இதுகாலபரியந்தம் கன்னிகாமட்டத்தில் சோகத்துடன் சயனிக்க காலமாச்சுதே நாம் நேத்திரோஸ்தவமாக பார்க்கவிதிவந்ததே இதற்கேது செய்யலாம் ஏதாவது ஓர் வேந்தனைப்பார்த்து விவாக முடிப்போமென்றால் புதல்வி அதை எல்லாம் வெறுத்து ரத்தினங் கொண்டுவந்த புருடனை விவாகம் செய்வேனே தவிர இதறமானவரை கருதேனென்று கூறினளே இதைக்கேட்ட நாயகரும் துக்கத்தில் மூழ்கி இருக்கின்றார் இந்த விதிவசத்திற்கு என்ன செய்குவேன் தோழி.

தோழி:—அம்மா நீ துயரம் அடைவதினால் நலமல்ல எந்த இடத்தில் பிரம்மன் மூடிப்போட்டிருக்கின்றானோ தெரியாது நாம் துன்பம் அடைவதில் சுகமல்லவம்மணி.

சித்திரைரேகை:—அடி தோழி நீ சொன்னதெல்லாம் சரிதான் நம்மாலாவது ஒன்றுமில்லை எல்லாப் பரம்பொருளாகிய சிவபெருமான் செயல்தான் ஆனால் இன்னம் எனது நாயகன் வரவில்லை.

தோழி:—அம்மா! வேந்தருக்கு அரசில் என்னக்காரியமோ அதை எல்லாம் தீர்த்துக்கொண்டல்லவா அந்தப்புரம் வருவார்

அப்படி இருக்க நீ இப்படி துயரமடையலாமா வருவார் வருவார்.

சித்திரைரேகை:—சரிதான் தோழி நீ சொல்வதெல்லாம் உண்மையான மொழிதான்.

தர்மாங்கதன்:—அடி தோழிமார்களே எனது தேவி என்ன செய்கின்றாள்.

தோழி:—ஐயனே! தாங்கள் வரவில்லையென்று மனவியாகூலமடைந்து வரவை எதிர் பார்த்துக்கொண்டிருக்கின்றாள்.

தர்மாங்கதன்:—அப்படியா என் வரவை தேவிக்கு சொல்வீர்.

தோழி:—அப்படியே சொல்குரோம்,

தோழி:—அம்மா! தங்களுடைய் நாயகர் துவாரத்தில் வந்திருக்கின்றார்.

சித்திரரேகை:—ஆ! நாயகன் வந்தாரு? இதோ வருகின்றேன்.

சித்திரரேகை:—நாயகா! வந்தனம் செய்கின்றேன் தாங்கள் இன்னேர வரைக்கும் காலதாமதம் செய்து வரக்காரணமேது தெரியச்சொல்லும் நாதா.

தர்மாங்கதன்:—நாயகி? நமது புதல்விக்கு விவாகமில்லாமல் ரத்தினம் கொண்டுவந்தவரை மாலையிடுவேனென பந்தயமிட்டிருப்பதை எண்ணமிட்டு துயரத்துடன் இருக்கும் காலத்தில் மந்திரி யென் முகத்தைதை நோக்கி ஏதுக்கவலை என்று கேட்டார் நடந்ததை வொளியாமல்சொல்ல அதைக்கேட்டு புன்சிரிப்படைந்து இராஜோத்தமா ரத்தினம் கொண்டுவந்தவர் அமராபுரிநாட்டை பரிபாலனம் செய்யும் கருணாகரபூபாலனுடைய ஜேஷ்ட குமாரனாகிய மதன சேகரனென அறிந்து அன்னவனுக்கு மந்திரி புதல்வியை தந்து விவாகம் முடிப்பித்தானும் ஆகையால் நாமும் அந்த இராஜகுமாரனுக்கு நமது புதல்வியை தந்து விவாகம் முடிப்போமென எண்ணமிட்டு அக்கருத்தை உன்னிடம் சொல்லி அபிப்

பிராயம் தெரிந்திடலாமென வருகலானேன் உனதிஷ்டத்தை சொல்லும் மாதரசே.

சித்திரரேகை:—நாயகா! கரும்பு தின்னக்கூலிகேட்பவருமுண்டா அதுபோல் கையில்கிடைத்த வெண்ணெதனைவிட்டு நெய்யிற்கு அழுவாருண்டா நீர் கூடிய சீக்கிரம் கொலுவிற்கு சென்று வேதியரை அழைத்து நாள் பார்த்து விவாகத்தை முடிப்பீர் நாயகா.

தர்மாங்கதன்:—நாயகீ நீ துயரம் அடையவேண்டாம் உனதிஷ்டப்படி இதோ யான் சென்று வேதியரை அழைப்பித்து விவாகத்திற்கு தினம் பார்க்கச்செய்கின்றேன்.

சித்திரரேகை:—அப்படியே போய் வருவீர்.

தர்மாங்கதன்:—இதோ போய் வருகின்றேன் நாயகீ.

தர்மாங்கதன்:—அடா காவலனே.

காவலன்:—மகராஜ் வந்தனம் செய்கின்றேன் அழைத்த காரியமேது தெரியச்சொல்லுமய்யா.

தர்மாங்கதன்:—அடா காவலனே நீ சீக்கிரம் சென்று நமது நாட்டிலிராகின்ற புரோஹிதரை அதி வேகமாக அழைத்து வாடா.

காவலன்:—அப்படியே அழைத்து வருகின்றேன்.

காவலன்:—ஐயா வேதியரே உம்மை வேந்தர் அழைத்து வரும்படிச்சொன்னார் சீக்கிரம் வருவீர்.

புரோஹிதர்:—அடா துஷ்டப்பயலே நம்மை அழைத்தக்காரியமேது உனக்கு தெரிந்தால் சொல்லடா.

காவலன்:—ஐயா புரோஹிதரே நமக்கேது தெரியும் அழைத்து வரும்படிச்சொன்னார் தவிர மற்றது யேதும் சொல்லவில்லை ஆகையால் வருவீரா வரமாட்டீரா சொல்லும்.

புரோஹிதர்:—அடா காவலனே செங்கோலுக்கு முந்தி சங்கீதம்

பாடுமா நான்வரமாட்டேனென்றால் விட்டுபோவாரா ஆகையால் இதோ வருகின்றேன்.

காவலன்:—வெகு சந்தோஷம் வருவீர்.

தர்மாங்கதன்:—வந்தனம் வெகு வந்தனம் புரோஹிதரே அந்த ஆசனத்தில் அமருவீர்.

புரோஹிதர்:—சுகீபவா! சுகீபவா! இராஜோத்தமா என்னிடம் தர்பாசனமிருக்கின்றது நீர் நியமித்த ஆசனம் வேண்டாம் ஆனால் என்னை அழைத்த காரியம் தெரியச்சொல்லும் மகராஜ்.

தர்மாங்கதன்:—புரோஹிதரே எனது புதல்வியாகிய வசந்தாவிற்கும் மதனசேகரனென்னும் புருடனுக்கும் விவாகம் முடிக்கயெண்ணமிட்டேன் ஆகையால் சுபதினத்தை பார்த்து சொல்வீர்.

புரோஹிதர்.—மகராஜ் அப்படியே சொல்குரேன் கேளும் எப்படியென்றால் இவ்வருடம் இம்மாதத்தில் சுபதினங்கள் கோடானுக்கோடியுண்டு ஆனால் இன்றைக்கெட்டாம் தினத்தில் கன்யாலக்கினமானபடியால் இந்த இரண்டு பேர்களுக்கும் குரு பார்வையானபடியாலும் விவாகம் செய்ய எதுக்கும் தடையில்லை ஆனால் உனக்கு மருமகனாக வரும் வேந்தனால் மஹாகியாதியடையப் போகுவீர் சுகமாக அத்தினத்தில் விவாகம் செய்யலாம்.

தர்மாங்கதன்:—புரோஹிதரே வெகு சந்தோஷம் நான் நாட்டை அலங்காரம் செய்து ஐம்பத்தைந்து தேச வேந்தருக்கும் தெரிவித்து வேண்டிய சாமக்கிரிகைகளை சித்தம்செய்கின்றேன் நீர் தடை செய்யாமல் கூடிய சீக்கிரம் வந்து சேரவேண்டியது.

புரோஹிதர்:—மகாபாக்கியம் அப்படியே வருகின்றேன்.

---

# மந்திரி அந்தப்புரம்.

உத்தமகுணன்:—அப்பா மருகனே உனக்கு யான் விவாகம் செய்ததைப்பார்த்து வேந்தன் சந்தோஷமடைந்து தனது புதல்வியாகிய வசந்தாவை தந்து உனக்கு விவாகமுடிக்கவேண்டுமென்று மனமிட்டிருக்கின்றார் உன் கருத்தெதுவோ தெரியச்சொல்லும்.

மதனசேகரன்:—அய்யா அப்படி செய்தால் வெகு சந்தோஷந்தான் ஆனால் எனது தாயாரை கேட்டறிந்து வாக்களிப்பீர்.

உத்தமகுணன்:—சரிதான் அப்படியே கேழ்க்கின்றேன் நான் சொன்னப்படி உனது தாயாரை வரச்சொல்வீர்.

மதனசேகரன்.—அப்படியே சொல்குரோன்.

மதனசேகரன்:—அம்மா வந்தனம் செய்குரேன்.

சற்குணம்பிகை:—கல்யாண் ! அடா யென் செல்வமே நீ இவ்வளவு அவசரத்துடன் வரவேண்டியக்காரணமேது சொல்லுமடா.

மதனசேகரன்:—அப்பா உம்மை எமது மாமனாராகிய மந்திரி அதி சீக்கிரமாக வரச்சொன்னார் போவீர்.

சற்குணம்பிகை:—உனதிஷ்டப்படி போகின்றேன் கண்மணியே.

சற்குணம்பிகை:—அண்ணா வந்தனம் என்னை அழைத்தக்காரியமேது தெரியச் சொல்வீர்.

உத்தமகுணன்:—அம்மா மற்றேதுமில்லை நீ பயப்படவேண்டாம் ஆனால் நமது பாலகனாகிய மதனசேகரனுக்கு எனது புதல்வியை தந்து விவாக முடித்ததை வேந்தன் தெரிந்து சந்தோஷமடைந்து தனது புதல்வியாகிய வசந்தாவை கொடுத்து விவாகம் செய்து வைக்கவேண்டுமென மனமிட்டு வேதியர் மூலமாக தினம் பார்த்து நாள் குறித்திருக்கின்றார் ஆனதுபற்றி

உன் கருத்தெதுவோ அதை தெரிவித்தால் வேந்தனுக்குச் சொல்லலாகும்.

சற்குணாம்பிகை:—அண்ணா! நம்மாலாகவேண்டியக் காரியமேது எல்லாம் ஐயனுடைய செயலன்றி வேறில்லை நாம் தடுத்தால் முடியாமல் போகுமா அப்படியிருக்க அவர் மனதுபோல் முடித்துக்கொள்ளட்டும் நீர் ஏதும் சொல்லவேண்டாம் யானும் சம்மதித்தது போல் சொல்வீர்.

உத்தமகுணன்:—அம்மா உனதிஷ்டப்படி சொல்கிறேன் நீ அந்தப்புரம் போவீர்.

சற்குணாம்பிகை:—அப்படியே போகின்றேன் அண்ணா.

## தர்பார்.

தர்மாங்கதன்:—அடா காவலனே இன்னம் ஏன் மந்திரி வரவில்லை சீக்கிரம் சென்று அழைத்து வருவாயடா,

காவலன்:—அப்படியே அழைத்து வருகின்றேன் மகராஜ்.

காவலன்:—மகராஜ்! உம்மை வேந்தர் அழைத்து வரும்படிச் சொன்னார் வருவீர்.

உத்தமகுணன்:—இதோ வருகின்றேன் காவலனே.

உத்தமகுணன்:—மகராஜ்! வந்தனம் செய்கின்றேன் எம்மை அழைப்பித்தக்காரியமேது தெரியச்சொல்லும் மகராஜ்.

தர்மாங்கதன்:—மந்திரி உமது மருமகனுக்கு எனது புதல்வியை தந்து விவாகம் செய்விக்கவேண்டுமென சொன்னதற்கு நீர் மறுமொழி சொல்லாமல் போனீரே உன் கருத்தெதுவோ ஒளியாமல் சொல்வீர்.

உத்தமகுணன்:—மகராஜ்! தாங்கள் கோரியகருத்துக்கு யான் தடுக்க நீதியாகுமா ஆகையால் நீங்கள் சந்தோஷமாக விவாகமுடித்து நேத்திரோத்ஸவமாக பார்ப்பீர்.

தர்மாங்கதன்:—மந்திரி வெகு சந்தோஷம் ஆனால் நீ சீக்கிரத்தில் நமது நாட்டை அலங்காரம் செய்து அதன் பிறகு நமக்கடங்கிய ஐம்பத்தைந்து தேச வேந்தருக்கு மணவோலை எழுதி அனுப்புவீர்.

உத்தமகுணன்:—மகராஜ் தாங்கள் சொல்லிய மொழிக்கு மறுமொழிக்கூர யெம்மாலாகுமா இதோ அரைவினாடியில் இன்னாடு யெங்கு மலங்காரம் செய்துவிடுகின்றேன்.

உத்தமகுணன்:—அடா காவலனே நமது நாட்டிலிருக்கும்படியான பந்தல் வேலை செய்பவரை யழைத்துவந்து இன்னாடு முழுமையும் அலங்காரம் செய்யும்படி திட்டம் செய்து சீக்கிரத்தில் அலங்காரவேலை முடிக்கவேண்டியது.

காவலன்:—மகராஜ் இதற்கோர்தடயா? நாளை உதயத்திற்கெல்லாம் நமது நாடு முழுமையும் அலங்காரம் செய்துவிட்டு மறுவேலை பார்க்கின்றேன்.

உத்தமகுணன்:—அடாகாவலனே இந்த வேலைதீர்ந்தவுடன் நீ மணவோலையெடுத்துக்கொண்டு இந்த ஐம்பத்தைந்து நாட்டிற்கும் போகவேண்டும் சீக்கிரத்தில் முடிப்பீர்.

காவலன்:—மகராஜ் தங்களுடைய வாய்ச்சொல் வாருமுந்தி நமது நாடு யெங்கும் அலங்காரமாகிவிட்டது பார்த்தீரு.

உத்தமகுணன்:—வெகு சந்தோஷம் ஆனால் இந்த மணவோலை யெடுத்துக்கொண்டு கொங்கன, காஸ்மீர, நேபால, மருட, கலிங்க, கன்னட, சௌஷ்ட, அங்க, வங்க, இப்படிச்சொல்லப்பட்ட ஐம்பத்தைந்து நாட்டின் வேந்தருக்கு கொடுத்துவிட்டு சீக்கிரத்தில் வந்து சேரவேண்டியது.

காவலன்:—அப்படியே கொடுத்துவிட்டு வருகின்றேன்.

## கன்னிகாமடம்.

தர்மாங்கதன்:—அம்மா வசந்தா யான் உனக்கு விவாகம் செய்ய மனமிட்டு நமது நாடெங்கும் அலங்காரம் செய்துவிட்டு ஐம்பத்தைந்து தேசவேந்தருக்கும் திருமணப்பத்திரிகை அனுப்பிவிட்டேன் உன் கருத்தெதுவோ வெளியிடும் அம்மணி.

வசந்தா:—தந்தையே நீர் செய்ததெல்லாம் நன்மைதான் ஆனால் எந்த வேந்தருக்கு மாலையிடும்படி நியமித்தீர் தெரியச் சொல்வீர்.

தர்மாங்கதன்:—அம்மணி உனக்கு ரத்தினம் எந்த வேந்தன் கொண்டு வந்தானோ அந்த வேந்தனை தான் நியமித்தேன்.

வசந்தா:—பிதா ரத்தினம் கொண்டு வந்த வேந்தன் இன்னவரென்று தெரிந்தீரு இது யெல்லாம் வீண்மொழிதான் சபைதனில் வந்து நின்று என் மனதில் யெண்ணமிட்டவரை நாடி பரமனை தியானித்து மாலை சுழட்டி போடுவேன் அந்த மாலை யென்னவர் கழுத்தில் விழுகின்றதோ அன்னவரை நான் விவாகம் செய்துக்கொள்வேன் நீர் சொல்லும்படியான மொழி போல் நடக்க மனம் கொள்ளேன்.

தர்மாங்கதன்:—அம்மா உமது இஷ்டப்படி செய்துகொள்.

தர்மாங்கதன்:—மந்திரி இதோ நமது விவாகத்திற்கு வந்தவர்க்கெல்லாம் தகுமான விடுதிகள் கொடுப்பீர்.

மந்திரி:—மகராஜ்! தங்களுடைய வாய் சொல் வாரு முந்தி நமது மனைக்கு வந்த வேந்தருக்கெல்லாம் தகுமான விடுதிகள் தந்து அவரவரை உபசரிக்கிறேன்.

தர்மாங்கதன்:—வெகுசந்தோஷம் மந்திரி நமது கல்யாண மண்டபத்திற்கு நாளை உதயத்திற்கெல்லாம் வேந்தரை வரும்படி திட்டம் செய்குவீர்.

உத்தமகுணன்:—மகராஜ்! வேந்தரெல்லோரையும் வரும்படி யேன் திட்டம் செய்வது.

தர்மாங்கதன்:—மந்திரி கல்யாணமண்டபத்திற்கெல்லாம் வேந்தர் வந்தால் யெனது புதல்வி ஓர் புஷ்பமாலேதனை சுழட்டிவிடுகின்ருளாம் அந்தமாலே யெவர் கண்டத்தில் விழுகின்றதோ அன்னவர்தான் ரத்தினம் கொண்டு வந்தவரென்று நம்பிக்கைபடுமென்று மன மிட்டிருக்கின்ருள்.

உத்தமகுணன்:—மகராஜ்! தாங்கள் எந்தன் மருமகனுக்கு உமது புதல்வியை தருகின்றதாகசொன்னவர் இச்சமயத்தில் இப்படி பிசகி மொழியாடலாகுமா. இது வேந்தற்கு நீதியாகுமா! நம்மைப்போலொத்த வேந்தர் இம்மொழிக் கேட்டால் முந்தி யொருவனுக்கு கொடுப்பதாக நிச்சயித்து பிறகு பூமாலே யெரிவது யென்று சொன்னல் நீதியல்லவே இது நீரே யோசிக்கவேண்டியது.

தர்மாங்கதன்:—மந்திரி! இதெல்லாம் வீண்மொழி யெக்காலத்திலும் புதல்விமனம்போல் நடக்கவேண்டுமே தவிர மற்றப்படி நடக்க நம்மாலாகாது.

உத்தமகுணன்:—மகராஜ்! உமதிஷ்டப்படி நடக்கட்டும் ஆனல் யான் அந்தப்புறம் போய் வருகின்றேன்.

தர்மாங்கதன்:—அப்படியே சென்று அதிசீக்கிறத்தில் வருவீர்.

உத்தமகுணன்:—அப்படியே வருகின்றேன்.

## மந்திரி அந்தப்புரம்.

உத்தமகுணன்:—நாயகி! இதென்னக்காலக்கொடுமை முந்தி நமது மருமகனுகிய மதனசேகரனுக்கு இராஜப்புதல்வியை கொடுத்து விவாகம் செய்துவைக்கிறேனென்று சொன்னவர் இப்போது வேந்தாதி வேந்தர்கள் சூழ்ந்த சபைதன்னில் புதல்வி வந்து நின்று பூமாலேயெரிந்தால் அந்த பூமாலே யெந்த வேந்தர் கண்டத்தில் வீழ்கின்றதோ அந்த வேந்தனே மாலேயிடுவேனென்று சொன்னதாக வேந்தன் உரைத்தார் இம்மொழியை நமது மருமகன் கேட்டால் நகையாரு நாம்சொல்லாமல் இருக்கப்போகாது இதற்கென்னசெப்புவேன்.

ஸ்ரீமணி:—நாயகா! இக்காரணம் வேந்தருக்கழகானதுதான் ஆனால் அம்மாது எந்த வேந்தனை மனதில் நாட்டமிட்டிருக்கின்றாளோ அன்னவர் கண்டத்தில் தான் விழுமே தவிர மற்றபடி தவராது இந்த நிலைதான் பதிவிர்தா தர்ம்ம தெரிந்த நிலைமையாகும்.

உத்தமகுணன்:—அப்படியா ஆனால் வெகு சந்தோஷந்தான் நா மெல்லோரும் வேடிக்கைபார்ப்பவர்போல் போகலாம் இச்சம யத்தில் மருமகன் வந்து கேட்டால் எம்மொழிச்சொல்வது.

ஸ்ரீமணி:—நாயகா! மருமகனுக்கு உண்மை சொல்லாமல் மறைக் கலாகாது ஆகையால் நடந்த சங்கதிகளையெல்லாம் விபரமாக தெரியச்சொல்லும் அதன் பிறகு அவரிஷ்டம்.

மதனசேகரன்:—மாமா! தாங்கள் ஏன் மனவியாகூலமடைந்து முகம் வாடி சோகமாகயிருக்கக்காரணமேது. என்ன ஆபத் காலம் நேர்ந்தது அதை ஒளியாமல் யெந்தனுக்கு விபரமாக சொல்லும்.

உத்தமகுணன்:—ஐயா மருமகனே நான் எதென்று சொல்லு வேன் முந்தி நீ கொடுத்த ரத்தினம் கொண்டு போய் கொடுக்க அதைப் பெற்றுக்கொண்டு இந்த ரத்தினம் கொண்டுவந்த வரை மாலையிடுவேனென்று சொல்ல நான் ஒளிக்காமல் உனது சவிஸ்தாரத்தை உண்மையாகச் சொல்ல சம்மத மடைந்து விவாகத்திற்கு யெத்தினமிட வேந்தன் புதல்வி இராஜனை பார்த்து மந்திரி சொன்னமொழியை நம்பிநீ இப்படி செய்யலாகுமா ஆனால் யான் சபைக்கு வந்து பூமாலை சுழட்டி விடுவேன் அம்மாலை எந்த வேந்தர் கண்டத்தில் விழுகின்றதோ அன்னவரை மாலை சூட்டுவேனென்று பெரும்பந்தியமிட்டிருக் கின்றாள் இதை யோசித்து நாம் சொன்னபடி நடக்கவில்லையே என என்மனம் பெரும் துக்கமடைந்து நின்றேன் இதுதான் சவிஸ்தாரம்.

மதனசேகரன்:—மாமா இதைப்பற்றி தாம் கவலை இடுவதுநல மல்ல இது வுண்மை தான் க்ஷத்திரியவம்சத்தில் பிறந்த மாதர் கள் கன்னிகாமடத்திலிருக்கும் சமயத்தில் எந்தபுருடனை நினைந் திட்டாரோ அப்புருடனைநேரில் மாலை சூட்டாமல் பதிவிருதா

தர்மத்தை நாட்டி மாலை சுழட்டி விடுவார் அம்மாலை தான் கோரிய புருடன் கண்டத்தில் விழுமே தவிர இதராள் கண்டத்தில் ஒருபோதும் விழாதுஇதுபோல்முந்தி அரசாண்ட வேந்தராகிய அரிச்சந்திரன், நளன் புரூரவன் முதலானவர்களும் இப்படி மாலை சூட்டி விவாகம் முடித்திருக்கின்றார்கள் ஆகையால் நீர் துக்கமடையவேண்டாம்.

உத்தமகுணன்:—வெகு சந்தோஷம் கொலுவிற்கு சென்று வருகின்றேன்.

மதனசேகரன்:—அப்படியே போவீர்.

---

## தர்பார்.

---

உத்தமகுணன்:—மகராஜ்! சகலமான வேந்தரெல்லாம் கொலுவில் வந்திருக்கின்றார் இன்னும் தாமதமேன் தமது புதல்வி தனை சபைக்கு அழைத்து வருவீர்.

தர்மாங்கதன்:—வெகு சந்தோஷம் சேடிகளே நீங்கள் சென்று யெனது புதல்விதனை அலங்காரம் செய்து இச்சபைக்கு அழைத்து வருவீர்.

தோழிகள்:—அப்படியே அழைத்து வருகின்றோம் மகராஜ்.

தோழிகள்:—அம்மா வசந்தா இன்றைக்கல்லவா நற்காலம் வந்து முடிந்தது உம்மை அலங்காரம் செய்து சபைக்கு அழைத்து வரும்படி திட்டம் செய்தார் வருவீரம்மணி.

வசந்தா:—அப்படியா இதோ வருகின்றேன்.

வசந்தா:—பிதா வந்தனம் செய்யுகின்றேன்.

தர்மாங்கதன்:—அம்மா இன்னும் தாமதமென்ன உனது எண்ணம்போல் நடத்தும் அம்மணி.

வசந்தா:—அப்படியே செய்கின்றேன் அம்மா தோழி இதோ இந்தசபைதனில்வந்திருக்கப்பட்ட ஒவ்வொரு வேந்தனுடைய நாடும் அவர் பிரதாபமும் சொல்லுமம்மணி.

தோழி:—அப்படியே சொல்கிறேன் கேளும்.

தோழி:—அம்மா வசந்தா இவர் அங்கதேசத்தைப் பரிபாலிக்கும் படியான உத்தம புருடன், நீதிதவராத மகாவல்லவர்.

வசந்தா:—தோழி தர்மகுணமில்லாத வேந்தன். முந்திக்கு நட.

தோழி:—அம்மா இவர் கலிங்கதேசத்து மன்னவர் மகா வீரபிரதாபமுடையவர்.

வசந்தா:—ஆ! ஆ! அப்படியா வீரபிரதாபமிருந்தபோதிலும் யுத்தரங்கத்தில் பின்னிடுவார்.

தோழி:—இவரைப்பார்த்தாயா? இவர் காஷ்மீர் தேசத்து வேந்தன் மகா தனவந்தன், தர்மிஷ்டி.

வசந்தா:—வெகு நேத்தி இவனே மூடமதியுடையவன்.

தோழி.—இவர் நேபாளதேசத்தை பரிபாலிப்பவர் அம்மணி.

வசந்தா:—சீ! சீ! இதெல்லாம் பெரிதல்ல நான் கோரிய புருடன் இந்த வேந்தர் சபையில் அகப்படவில்லை ஆனல் நான் இம் மாலையை சுழற்றி விடுகின்றேன் அது நான் கோரினவர் கண்டத்தில் விழவேண்டும்.

வசந்தா விருத்தம்.

---

சங்கரசிவமே போற்றி சதுர்வேதப் பொருளே போற்றி
மங்கைபார்வதி நேசா போற்றி மாசில்லாசுடரே போற்றி
பொங்கமாயுன்பதத்தைநம்பி பூமாலை விடப்போகின்றேன்
இங்கு என் மனது போல இம்மாலைவிழவேகாப்பீர்.

வசந்தா:—ஓ சச்சிதானந்தப் பொருளே! எப்பிராணிகளையும் காக்கப்பட்ட தீனரக்ஷகா! உமது பாதம் இரவும் பகலும் துதிப்பது உண்மையானால் இதோ மாலைதனை சுழட்டி விடுகின்றேன் இம்மாலை எனக்கு எந்தப்புருடன் இந்த ரத்தினம் கொண்டு வந்துக் கொடுத்தாரோ அன்னவர் கண்டத்தில் விழ வேண்டும் கைலாசபதியே.

பிரம்மதேவன்:—ஓ சங்கரமூர்த்தியே நாமெல்லோரும் இந்த கல்யாண மகிக்ஷியை பார்த்துக் கொண்டிருக்கின்றோமல்லவா ஆனால் இம்மாது கோரியப்புருடன் சொந்த நாயகியுடன் மறுவீதியில் நித்திரைப் புரிகின்றான் அன்னவன் கண்டத்தில் இம்மாலை யெப்படி விழும்.

பரமன்:—ஓய் பிரம்மதேவா இது யெல்லாம் நம்முடைய செயல் தான் நாம்தான் முன்னின்று அம்மாலை மன்னவன் கண்டத்தில் விழும்படி செய்யவேண்டும்.

பிரம்மதேவன்:—சரிதான் உமதிஷ்டப்படி செய்வீர்.

{ இங்கு பூமாலை ககனமார்க்கமாகப் பறந்து மதனசேகரன் கண்டத்தில் விழுவது. }

மதனசேகரன்:—இதென்ன ஆச்சரியம் நாம் அம்மாது விவாகத்திற்கு போகலாகாதென்று வெறுத்து நமது கிரஹத்தில் சயனித்துக்கொண்டிருக்க நிரந்தரமாக இம்மாலை நமது கண்டத்தில் விழவேண்டியக்காரணமென்ன? இது யெல்லாம் ஐயனுடைய செயலன்றி வேறல்ல இன்னம் யென்ன நடக்கிறதே பார்க்கலாம்.

தர்மாங்கதன்:—மந்திரி இது என்ன ஆச்சரியமாக இருக்கிறது நமது புதல்விவிட்டமாலையானது ககனமார்க்கமாக பறந்து போகின்றது அது என்ன மாயமோ இந்த சபைதனில் கோடானுக்கோடி வேந்தரிருக்க அவர்களை எல்லாம் வெறுத்து போகின்றதே நாம் இதன் பின் தொடர்ந்துபோக நீதியாகுமா.

உத்தமகுணன்:—இராஜகம்பீரா இப்படி சொல்வது நீதியாகுமா நம்மாலாகவேண்டியக்காரண மேதும் கிடையாது இதெல்லாம் ஐயனுடைய செயலன்றி வேறென்றுமில்லை ஆனால் நமது காவலனை பின் தொடரச்செய்து அம்மாலை எவர் கண்டத்தில் விழுகின்றதோ அதை பார்த்து வரும்படி வுத்திரவு செய்து அனுப்புவீர்.

தர்மாங்கதன்:—நல்லது உமது இஷ்டப்படி அனுப்புகின்றேன் அடா காவலனே நீ சீக்கிரம் சென்று இம்மாலை எந்த வேந்தர் கண்டத்தில் விழுகின்றதோ அதைப் பார்த்து ஓடி வந்துச் சொல்லும்.

காவலன்:—நாம் இந்தப்பூமாலையுடன் நடக்க முடியவில்லை இன்னம் ஓடிப்பார்க்கலாம் ஆ! ஆ! இவர் நமது மந்திரியினுடைய மருமகனல்லவா அப்படியிருக்க இம்மாது லக்ஷிமியோ, பார்வதியோ, அந்த பிரம்மதேவனுடைய நாவிலிருக்கும் சரஸ்வதியோ, இந்திராணியோ, மாயன்சகியோ, வனகன்னிகையோ, இவர்களெல்லாம் இம்மாதின் சுண்டுவிரலுக்கு ஈடாகமாட்டார். இப்படிக்கொற்ற அழகு வாய்ந்த மாதை மாலையிட்டவர் தானு கேவலமாகிய மந்திரியினுடைய புதல்வியை மாலையிட்டார் நமது இராஜன் புதல்வியும் மந்திரி புதல்வியும் இம்மாதுக்கு ஊழியம் செய்யக்கூடத்தரமல்ல. நாம் கேவலயாகிய ஊழியக்காரன் நமது நேத்திரத்திற்கே இவ்வளவு அழகு தோற்றினால் வேந்தர் கண்டால் எப்படி மனம் பதருவார் நாம் இங்கு நிற்கலாகாது நாம் வந்தக்காரியத்தை நமது வேந்தனுக்குபோய்ச் சொல்வோம் வந்தனம் வெகு வந்தனம் இராஜகெம்பீரு.

தர்மாங்கதன்:—என்ன விசேஷமடா அம்மாலை எவ்வேந்தர் கண்டத்தில் விழுந்தது சொல்லடா.

காவலன்:—மகராஜ்! நான்யேதென்றுச்சொல்வேன் அம்மாலையானது நமது மந்திரி மருமகன் கண்டத்தில் விழுந்தது அன்னவர் மந்திரிவீட்டிற்கு எதிராகவோர் வீட்டில்குடியிருப்பவர் போல் காட்டுகிறது. இப்படியிருந்தும் அன்னவர் சமீபத்தில்

சயனித்துக்கொண்டிருந்த மாதுரத்தினத்தைப் பார்த்தால் இந்த ஈரேழுபுவனத்திலும் அம்மாதுக்கு சமமான மாது கிடையாது. ஆனால் நமது புதல்வி விட்டெறிந்தமாலை அன்னவர் கழுத்தில் தான் விழுந்தது.

தர்மாங்கதன்:—வெகுசந்தோஷம் மந்திரி நீர் நமது பட்டத்து ஆனைதனை அலங்கரித்துக்கொண்டு அன்னவரை அதன் மீது ஏற்றி நாலு வீதியும் கோலம் வந்து கூடிய சீக்கிரத்தில் இந்த விடம் வந்து சேரவேண்டியது.

உத்தமகுணன்:—அப்படியே அழைத்து வருகின்றேன். அடா மவுத்துக்காரா சீக்கிரம் நமது பட்டத்தானைதனை அலங்காரம் செய்வாயடா.

மவுத்துக்காரன்:—ஐயா சபைதன்னில் மகாராஜா சொல்லிய சொல்லைக்கேட்டு உடனே யான் வந்து நமது பட்டத்தானைகளை அலங்காரம் செய்து வைத்திருக்கின்றேன்.

உத்தமகுணன்:—வெகு சந்தோஷம் ஆனால் யான் வசிக்கும் படியான வீதிமார்க்கமாக அழைத்துக்கொண்டுவாடா.

மவுத்துக்காரன்:—அப்படியே அழைத்துக்கொண்டு வருகின்றேன்.

---

## மதனசேகரன் வீடு.

அம்பிகை:—நாயகா! என்னை அருந்தவம் செய்து பெற்ற தாய் தந்தைமாரிடம் யான் அதிக செல்வத்துடன் இருக்கும் காலத்தில் ஒரரக்கன் என்னைக்கொண்டு வந்து கடுஞ்சிறைவைத்திருந்தான் அப்படியிருக்கும் காலத்தில் அவ்விடத்தில் நீர் வந்து என் சிறைதனை மீட்டி என்னை காந்தர்வ விவாகம் செய்துக்கொண்டீர் இந்த காந்தர்வ விவாகத்தினுடைய பெருமை எப்படிகொற்றதென்றால் எச்சமயம் எம்மாதரை காந்தர்வ விவாஹம்

புரிகின்றீரே அது முதல் தான் அந்தியம்வரைக்கும் இதரமாத ரை தாய்போல் எண்ணமிடவேணுமே தவிர மற்றப்படி நினைக்க லாகாது. மந்திரி புதல்வியை நீரே விவாகம் செய்துக் கொள்ளும்படி உத்திரவு தந்தேன். அப்படியிருக்க இந்தப் பூமாலை உமது கண்டத்தில் வந்து விழவேண்டியக்காரண மேது தெரியச்சொல்லும் நாயகா,

மதனசேகரன்:—நாயகி, நீ இப்படி யெல்லாம் துயரப்படவேண் டாம் யெத்தனை மாதரிருந்தப் போதிலும் நீயே எனது பட்டத்து தேவி தவிர மற்றவர்கள் உனக்கு கீழ்பட்டவரே யாவார் ஆனால் இம்மாலை விழுந்த சந்தர்பம் சொல்லுகிரேன் கேளும். எப்படியென்றால் உன்னை காட்டில் கண்டவுடன் நீயும் நானும் மொழியாடிய பிறகு என் துணிதனை கீழ்பரப்பி அதின் மீது உன்னை சயநிக்கச்செய்து நான்உன்னை வெட்டின வுடனே புறப்பட்ட உதிரத்தை துணியில் பிரட்டிக்கொண்டு நடுவழியில் வந்துபார்க்கும்போது ரத்தினங்கள் பிரகாசமாய் நிரைந்திருந்தது அதில் இரண்டு ரத்தினங்களெடுத்து யான் பத்திரம் செய்துக்கொண்டு மிகுதி என் தாயாரிடம்தந்துவிட்டு மறுதினம் உன்னை அழைத்துக் கொண்டு இன்னாட்டில் வந்து குடியிருக்கும் சமயத்தில் விளையாட்டு தன்மையாக யானும் எனது தோழனும் விளையாடிக் கொண்டிருக்க அச்சமயத்தில் இன்னாட்டு வேந்தன் தனது புதல்விக்கு விசித்திரமாகிய மஹாடி யொன்று கட்டி முடித்தனர். அதை நாட்டிலுள்ளவரெல்லாம் பார்க்கும்படி பறைசாற்றஅந்தமார்கமாய் எல்லோரும் போய் க்கொண்டிருக்க அதைக்கண்டு நாங்களிருவரும் சென்று பார் த்து வரும் சமயத்தில்விசித்திரமாக ஓர் பள்ளியரை கட்டி யதி ன் மத்தியில் தாமரை கமலமொன்று செய்திருக்க அதைக்க ண்டு ஓர் ரத்தினமெடுத்து அந்த கமலத்தின் மத்தியில் விட்டெ றிய இந்த ரத்தினம் அதில் வொட்டிக்கொள்ளவே யாங்கள் பய மடைந்து ஓட்டமும் நடையாக வீட்டிற்கு வந்து விட்டோம். அதின் பிறகு இந்த ரத்தினம் வேந்தனுடைய புதல்வி கண்டு இதுபோல் ரத்தினம் கொண்டு வராவிட்டால் தன் ஆவியை போக்குவேனென்று தந்தையுடன் சபதமிட தந்தை மந்திரியை

அழைத்து இந்த ரத்தினம் போல் ரத்தினம் பத்து தினத்தில் கொண்டுவருவிட்டால் சிரசாக்கினை செய்வேனென்று தண்டனை .விதிக்க அது தெரிந்து மந்திரி புதல்வி முந்தி தன் ஆவியை போக்கலாமென்று அக்கினி குண்டத்தை காவித்து அதை சுற்றி வரும் சமயத்தில் எல்லோரும் போய் பார்க்க நானும் சென்று சவிஸ்தாரத்தை விசாரித்து என் மனம் தாளாதபடியால் மிச்சமாயிருந்த ரத்தினமொன்றை தந்தேன் அதின் பிறகுதான் மந்திரி தன் புதல்வியை விவாகம் செய்து வைத்து அந்த ரத்தினம்தான் இம்மாதையும் கூட்டி வைத்தது ஆகையால் இதற்கெல்லாம் காரண பூதம் நீ தான் என் மீது ஏன் கோபம் செய்கின்றாய்.

அம்பிகை:—நாயகா ! நான் உன் மனம் சோதிக்க இப்படிக் கேழ்க்கலாகினேன் ஆனல் இது எல்லாம் ஐயனுடைய செயலன்றி வேறில்லை நம்மாலாவதொன்றுமில்லை வருவதெல்லாம் பாக்கியம் தான் ஆனபோதிலும் அவர்கள் கால் நடையாக வந்து உம்மை அழைத்தால்நீர் போகவேண்டாம் பட்டத்தானை தனை அலங்கரித்துக்கொண்டு இங்கு வந்து அழைத்தால் நீர் சந்தோஷமாக சென்று அச்சபைதனில் நின்று மங்களாதாரணம் செய்யாமல் காந்தர்வ விவாகம் புரிந்து வருவீர்.

மதனசேகரன்:—நாயகி ! காந்தர்வ விவாகம் செய்யவேண்டிய காரணமேது அதின் விபரத்தை சொல்லும்.

அம்பிகை:—நாயகா ! அம்மாதும் யென்னைப் போலொத்த வேந்தர்ப்புதல்வி ஆகையால் யெனக்குமுமக்கு விவாகமாகும் காலத்தில் அம்மாதை தனித்து விவாகம் செய்யலாகாது இவள் மந்திரி புதல்வியானது பற்றி விவாகம் செய்யலாயிற்று.

மதனசேகரன்:—அப்படியா! உமதிஷ்டப்படி காந்தர்வ விவாகம் புரிந்து வருகின்றேன்.

உத்தமகுணன்:—அப்பா மருகா ! இதோ பட்டத்தானை வந்திருக்கின்றது உம்மை பதிசிக்கிறத்தில் மகராஜா அழைத்து வரும் படிச் [illegible]ன்னார் வருவீர்.

மதனசேகரன்:—அப்படியே வருகின்றேன் மாமா.

---

## இங்கு ஊர் கோலம்.

வசந்தா:—அடிதோழிமாரே இதோ ஆனை மீது வரப்பட்ட உத்தமர்களைக்கண்டால் இந்நாட்டில் வாழ்பவர் போல் தோன்றவில்லை இவர் இந்திரனோ அல்லது மாரனோ, குபேரனோ, மன்னாதி மன்னவனோ, மங்கை நாயகனோ. மாயனோ, இந்த மகானுபர்வரை புருஷரூபமாக நியமித்த பிரம்மதேவனுக்கு கோடி வந்தனம் இந்த உத்தமருடன் கூடி விளையாடாத வுடல் ஒர் வுடலா? இவருக்கு நாயகி? நானாகுவேனோ ஆகேன், ஆகேன், மொண்டி தேனுக்காசித்ததுபோல் நாம்பெண்மிட்டோம் நம்மைக்கண்டு வெறுத்துபோய்விட்டால்யென்னசெய்வது இந்தழகனுக்குயேற்ற நாயகி யென் நாட்டிலிருக்கின்றாளோ நாமேதும் தெரியோம் இவ்வளவு ரூபலாவண்யத்துடன் இருந்தமையால் அந்தரத்தினங்கள் நமக்கு கிடைக்கலாச்சுது ஆனால் அவர் இங்குவந்தப்பிறகுயென்ன நடக்கிறதோ சற்றுப் பார்போம் பதறுமல்செய்த காரியம் சிதராமல் வைக்கக்கூடும் யென்னும் பழமொழிபோல் பரமன் அருள் செய்குவார்.

உத்தமகுணன்:—மகாராஜ் இதோ தங்களுடைய புதல்வி எரிந்த மாலை இவர் கண்டத்தில் விழ அன்னவரை தேடி அழைத்துக் கொண்டு வந்தேன் இனி தாமதமென்ன விவாகத்திற்கு எத்தனம் செய்குவீர்.

தர்மாங்கதன்:—மந்திரி வெகு சந்தோஷம் ஐயா வேதியரே இனி லக்கினம் தவரிடாமல் கூடிய சீக்கிரத்தில் விவாகம் நடத்துவீர்.

வேதியர்:—சந்தோஷம் உனது புதல்விதனை அலங்காரம் செய்து கல்யாண மண்டபத்திற்கு யழைத்து வருவீர்.

தர்மாங்கதன்:—இதோ அழைத்து வரும்படி செய்கிறேன். அடி தோழிமாரே நீங்கள் அந்தப்புரம் சென்று எனது தவப் புதல்விதனை கூடிய சீக்கிரத்தில் அலங்காரம் செய்து கல்யாண மண்டபத்திற்கு அழைத்து வருவீர்.

தோழிமார்:—மகராஜ் இதோ அரை நிமிஷத்தில் அலங்காரம் செய்து அழைத்து வருகின்றோம்.

தோழி:—அம்மா வசந்தா உம்மை அலங்காரம் செய்து அதி வேகமாக உமது தந்தை அழைத்து வரும்படி சொன்னார் நீ சீக்கிரம் எம்முடன் வருவாயம்மா.

வசந்தா:—அடி தோழிமாரே இது வரைக்கு யான் சிறைப்பட்டிருந்து விடைப்பட்ட நாகம போல் மனம் சந்தோஷமடைந்து நான் கோரியப்படி நாயகன் அகப்பட்டதால் அந்த பரம் பொருளாகிய நீலகண்டனுக்கு இதோ கோடிவந்தனம் இதோ உங்களிஷ்டப்படி வருகின்றேன் வருவாயடி தோழிமாரே.

தோழி:—மகராஜ்! தங்களுடைய புதல்வியை அழைத்து வந்தோம்.

தர்மாங்கதன்—: வெகுசந்தோஷம்வேதியரே! இனிகாலதாமதம் செய்யாமல் விவாகமஹோஸ்வத்திற்கு செய்யவேண்டிய காரியங்கள் செய்குவீர்.

மதனசேகரன்:—ஓ சபையோரே! ஓர் விண்ணப்பம் சொல்லுகுறேன் அதென்னவென்றால் நானும் யென் தாயும் என் தந்தையிடம் மனக்கவலையடைந்து யெனது நாட்டைவிட்டு இன் நாட்டிற்கு வந்து சேர்ந்தோம் ஆனால் இச்சமயம் அரசன் புதல்வியை நான் தனித்து விவாகம் செய்வது நலமாகாது தந்தைமுதலான பந்துக்கள் வந்திருக்க அக்காலத்தில் இம்மாதை விவாகம் செய்வேன் இப்போது வேந்தர்க்கழகான காந்தர்வ விவாகம் புரிந்து சிலநாள் சென்றபிறகு தந்தையை வரவழைத்து யெல்லாமாதரை ஒரோமுகூர்த்தமாக விவாகம் செய்துக்கொள்ளுகுறேன் இச்சமயம் விவாகம் நிறுத்த வேண்டியது.

சபையோர்:—ஆ! ஆ! இந்த சிறுவன் சொல்வது நீதி தான் தாய் தந்தை மனக்கவலையோடிருக்க அச்சமயத்தில் விவாகம் செய்துக்கொள்வது நலமல்ல இப்போது காந்தர்வவிவாகம் புரிவது உத்தமம் காந்தர்வவிவாகமென்பது ஒருவர்க்கொருவர் முகதரிசனம் செய்து கணையாழியை மாற்றிக்கொள்வது காந்தர்வ விவாகம் இது தேவர்க்கு உகந்தது.

தர்மாங்கதன்.—அப்படியா! வெகு சந்தோஷம். ஆனல் நமது புதல்வினுடைய மனதிஷ்டைத் தெரிந்திடலாம் அம்மாவசந்தா, இப்போது நீ கோரிய புருடன் சொன்னதும் சபையோர் சொன்னதும் கேட்டாயல்லவா ஆனதுபற்றி உன் கருத்தை வெளி இடுவாயம்மா.

வசந்தா:—தந்தையே! நான் கோரியநாயகன்எனக்குகிடைத்தது சிவப்பெருமானுடைய செயலன்றி மனிதரால் நியமித்ததல்ல ஆனதுபற்றி அவர் சொன்னதுபோல் நடத்துவீர் அவர் மனதிற்கு ஏதும் கவலையில்லாமல் செய்குவீர் தந்தையே

தர்மாங்கதன்:—எனதருமைச்செல்வமே உனதிஷ்டப்படி நடத்துகின்றேன்.

தர்மாங்கதன்:—ஐயா சபையோரே! இந்த இராஜப்புதல்வன் சொன்னதுபோல் நடத்துவதற்கு ஏதும் தடையில்லை. அவர் இஷ்டம்போல் காந்தர்வ விவாகம் செய்துக்கொள்ளும்படி சொல்வீர்.

சபையோர்:—ஓ! மதனசேகரா உனதிஷ்டப்படி காந்தர்வ விவாகம் புரிந்து சுகமடைவீர்.

மதனசேகரன்:—வெகு சந்தோஷம். இதோ இந்த சபையோர்களும் தேவர்கள் அறியும்படி யென் கணையாழியை அம்மாதுக் கையில் பூட்டினேன்.

வசந்தா:—ஓ! கைலாசபதியே, கங்காதரா, சந்திரசேகரா, திருநேத்திரதாரி நீலகண்டா உமது திருபாதத்தை தியானமடைந்து இதோ எனதுகணையாழியைஎனதுநாயகர் கரத்தில்

பூட்டினேன் எனது கற்பிற்கு ஏதும் பிழை வராமல் காப்பாற்றவேண்டும் கருணாகரப்பொருளே.

மதனசேகரன்:—நாயகி! இனி தாமதமென்ன எனது தாயார் தனித்து யிருக்கும்படியான இடம் போகலாம் வருவாயடி பெண்ணே.

வசந்தா:—நாயகா! அரசில்லா நாடு போலவும்மழையில்லா பயிர் போலவும் இரவில்லா பகல் போலவும் ஆலயமில்லா தேசம் போலவும்அணியாதப்பணிப்போலவும்இருந்த என்னைக் கண்டு சிறைமீட்டவந்த துரையே, எப்போது உமக்கு சொந்தமாக நின்றேனோ அன்றே நீர் அழைக்கு மிடத்திற்கு வருகயேதும் தடையில்லை ஆனால் யென்னை அருந் தவம்செய்துபெற்ற தாய் தந்தையாரிடம் சொல்லி விடைப்பெற்றுக்கொண்டு வருகின்றேன் துரையே.

மதனசேகரன்:—வெகு சந்தோஷம். உனதிஷ்டப்படி சொல்லி வருவாயடி யெனதமுர்தக்கிளியே.

வசந்தா:—அப்படியே வருகின்றேன் நாயகா.

வசந்தா:—தந்தையே! வந்தனம். என்னை பிரியத்துடன் காந்தர்வ விவாகம் புரிந்த நாயகர் தமது வீட்டிற்குவரும்படி யழைக்கின்றார் நீர்விடைத் தருவீராகில் போய்வருகின்றேன் தந்தையே.

தர்மாங்கதன்:—எனதறிவில் மிகுந்த செல்வமே யென்றைக்கிருந்தபோதிலும் தாய்தந்தை வீடு உனக்குசொந்தமாகுமா புகுந்த வீடுசொந்தமே தவிரஇதரயெண்ணத்தை யெண்ணமிடலாகாது ஆனாலும் பெரிதல்ல மருகன் நமது மந்திரி வாழும் வீதிதனில் வாசம் செய்கின்றான் ஆனால் அன்னவன் பின்பற்றிபோவதினால் யேதும் ஆக்ஷேபணைக்கிடையாது அவன் யெந்த இராஜ்யத்தை பரிபாலிக்கின்றானோபார்ப்போம் யேதும் சொல்லாமல் போய் வருவாயென் கண்மணியே.

வசந்தா:—அப்படியே போகின்றேன். தந்தையே. ஆனால் தாயாரிடந்தெரிவித்து வருகின்றேன் பிதாவே.

தர்மாங்கதன்:—உனதிஷ்டப்படி சொல்லிவிட்டு போகுவா யென் செல்வமே.

வசந்தா:—என்னை பெற்றதாயே இதோ வந்தனம்செய்கின்றேன்.

சித்திரைரேகை:—நான் பெற்ற செல்வமே என்னை தேடி வந்த காரணம் ஏது தெரியச்சொல்லும் கண்மணியே.

வசந்தா:—அம்மா யென்னை காந்தர்வ விவாகம் புரிந்த நாயகர் தன் இருப்பிடம் வரும்படிச் சொல்லுகின்றார் நான் போய் வருகின்றேன் சந்தோஷமாய் விடைத்தருகுவாயம்மணி.

சிததிரைரேகை:—ஆ! யென் கண்மணியே நான் நெடுநாளாக புத்திரபாக்கியமில்லாமல் மனவருத்தமடைந்து பரமனை கோரி தவம்புரிந்து அன்னவர்கிருபையால் நீ வயிற்றில் தங்க உன்னை தசமாதம் சுமந்து பெற்று சந்தோஷ பெயரிட்டு இத்தனை நாளாக வளர்த்து தகுந்த நாயகனுக்கீந்து சந்தோஷமாக இங்கு இருப்பாயென்று யான் யெண்ணமிட யென் வயிற்றில் பெரும் தீயிட்டது போல் நீ சொல்லும் மொழி கேட்டவுடன் மனம்பதருகின்றது எப்படிவாய்விட்டு போய்வருவாயென்றுச் சொல்லுவேன் கண்மணியே.

வசந்தா.—அம்மா நீ யேதுக்கும் துயரப்பட வேண்டாம் நான் நமது நாட்டில்தான் வாழ்ந்துக்கொண்டிருப்பேன் யெச்சமயத் திலும் அடிக்கடி உம்மை வந்து பார்த்துக்கொண்டு போகு வேன் நீ சந்தோஷமாக போய்வருக உத்திரவு தாருமென் னம்மணி,

சித்திரைரேகை:—நான் பெற்ற செல்வமே நீ சந்தோஷமாக நாயகனுடன் சென்று வாழ்வாயடி கண்ணே.

வசந்தா:—அம்மா அப்படியே போய் வருகின்றேன்.

வசந்தா:—நாயகா இனி தாமதமென்ன வருவீர் நமதிருப்பிடம் போகலாம்.

மதனசேகரன்:—வெகுசந்தோஷம் மாமா, யானும் யெனது தேவியும் யெனதிருப்பிடம் போய் வரட்டுமா?

தர்மாங்கதன்:—அப்பா மருகனே வெகு சந்தோஷம். ஆனால் இதோ யெனது மந்திரியுடன் வேண்டியதண்டுதளங்களும் சிதன சாமான்களும் கொடுத்தனுப்புகின்றேன் சந்தோஷமாக பெற்றுக்கொள்வாய் கண்மணியே.

மதனசேகரன்:—இதெல்லாம் இச்சமயத்தில்வேண்டாம் யெக்காலத்தில் யென் தாய்தந்தைகள்யேகோபித்து விவாகம் நடப்பிக்கின்றனரோ அக்காலத்தில் இதை யெல்லாம் அனுப்பினால் சந்தோஷமாகும்.

தர்மாங்கதன்:—நல்லது உனதிஷ்டப்படி அனுப்புகின்றேன். நீ போய் வருவாய் மருகனே.

தர்மாங்கதன்:—அம்மா வசந்தா! இதோ உனது நாயகன் அழைக்கின்றார் நீயேதும் பயமில்லாமல் பின்பற்றி செல்வாய். ஆனால் உனக்குசொல்லவேண்டிய நீதியொன்றுண்டு. அது யாதெனில் கணவன் மொழிக்கு மீறி நடக்காதே. மாமி மாமனார் மொழிதள்ளாதே. பிராதக்காலமெழுந்து இருவர் பாதங்களுக்கு புஷ்பத்தால் பூஜித்து விண்ணப்பத்துடன் வந்தனம் செய்து நல்லவளென்று பெயரெடுத்து வாழவேண்டியது. அயல் வீடு போகாதே இப்படிக்கெல்லாம் நல்ல கீர்த்தியுடன் வாழ்ந்து வந்தால் யெனக்கு நற்கீர்த்தி பேர் உண்டாகும் இதை யெண்ணமிட்டு நடந்துக்கொண்டு வாழ்வாயம்மா.

வசந்தா:—தந்தையே அப்படிக்கெல்லாம் உமக்கு கெட்டப்பெயர் வரும்படி ஒருநாளும் நடக்கமாட்டேன் இதைப்பற்றி நீர் விசனப்பட வேண்டாம்.

தர்மாங்கதன்:—வெகு சந்தோஷம் உனதிஷ்டப்படி கணவன் பின்பற்றி நடப்பாயம்மணி.

வசந்தா:—அப்படியே போய் வருகின்றேன் தந்தையே.

---

# மதனசேகரன் மனை.

மதனசேகரன்:—அடி யென் கண்மணியே, இனி நாம் நமது சொந்த மனைக்கு போகலாம் வருவாயடி.

வசந்தா:—நாயகா உமதிஷ்டப்படி வருக யேதும் தடையில்லை, வருவீர் போகவாம் நாயகா.

மதனசேகரன்:—நாயகி இதோ உமது மாமியார்.

வசந்தா:—வெகுசந்தோஷம், மாமி உமது திருபாதங்களுக்கு வந்தனம்.

சற்குணாம்பிகை:—கல்யாண் மருமகளே நீயும் யெனது மகனும் சந்தோஷமாக வாழக்கடவது.

வசந்தா:—ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம் கோடி நக்ஷத்திரம் மத்தியில் ஓர் சந்திரன் யெப்படி பிரகாசிக்குமோ யதுபோல் இந்த வீட்டில்இம்மாதைப் பார்த்தால், மகாரூபசவுந்தரியமாக இருக்கின்ருள் இம்மாது யாரோ, தெய்வ கன்னிகையோ யேதும்தெரியவில்லை நாம் யாரென்று மதிக்கலாம் அல்லது இம்மாதின் சவிஸ்தாரத்தை யெல்லாம் விசாரிக்கலாம் ஆன போதிலும் பெரிதல்ல நமக்கு மூத்தவளாகவே இருப்பதால் மேலும் இராஜப் புதல்விப்போல் காட்டுகின்றது வந்தனம் செய்வதினுல் நலமாகும் நேரில் சென்று வந்தனம் செய்யலாம் அம்மா வந்தனம்.

அம்பிகை:—கல்யாண் தங்கா அந்தப்புரம் வருவாய் போகலாம்.

வசந்தா:—ஆ! ஆ! இதென்ன விந்தைமொழி நாம் வந்தனம் செய்ய நம்மை தங்கை யென்று முறையிட்டழைத்தாள் நமது நாயகன் கொண்ட நாயகியாக இருக்கவேண்டும் இன்னம் பின்னுல் நடக்கிற விஷயங்களை கவனிப்போம் நம்மை கூப்பிட்டப்படியால் நாம் சக்காளத்தி பொச்சரிப்பு செய்யலாகாது அக்கா உமதிஷ்டப்படி இதோ வருகின்றேன்.

அம்பிகை:—அம்மா தங்கா நீ ஆஸ்தானத்தில் இருந்தபடியால் இந்த கூரைவீட்டில் இருக்க மனம் வருகுமா.

வசந்தா:—அக்கா யென்னமொழிகூறலாகினீர் நாம் மேட்டான மேட்டியாக வாழ்ந்திருந்தப் போதிலும் நம்மை மாலையிட்ட நாயகன் யெக்காட்டில் வாசம் செய்கின்றாரோ அன்னவர் கூட நாம் வாசம்செய்தால் அல்லவா நமக்கு பதிவிர்த்தா தர்மம் கிடைக்கும் இதை வெறுத்தால் நமக்கு நரகமே வீடல்லவா இன்னம் கேளும் முற்காலத்தில் பாண்டவபுத்திரர் பாஞ்சாலியை விவாகம் செய்து வாழுங்காலத்தில் துர்யோதிரன் இவர்கள் இராஜ்யத்தை அபகரிக்க வேண்டு மென்று மனமிட்டுவலிய சூதாடி நாடு நகர மெல்லாம் அபகரித்துக்கொண்டு பரதேசிகள்போல் செய்து நாட்டை விட்டு காட்டில் ஓட்டிவிட ஐவருடன் பாஞ்சாலியும் சென்று கஷ்டங்கிஷ்டமே மெல்லாம் அனுபவித்து நற்காலம் வந்தபிறகு இராஜ்யத்தை பரிபாலித்தார் ஆனது பற்றி பதியினுடைய மொழிதவறாமல் நடந்தப்படியால் அந்தபாஞ்சாலிக்கு பதிவிர்த்தா யென்கிற பெயருண்டாச்சுது யென யென் பெரியோர்கள் சொல்ல யான் கேட்டிருந்தும் அதுபோல் நடக்காமல் போனல் இராஜகுலத்திற்கு அழகாகுமா. இப்படியெல்லாம் யென்மனம் சோதிக்க வேண்டாம் ஆனல் ஓர் மனு கேழ்கின்றேன் அதைப்பற்றி சிரியவள் இப்படி கேட்டாளென்று மனவருத்தம் வையாமல் தகுந்த விடைத் தருகவே ம் அக்கா.

அம்பிகை:—அப்படிக்கொற்ற வினு யேது அதைதெரியச்சொல் லும் தங்கா.

வசந்தா:—அக்கா உம்மைப்பார்த்தால் தெய்வலோகத்து மாது போல்காட்டுகிறது நீர் இங்கு வாசம் செய்யவேண்டியக்காரணமேது இதின் விபரத்தை யடியாள்தெரிந்திட வுரை செய்வீர் அக்கா.

அம்பிகை:—அம்மா தங்கா! யான் சொல்வதைக்கேள் யெப்படி யென்றல் யெனது நாடு விந்தியபுரம் அன் நாட்டை பரிபா

ஷிக்கும்படியான காந்தரூபனுக்கு புத்திர பாக்கியமில்லாமல் கடவுள் கிருபையால் நான் ஜனிக்க யெனக்கு அம்பிகை என நாமகரணம் செய்வித்து வளர்ந்து வரும் காலத்தில் யான் யௌவன திசையடைந்த பிறகு நந்தவனமடைந்து புஷ்பம் பரித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் ஓர் இராக்ஷதன் என்னை எடுத்துக்கொண்டுபோய் கானகத்தில் கோட்டைக்கட்டி யக்கோட்டையில் என்னை வைத்து க்ரூரமான மொழியாட நான் அதை யறிந்து தப்பி பிழைக்கவேண்டுமென மனமிட்டு அந்த ராக்ஷதனைப்பார்த்து யான் பனிரெண்டு வருடம் நோய்பு அநுஷ்டிக்குரேன் யது முடிந்தபிறகு உனதிஷ்டம் பூர்த்திசெய்குரேனென பொய் மொழிக்கூறி வாழ்ந்துவரும் சமயத்தில் உன்னை காந்தர்வவிவாகம் புரிந்துவந்த உத்தமர் அக்கோட்டைக்குவந்து யந்தராக்ஷதனை வென்று யென்சிறைதனைமீட்டுக் கொண்டு வந்தார் அதுமுதற் கொண்டு யான் மாமியிடமே வாழ்ந்துக் கொண்டிருக்கின்றேன் ஆகையால் நான் பிறந்தது முதல் இது வரைக்கும் கூடப்பிறந்தவர் இல்லாமல் தனியாக இருப்பதை பகவான் கண்டு உன்னை யென்னுடன் சேர்த்தார் ஆனது பற்றி நீ யென் தங்கைபோல் ஒற்று வாழ்ந்திருப்பாயம்மா.

வசந்தா:—அக்கா வெகு சந்தோஷம் இதோ உமது பாதங்களுக்குவந்தனம் யடியாள் கேட்டதற்கு மனவருத்தம் வையாமல் யென்னை ரக்ஷிக்க வேண்டியது.

அம்பிகை:—சந்தோஷம் நாமிருவரும் யந்தப்புரத்தின் வேலைகளை செய்து நாயகனுக்கு மனம் சந்துஷடி செய்யலாம்.

வசந்தா:—அப்படியே செய்யலாம் அக்கா.

சற்குணம்பிகை:—அடா யென் செல்வமே நீ யேதுக்காக மனம் வியாகூலத்துடன் இருக்கவேண்டிய காரணம் உனது இரண்டு மாமனார் வீட்டில் உன்னை யேதாகிலும் யேளனமாக பேசினார்களா அல்லது கொண்ட மாதர்கள் பரிகாசம் செய்தார்களா யெதைப்பற்றி முகவாட்டத்துடன் இருப்பது யெனக்கு தெரியச்சொல்லடா கண்மணியே.

மதனசேகரன்:—அம்மா யென் மனக்கவலைதனை சொல்கிரேன் கேளும் யெப்படியென்றால் நான் நாட்டிலிருக்கும் காலத்தில் தந்தைதனை பாலக்காட்டை கேட்டு சுத்தப்படுத்தும் சமயத்தில் அக்காட்டில் பொருள் கிடைக்க அதற்கு ஆசைப்பட்டு யென்னை சொல்வதற்கு மனமிட்டார் இதை சிற்றன்னை யரிந்து மர்மமாக உனக்கு தெரிவிக்க நீ யதை தெரிந்து மாமன் வீட்டிற்கு போகலாமென யெனக்கு கூரி யென்னையழைத்துக் கொண்டு காட்டின் மார்க்கமாக வரும் சமயத்தில் எனக்கு உண்மைதனை தெரிவித்தீர் அதை தெரிந்து பிரம்மன் விதிப்போல் முடியுமென்று யெண்ணமிட்டு இன்னாட்டிற்கு வந்து பிறர் வீட்டில் குடியிருக்க காரணமாச்சுதே. நான் க்ஷத்திரிய குலத்தில் பிறந்து தனி இராஜ்யமில்லாமல் இப்படி தயங்க நலமாகுமா. அல்லது இந்நாட்டை பரிபாலிப்பவர் மாமனாக இருப்பதால் அன்னவரை.யெப்படி ஓர் நாட்டை தாவென்று கேட்கலாகும் ஆகையால் இதையெல்லாம் யெண்ணமிட்டு யென் மனம் கவலையடைந்தேனம்மா.

சற்குணாம்பிகை:—அடா யென் செல்வமே பிரம்மன் விதிப்போல் முடியுமே தவிர நம்மால் யேதுமாகாது ஆகையால் இராஜ்யத்தை கேழ்ப்பது நமக்கு நீதியல்ல ஓர் காட்டை கேட்டு அங்கு புதிய ராஜ்யமுண்டுபண்ணி நாம் சென்று வாழலாமடா.

மதனசேகரன்:—அம்மா நீ சொல்வது நல்ல விஷயமே ஆனால் அவரை நேரில் கேழ்ப்பது நலமல்ல அன்னவருடைய மந்திரிக்கு யென் மனோப்பீஷடத்தை தெரிவித்து கேழ்கும்படி செய்குரேன்.

சற்குணாம்பிகை:—கண்மணி உனதிஷ்டப்படி நடத்துவாயடா செல்வமே.

---

## மந்திரி மனை.

மதனசேகரன்:—மாமா வந்தனம் செய்கின்றேன்.

உத்தமகுணன்:—அப்பா மருகனே யென்ன விசேடம் இப்படி முகவாட்டத்துடன் வரக்காரணமேது தெரியச் சொல்லும்.

மதனசேகரன்:—மாமா யெனக்கேதும் கவலை யில்லை ஆனல் நான் தனியாக காட்டை கட்டிக்கொண்டு வாழலா மென்று யெண்ணமிட்டேன் ஆனதுபற்றி நீர் வேந்தரிடம் சென்று இன்நாட்டிற்கு தென்மேற்காக இருக்கப்பட்ட காட்டை யெனக்கு வாங்கி தந்தால் யான் ஓர் உப்பரிகைக் கட்டிக் கொண்டு வாழ்வேன் இதை சொல்வதற்குதான் உம்மிடம் வந்தேன்.

உத்தமகுணன்:—அப்பா மருகனே நீ யேதுக்கும் துயர்பட வேண்டாம் உனதிஷ்டப்படிகேட்டு வாங்கி தருகின்றேன்.

---

## தர்பார்.

---

தர்மாங்கதன்:—அடா சேவகா இன்னம் நமது மந்திரி கொலு விற்கு வரவில்லை சீக்கிரம் சென்று யழைத்து வருவாயடா.

சேவகன்:—மகராஜ்! இதோ சீக்கிரம் சென்றழைத்து வரு கின்றேன்.

சேவகன்:—ஐயா வந்தனம் உம்மை நமது வேந்தன் அழைத்து வரும்படி சொன்னர் வருகுவீர்.

உத்தமகுணன்:—இதோ வருகின்றேன் சேவகா.

உத்தமகுணன்:—மகராஜ்! வந்தனம் யென்னே அழைத்தக் காரிய மேது தெரியச்சொல்லுமையா.

தர்மாங்கதன்:—மந்திரி அந்த மதனசேகரனுக்கு யெனது அருந் தவப்புதல்வியை விவாகம் செய்யாமல் காந்தர்வ விவாகம் செய்துக்கொண்டு தான் குடியிருக்கப்பட்ட இடத்திற்கு அழைத்துச் சென்றனே, உலகத்தில் பார்ப்பவர் வேந்தன் புதல்வி இப்படி குடியானவர் வீட்டில் வாசம் செய்கின்றளென யேளனம் செய்யமாட்டார்களா இதற்கெப்படி யோசனை யேதாகிலும் நாட்டை அவனுக்கு தந்து பரிபாலிக்கும்படி செய்யலாமா இதற்கு யோசனை சொல்வீரென உம்மை அழைத் தேன் உன் கருத்தெதுவோ சொல்லும் பார்போம்.

உத்தமகுணன்:—மகராஜ்! நீர் சொல்வதற்கு முந்தி நமது மருகனை யழைத்து நீர் சொன்னதுபோல் நாட்டை வேந்தரி டம்சொல்லி கொடுக்கும்படி சொல்கிறேன் அதை பரிபாலித் துக்கொண்டு சுகமாயிருமென்று சொல்ல அம் மொழிகேட்ட மதனசேகரனுக்கு கோபம் பிறந்து யான் க்ஷத்திரிய குலத்தில் பிறந்து ஒருவர் பரிபாலித்த நாட்டை யான் கையாள்வது நீதியாகுமா யென்னைப்போல் வேந்தர் கண்டால் நகையாரு நீர் சொல்லும் கருத்துக்கு சம்மதிக்கமாட்டேன் ஆனல் இன் நாட்டிற்கு தென்மேற்கு திசையிலிருக்கும் காட்டைத் தந்தால் யான் கோட்டைக்கட்டிக்கொண்டு வாழ்வேனென்று சொன் ஞன். ஆனது பற்றி அவனை அழைத்து அக்காட்டை அன்ன வனுக்கு சொந்தம்செய்து விடுவீர் அதின் பிறகு யெப்படி யாகிறதோ பார்க்கலாம்.

தர்மாங்கதன்:—மந்திரி உனதிஷ்டப்படி தருகின்றேன் ஆனல் மதனசேகரனை அதிசீக்கிரத்தில் கொலுவிற்கு அழைத்துவரும் படி செய்குவீர்.

உத்தமகுணன்:—மகராஜ்! இதோ அரை விநாடியில் வரவழைக் கின்றேன் அடா காவலனே நீ சீக்கிரம் சென்று நமது வேந் தன் மருகனுகிய மதனசேகரனை வேந்தன் அழைத்ததாகச் சொல்லியழைத்துவாடா.

காவலன்:—தங்கள் இஷ்டப்படி இதோ நிமிஷநேரத்தில் அழைத்து வருகின்றேன்.

---

## மதனசேகரன் மனை.

காவலன்:—ஐயா இராஜகெம்பீரா வந்தனம்.

மதனசேகரன்:—கல்யாண் காவலனே யென்ன விசேடம் யெங்கு வந்தனை தெரியச்சொல்வாயடா.

காவலன்:—மகராஜ்! உம்மை உமது மாமனாராகிய இராஜ பூபாலன் அழைத்து வரும்படி சொன்னார்.

மதனசேகரன்:—இதுதானா காரியம் இதோ வருகின்றேன் நில்லடா அம்மா நேற்றையதினம் நாம் பேசிக்கொண்டபடி யான் மந்திரியிடம் சொல்லிருந்தேன் அம்மொழி வேந்தரிடம் சொன்னதுபோல் தோற்றுகிறது ஆகையால் நான் சென்று விசாரித்து வருகின்றேன்.

சற்குணாம்பிகை:—அடா கண்மணியே அப்படியே சென்று நல்லமொழிகளாடி காட்டை பெற்றுவருவாயடா யென் செல்வமே.

மதனசேகரன்:—உனதிஷ்டப்படி காட்டை பெற்றுக்கொண்டு கூடிய சீக்கிரத்தில் வருகின்றேன்.

சற்குணாம்பிகை:—நல்லது போய் வருவாயடா.

மதனசேகரன்:—சேடிகளே யெனது தேவிமார் யென்ன செய்கின்றார்.

தோழி:—ஐயனே! நீர்வரவில்லை யென்று யெதிர் பார்த்துக்கொண்டிருக்கின்றார்.

மதனசேகரன்:—சந்தோஷம் யான் வந்ததாக சொல்வீர்.

தோழி:—அப்படியே சொல்கின்றேன் அம்மா உங்களுடைய நாயகன் துவாரத்தில் வந்திருக்கின்றார்.

வசந்தா:—எதோ! என் நாயகர் வந்தாரு? ஆ! ஆ! சந்தோஷம் பிராண நாயகா வந்தனம் செய்கின்றேன் தாங்கள் இந்த வேளையில் வரவேண்டியக் காரணமேது சொல்லுவீர்.

மதனசேகரன்:—நாயகி! யேதுமில்லை. நேற்றையதினம் மந்திரி மனைக்கு போயிருந்தேன் அவர் யென்னைக்கண்டு பரிதாபமடைந்து நாடுநகரமெல்லாம் விட்டு இப்படி பிறர் வீட்டில் குடியிருப்பது நலமாகாது ஆகையால் நான் வேந்தனுக்குச் சொல்லி ஓர் நாட்டை மகுடம் சூட்டும்படி செய்கிறேன் அதை யாண்டுக்கொண்டு சுகமாகவாழ்வா யென்றுச் சொல்ல அம்மொழிக்கு யான் சம்மதமடைந்து கேழ்கும்படிச் சொல்லி யனுப்பினேன் அவ்விஷயம் மந்திரி கேட்டார் போல் காணுகிறது உனது தந்தை யென்னை வரும்படி சேவகனுடன் சொல்லி யனுப்பினர் ஆகையால் யான் சென்று யேதாகிலும் ஓர் நாட்டை பெற்றுக்கொண்டு நாமெல்லோருமங்கு சென்று சுகமாக வாழலாகுமே இப்படி பிறர்வீட்டில் வாழ்வது நலமாகுமா உன் கருத்தைச் சொல்லுவாய் மாது ரத்தினமே.

வசந்தா:—நாயகா! நீர் சொல்லும் மொழி கேட்ட மாத்திரத்தில் நாராசம்காய்ச்சி காதில் விட்டதுபோல் தோற்றுகிறது ஏனென்றால் நாம் க்ஷத்திரிய வம்சத்தில் பிறந்து ஒருவர் வீட்டின் பெண்ணை கலியாணம் செய்துக்கொண்டு தானிருக்கும்படியான குடிசைக்கு வந்து வாழ்ந்திருக்க அன்னவர் கண்டு மன வருத்தமடைந்து மெத்தை மேடைக்கட்டி தந்தால் அதை நாம் கைக்கொண்டு ஆண்டு வந்தால் பார்ப்பவர் நகையாரு நாம் தனியாக மேடைக்கட்டி வாழ்ந்தால் நால்வரும் உம்மை புகழ்வார் ஆகையால் நமது கஷ்டகாலம் இன்னம் எத்தனை நாளைக்கு இருக்கிறதோ, அத்தனை நாள் அனுபவித்து தான் தீரவேண்டும் ஆனது பற்றி நீர் சென்றாலும் அவர் தரும்படியான நாட்டை அபேக்ஷை இடாதீர் அதனால்

யேளனமாகும் நாயகா உமக்கு தெரியாத நீதி மார்க்கம் யான் சொல்லப்போவ தொன்றுமில்லை துரையே.

மதனசேகரன்:—நாயகி! நீ சொன்ன மார்க்கமெல்லாம் உண்மை தான் ஆனல் உன் கருத்து யெப்படியிருக்கிறதோ பார்க்கலா மென்று கேழ்கலாகினேன் இப்போது யான் உன் தந்தைதனை இந்நாட்டிற்கு வடமூலையிலிருக்கும் காட்டைக் கேட்டனுப் பினேன் அதை கொடுக்க தானே யென்னை வரச்சொன்னர் போல் காட்டுகிறது யான் சென்று விசாரித்து வருகுகிறேன் நாயகி.

வசந்தா:—நாயகா! உமதிஷ்டப்படி நடப்பீர் அதற்கு யேதும் தடையில்லை. ஆனல் அவர்கள் யேதாகிலும் மேன்பாடாகப் பேசி நாட்டை தந்தால் பெறுதீர்.

மதனசேகரன்:—நாயகி! உனக்கு யேதும் அவமானமாகும்படி நடக்கமாட்டேன் நான் போய் வருகின்றேன்.

வசந்தா:—சந்தோஷம் அப்படியே போய் வருவீர்.

---

## தர்மாங்கதன் தர்பார்.

தர்மாங்கதன்:—மந்திரி யெனது மருகனாகிய மதனசேகரன் இன்னம் வாராதிருக்க வேண்டியக் காரணமேது நீ அன்னவ னுக்கு நான் சொன்ன சங்கதி சொல்லாமல் மறந்து விட்டீரு யென்ன சொல்வீர்.

உத்தமகுணன்:—மகாராஜ்! நேற்றையதினம் நமதுகாவலாளியிடம் சொல்லியனுப்பினேன் அவன் சொல்லாமலிருக்கமாட்டான், அன்னவன் இச்சமயம் வருவான்.

மதனசேகரன்:—மாமா வந்தனம்.

தர்மாங்கதன்:—சந்தோஷம் இந்த சிம்மாதனத்தின்மேலமரு வீர்.

மதனசேகரன்:—அப்படியே அமருகின்றேன் ஆனால் தாங்கள் யென்னை அழைத்தக் காரியமேது தெரியச்சொல்வீர்.

தர்மாங்கதன்:—அப்பா மருகனே! நீ யென்னைப்போல் க்ஷத்திரியனாகயிருந்து யெனது புதல்விதனை காந்தர்வ விவாகம் புரிந்து நீ வாசம்செய்யும்படியான இடத்திற்கு அழைத்துக் கொண்டு போனீர் அது மெத்தவும் சந்தோஷம் தான் ஆனால் நீ இப்படி ஒருவர் வீட்டில்குடியிருப்பது யென்னைப்போல் வேந்தர் பார்த்தால் யேளனமல்லவா ஆகையால் நான் ஓர் நாட்டைத்தருகின்றேன் அதைபாதுகார்த்துக்கொண்டு சுகமாக இருக்கலாகாதா.

மதனசேகரன்:—மாமா நீர் சொல்லும்படியான மொழி உண்மைதான் ஆனால் உமது கடாக்ஷத்தாலும் பகவான் கிருபையாலும் வேண்டிய நாடுநகரமும் தனசம்பத்து மிருக்கிறது ஆனதுபற்றி தாங்கள் சொல்லும்படியான நாடு எனக்கு வேண்டுவதில்லை, இப்போது யென்மீது கிருபை கூர்ந்து இந்நாட்டிற்கு வடமூலை தன்னிலிருக்கும் காட்டைத்தந்தால் அக்காட்டில் ஓர் நகரை ஏர்படுத்தி புதிய நாடென பெயர் தந்து அக்காட்டிலிருந்தப்படி என் தாய் தந்தைகளை வரவழைத்து நால்வர் முந்தி கேழ்க்க வேண்டிய வினவெல்லாம் கேட்டு உமது புதல்விதனை விவாகம் செய்ய எண்ணமிட்டேன் ஆனது பற்றி அக்காட்டை தருவீரென கோருகின்றேன் ஆனாலும் உமக்கு சொந்தமில்லாதபடிக்கும் யெனக்குசுதந்திரம்செய்வீரானால் பெற்றுக்கொள்வேன்.

தர்மாங்கதன்:—மந்திரி! மருகன் சொன்னதெல்லாம் கேட்டீரா வெகு சந்தோஷம் அப்பா மருகா இன்று முதல்எனது அந்தியம் வரைக்கும் எனது புத்திரமித்திரபந்துகளத்திராதிகளுக்கும் அக்காட்டிற்குமெனக்கும் யேதும் சொந்தம் கிடையாது இது இந்த பூதேவி ஆகாயவாணி சாக்ஷியாக தத்தம் செய்து விட்டேன் இனி உன்னிஷ்டப்படி நாட்டைக்கட்டிக் கொள்.

மதனசேகரன்:—மாமா அப்படியே செய்கிறேன் ஆனால் சில ஆட்களை சகாயம் செய்யவேண்டியது.

தர்மாங்கதன்:—அப்படியே அனுப்புகின்றேன்.

மதனசேகரன்:—மாமா! எனது வீட்டிற்கு போய் வருகின்றேன்

தர்மாங்கதன்:—அப்படியே போய் வருவாய் என் செல்வமே.

---

## மதனசேகரன் மனை.

மதனசேகரன்:—அம்மா! நான் வேந்தனிடம் சென்று காட்டை யென் சுதந்திரம் செய்துக்கொண்டு வந்து விட்டேன். இனி நம்மிட மிருக்கும்படியான ரத்தினங்களை நமது அண்ணனை அழைத்துக்கொண்டு போய் கடைவீதியில் விற்பனை செய்து பொருள் பெற்றுக்கொண்டு வந்து அக்காட்டில் ஓர் நாட்டைக்கட்டுவதற்கு தகுந்த யோசனை செய்ய வேணும் ஆகையால் பத்து ரத்தினம் கொடுப்பாயம்மா.

சற்குணாம்பிகை:—அப்படியே தருகின்றேன் பெற்றுக்கொள்ளடா கண்மணியே.

மதனசேகரன்:—மகாசந்தோஷம்.

மதனசேகரன்:—அண்ணா நாமிருவரும் கடை வீதியில் சென்று சிலது ரத்தினம் விற்பனை செய்து வரலாம் வருவீர்.

வீரகாந்தன்:—அப்பா தம்பி! உனதிஷ்டப்படி போகலாம் வருவாயடா.

தம்பி மதனசேகரா! இதுதான் கடைவீதி இவ்விடத்தில் வைஸ்ய குலத்தார் வேண்டிய பொருளுடன் இருந்து அநேக மான ரத்தினவியாபாரம் செய்கின்றார் ஆனால் அதோ இருக்கும்படியான கோபாலசெட்டிவீடுஎனக்குதெரிந்தயிடம் அங்கு சென்றால் நாம் கோரியபடி பொருள் கிடைக்கும்.

மதனசேகரன்:—அண்ணா உனதிஷ்ட்டப்படி செய்குவீர்.

வீரகாந்தன்:—எதோ ரத்தினங்களைஎடு

மதனசேகரன்:—இதோ பத்து ரத்தினம் பெற்றுக்கொள்வீர்.

வீரகாந்தன்:—தம்பி மதனசேகரா நீ யென்பின்பற்றி வருவா யடா.

மதனசேகரன்:—அப்படியே வருகின்றேன்.

வீரகாந்தன்:—ஐயா செட்டியாரே! யெனது தந்தை வெகு கால மாக உம்மிடத்தில் ரத்தின வியாபாரம் செய்தாரல்லவா. ஆகையால் அந்த லாவா தேவியைப்பற்றி தங்களிடம் இப் போது ஓர் வியாபாரம் செய்ய வந்திருக்கின்றேன் உமது கருத்தேது சொல்லும்.

கோபால்செட்டி:—ஆ! ஆ! வெகு சந்தோஷம் உன் தந்தை யானவர் வியாபாரம் செய்யும் காலத்தில் நீர் அதிக சிறுவனாக இருந்தீர் இப்போது உம்மைப்பார்த்தால் அடையாளம் தெரிய வில்லை, நீர் சொன்ன பிறகு தெரிந்தது மிகவும் சந்தோஷம் எப்படியிருந்தாலும் துப்பாக்கிவயற்றில் பீரங்கி பிறந்தது போல்நீர் வியாபாரத்திற்கு ஏற்பட்டீர் ஆனால் நீர் யென்ன வியாபாரம் செய்ய வந்தீர் சற்றுச் சொல்லும்.

வீரகாந்தன்:—ஐயா செட்டியாரே! யென் தந்தைபோல் வியா பாரம் செய்ய யெனக்கு சக்தியுண்டா. ஆனாலும் பெரிதல்ல யேதோ பத்து ரத்தினங்கள் கொண்டுவந்தேன் அதை விலை மதித்து பொருள் தருவீரென கோருகின்றேன்,

கோபால்செட்டி:—வெகுசந்தோஷம் உமதிஷ்டப்படி தருகின்றேன் ஆனால் இந்த ரத்தினம் ஒன்றுக்கு பத்தாயிரம் வராகன் கொடுக்கின்றேன்.

வீரகாந்தன்:—சந்தோஷம் அப்படியே தருவீர்.

கோபால் செட்டி:—அப்பா வீரகாந்தா இதோ பத்தாரத்தினத்திற்கும் இதோ நூராயிரம்வாராகன்தந்தேன் பெற்றுக்கொள்வீர்

வீரகாந்தன்:—சந்தோஷம் பெற்றுக்கொண்டேன் யான் போய் வரட்டுமோ? இந்தநேசம் என்றைக்கு மிருக்கட்டும்.

கோபால் செட்டி:—அப்பா வீரகாந்தா அந்த வியாபாரமாயிருந்தபோதிலும் யெம்மை மறக்கவேண்டாம்.

வீரகாந்தன்:—நான் ஏதும் மறப்பதில்லை போய்வருகின்றேன்.

வீரகாந்தன்:—தம்பி மதனசேகரா! இனி நமது மனைக்குப்போகலாம் வருவாயடா.

மதனசேகரன்:—அப்படியே போகலாம் வருவீரண்ணா.

மதனசேகரன்:—அம்மா இதோ எனதுதமையனுடன் சேர்ந்து கடைவீதிசென்று ரத்தினங்களை விற்பனை செய்துக்கொண்டு வந்தேன்.

சற்குணாம்பிகை:—வெகுசந்தோஷம் ஆனால் உனதிஷ்டப்படி கானகத்தில் நாட்டை ஏற்படுத்துவாய்டா கண்மணியே.

மதனசேகரன்:—அப்படியே செய்கிறேன் அம்மா.

மதனசேகரன்:—அடா காவலனே நீ சீக்கிரஞ்சென்று நமதுநாட்டிலிருக்கப்பட்ட சில்பியை அதிசீக்கிரத்தில் அழைத்துவா.

காவலன்:—இதோ அழைத்துவருகின்றேன்.

சேவகன்:—ஐயாசில்பியரே உம்மை மதனசேகரபூபாலன் அழைத்துவரும்படி சொன்னார் வருவீர்.

சில்பி:—இதோவருகின்றேன். வந்தனம் எம்மை அழைத்தகாரியம் தெரியச்சொல்வீர்.

மதனசேகரன்:—சில்பியரே இக்காட்டிற்கு வடமூலையி லிருக்கப்பட்ட காட்டிலோர் விசித்திரமாகிய நாட்டை நியமிக்கவேண்டியது அதற்கு எவ்வளவு பொருள்பிடிக்கும் அதை தெரியச் சொல்லும்.

சில்பி:—ஐயா! நீர் சொன்னதுபோல் புதியநாட்டைக் கட்டவேண்டுமானால் ஐயாயிரம் வராகன் பிடிக்கும்.

மதனசேகரன்:—ஆ! ஆ! அப்படியா ஆனால் இதோ நீ சொன்ன பொருள்தன்னில் பாதிதந்தேன் எல்லாவேலையும் தீர்த்துவிட்டு வந்து மிகுதிபொருளை பெற்றுக்கொள்வீர்.

சில்பி:—மகாபாக்கியம் உமதிஷ்டப்படியே நாட்டை கட்டிவிட்டு பொருளை பெற்றுக்கொள்கின்றேன்.

மதனசேகரன்:—ஆனால் இனி ஒருவாரத்தில் முடித்திடவேண்டியது.

சில்பி:—அப்படியே முடித்துதருகின்றேன்.

மதனசேகரன்:—அம்மா யான் புதியநாட்டை கட்டும்படி திட்டஞ்செய்துவிட்டேன் ஆனால் நாம் கிரஹப்ரவேசம் செய்யும் சமயத்தில் தமயனுக்கு விவாகமில்லாமல் போகலாமா? இது பிறர்கண்டால் பரிகாசியரா? நம்முடன் பிறந்தவனாயிருந்தால் நீ இப்படி சும்மாவிருப்பாயா? ஆனதுபற்றி யான் தமையனுக்கு நமது வம்சத்தில் பெண்தேடி விவாகமுடித்துவிட்டு மறுமொழி கூறுவேன்.

சற்குணாம்பிகை:—அடாயென் செல்வமே என்மனதிலிருந்த கவலையை யான் யேதென்று சொல்வேன் உன் மனதிடத்தை தெரிந்திட காற்றுக்கொண்டிருந்தேன் ஆனால் கூடியசீக்கிரத்தில்முடித்தால் உத்தமம்.

மதனசேகரன்:—அப்படியே முடிக்கிறேன்.

சில்பி:—வந்தனம் வெகு வந்தனம்! இராஜகெம்பீரா தமது சித்த மகிழும்படி புதியநாடும் கோட்டையும் கட்டிவிட்டேன் வந்து பார்த்து ஆனந்தமடைவீர்.

மதனசேகரன்:—ஆ! ஆ! சந்தோஷம்! இதோ வருகின்றேன். அண்ணா வருவீர் நாமிருவரும் புதியநாட்டை பார்த்துவிட்டு வருவோம்.

வீரகாந்தன்:—இதோ வருகின்றேன்.

மதனசேகரன்:—ஆ! ஆ! வெகுமேர்த்தி இந்நாட்டைப்போல் நாடு நான் எங்கும் கண்டதிகிடையாது இந்த வீதிகளின் பெருமையைச் சொல்வீர் சில்பியரே.

சில்பி:—ஐயா! இது பிரம்மகுலத்தாராகிய பிராமணர் வாழும்வீதி இது சூத்திரர்வாழும் வீதி. இது நீங்கள்வாழ்வதற்கு தகுாத கோட்டைபாரும்.

மதனசேகரன்:—வெகுசந்தோஷம் இதோ உமக்குக் கொடுக்க வேண்டிய ரொக்கம் பெற்றுக்கொள்வீர் சில்பியரே.

சில்பி:—மகாபாக்கியம் பெற்றுக்கொண்டேன்.

மதனசேகரன்:—அண்ணா இந்தநாட்டை கட்டியது மகாகேர்த்தியாக இருக்கிறது இனிநாம் வீட்டிற்குப்போகலாம் வருவீர்.

வீரகாந்தன்:—சந்தோஷம் போகலாம் வருவாயடா.

மதனசேகரன்:—அம்மா புதியநாடும் கட்டிதீர்த்துவிட்டது யான் வெனது மாமனாரிடம்சென்று நமதுவம்சத்தில் பெண்ணை தேடும் படி சொல்லிவருகின்றேன்.

சற்குணாம்பிகை:—அப்படியே செய்வாயடா கண்மணியே.

## மந்திரி மனை.

மதனசேகரன்:—ஆரடா த்வாரத்தில்?

சேவகன்:—வந்தனம்! என்னவிசேடம் சொல்லுமையா?

மதனசேகரன்:—அடா காவலனே எனதுமாமனார் யென்னசெய்கின்றார்.

சேவகன்:—ஐயனே அந்தப்புரத்தில் இருக்கின்றார்.

மதனசேகரன்:—சந்தோஷம் மாமா வந்தனம் செய்கின்றேன்.

உத்தமகுணன்:—கல்யாண்! என்னவிசேஷம்? அகாலத்தில் வர வேண்டிய காரணமேது தெரியச்சொல்வீர்.

மதனசேகரன்:—மாமா! ஏதொன்றுமில்லை எனது தமையனுக்கு விவாகஞ்செய்ய வேண்டுமென்று மனமிட்டோம். ஆகையால் நமதுவம்சத்தில் பெண்தேடி தருவீரென உமதிடம் வந்தேன்.

உத்தமகுணன்:—அப்படியா வெகுசந்தோஷம் அடுத்தநாட்டின் வேந்தனுடையபுதல்வி இருப்பதாக கேள்வியடைந்தேன் ஆகையால் யான்சென்று விசாரித்து முடிவுசெய்கின்றேன் நீ துயரமடையவேண்டாம்.

மதனசேகரன்:—சந்தோஷம் யான் போகட்டுமா?

உத்தமகுணன்:—அப்படியே போய்வருவீர்.

உத்தமகுணன்:—நாம் நமது மருகனுக்குரைத்தபடி நாம்சென்று விசாரித்துவருவோம்.

## மறுநாடு.

உத்தமகுணன்:—ஆரடா த்வாரத்தில்?

சேவகன்:—ஐயா தாங்கள் யார்? எங்கிருந்துவந்தீர்? என்ன காரியம் தெரியச்சொல்லுமையா.

உத்தமகுணன்:—அடாகாவலனே? தர்மாங்கத மகாராஜாவினுடைய மந்திரி த்வாரத்தில் வந்திருப்பதாக சொல்லடா.

சேவகன்:—அப்படியே சொல்கிறேன்.

சேவகன்:—மஹராஜ். வந்தனம்செய்கின்றேன்.

சத்தியதரன்:—என்னவிசேஷமடா காவலனே?

சேவகன்:—மகராஜ்! தர்மாங்கத மகாராஜனுடைய மந்திரி த்வாரத்தில் வந்திருக்கின்றார்.

சத்தியதரன்:—மந்திரி நாம் பகுதிகட்டப்பட்ட வேந்தனுடைய மந்திரி வந்திருக்கின்றாராம். நாம் எதிர்சென்று அழைத்துவருவோம் வருவீர்.

நீதிலோலன்:—உமதிஷ்டப்படி நாம் சென்று அழைத்துவருவோம் வருவீர்.

சத்தியதரன்:—ஆ! ஆ! மந்திரி வந்தனம் வருவீர் கொலுமண்டபத்திற்கு.

உத்தமகுணன்:—இதோ வருகின்றேன்.

சத்தியதரன்:—மந்திரி! இந்த ஆசனத்திலமர்ந்து தாங்கள் யெம்மை தேடிவந்த காரணம்யாது அதை விபரமாகச்சொல்லும்.

உத்தமகுணன்:—இராஜனே! மற்றேதுமில்லை தங்களுடைய க்ஷேமத்தையும் குடும்ப க்ஷேமத்தையும் தெரிந்துக்கொண்டு போகலாமென இப்படி வரலாகினேன்.

சத்தியதரன்:—அய்யனே! நானும் எனது குடும்பத்தாரும் க்ஷேமந்தான் ஆனால் எனக்கு வெகுநாளாக புத்திரபாக்கியமில்லாமல் மனக்கவலையடைந்து துயரபிடும்சமயத்தில் பரமன் மனமகிழ்ந்து எனக்கு ஓர் புத்திரியைத்தந்து வேடிக்கை பார்க்கின்றார். அது என்னவென்றால் புத்திரியானவள் புஷ்பவதியாகி இரண்டு வருடகாலமாகியும் விவாகமில்லாமலிருப்பதால் என்மனம் பரிதாபமடைகின்றது. எல்லா சந்தோஷத்தில் இதுதான் பெருந்துன்பம் என்திரேகத்தை குன்றச்செய்கிறது.

உத்தமகுணன்:—ஐயா! இராஜனே நானும் இதைவிட எண்மணங்கதிகமாக துன்பமடைந்து கடைசியில் ஓர்வேந்தனுக்குத்தந்து விவாகஞ்செய்தபிறகு என்மனம் சந்துஷ்டியடைந்தது. அப்படி நீர் எந்தவேந்தன் புதல்வனுக்காகிலும் கொடுத்து விவாகம் முடித்துவிட்டால் நலமல்லவா. இப்படி துன்பப்படுவதேன்.

59072

0-,892m,L8,m
N16

சத்தியதரன்:—ஐயா! நீர்சொல்வது நல்லயோசனைதான் ஆனால் நான் பெண்ணை வைத்துக்கொண்டிருக்கிறேனென்று பறைசாட்டிக்கொண்டிருக்கிறதா? யாராகிலும் வந்துகேட்டால் சொல்லலாகுமா இல்லாவிட்டால் யானே சொல்லுகிறதா? அப்படி எங்கேயாகிலும் இராஜபுதல்வனிருந்தால் தாங்கள் உபகாரம் செய்யலாகாதா.

உத்தமகுணன்:—ஆனால் நீர்சொன்னதுபற்றி நான்போய் ஏற்பாடுசெய்கின்றேன் அதுபோல் நீர் சம்மதமடைவீரா.

சத்தியதரன்:—இது வென்ன குருடன் நேத்திரம்வேணுமென்று கோருவானு வேண்டாமென்று வெறுப்பானு. நீர்சொல்லும் படியான மொழிக்கு யானும் சம்மதமடைவேன் நீர்யேதும் சந்தேகமிடாமல் சொல்வீர்.

உத்தமகுணன்:—ஒன்றுமில்லை எனதுபுதல்வியும் நமது வேந்தன் புதல்விதனைத்தந்து விவாகஞ்செய்த மதனசேகரன் யென்பவருடைய தமயனுக்கு பெண்வேணுமென்று எண்ணமிட்டிருந்தார் அம்மொழி என்காதில் விழுந்தது அச்சமயத்தில் உமதுகியாபகம் எனக்குபூர்த்தியாகி உம்மை விசாரித்தபிறகு அவ்விடத்தில் மொழியாடலாமென்று யெண்ணமிட்டுவந்தேன். நீர் கொடுக்குந்தடையுண்டா.

சத்தியதரன்:—உமதுசொல்லுக்கு யான்பின்சொல் சொல்லமாட்டேன் அன்னவர் எவ்வளவு ஸ்திதிவந்தன்.

உத்தமகுணன்:—ஆ! ஆ! அவர்களுடைய ஸ்திதியை விசாரிக்க வேண்டுமோ அன்னவர்கள் குணதிசயம் தெரிந்தல்லவா நாங்கள் சம்பந்தமடைந்தோம். நீர் என்ன அப்பெண்ணுக்கு பூஷணந் தரிப்பீர்.

சத்தியதரன்:—ஐயா! எனக்கு வரும்படியான மருகனுக்கு இன்னாட்டை மகுடம்சூட்டி யான் நேத்திரோத்ஸவமாக பார்க்கலாமென்று எண்ணமிட்டிருக்கின்றேன்.

உத்தமகுணன்:—அன்னவர் உமதுநாட்டை கினவிலும் எண்ணமிடமாட்டார் எவ்வளவும் உமதுசொத்தை இச்சிப்பவர் அவ

ரல்ல. நல்ல நீதியடைந்தவர். சீக்கிரம் வேதியரையழைத்து தினம் விசாரிப்பீர்.

சத்தியதரன்:—அப்படியா? வெகுசந்தோஷம் இதோ வேதியரை அழைத்துவரும்படி திட்டம்செய்கிறேன். அடா காவலனே? நீசென்று நமது புரோகிதரை அழைத்துவருவாயடா.

காவலன்:—இதோ நிமிஷநேரத்தில் அழைத்துவருகின்றேன்.

காவலன்:—ஐயா புரோகிதரே உம்மை வேந்தன் சீக்கிரத்தில் அழைத்துவரும்படி சொன்னார் வருவீர்.

புரோகிதர்:—இதோ வருகின்றேன்.

சத்தியதரன்:—வந்தனம் புரோகிதரே இந்த ஆசனத்திலமருவீர்

புரோகிதர்:—இராஜனே! என்னிடம் தர்ப்பாசன மிருக்கிறது அதில் அமருகின்றேன் ஆனால் என்னை அழைத்தகாரியமேது தெரியச்சொல்வீர்.

சத்தியதரன்:—ஓ புரோகிதரே நமதுபுதல்விக்கு விவாகம்செய்ய எண்ணமிட்டபடியால் எந்ததினம் சுபதினம் அதை விபரமாகச் சொல்லும்.

புரோகிதர்:—இந்தவருடம் ஆவணி மாதம் இருபத்தொன்பதாம் தேதியில் துலாம்லக்கினமானபடியால் அந்தலக்கினத்தில் விவாகம் செய்தால் நலம் இதைவிட தினம் வேறுகிடையாது.

சத்தியதரன்:—சந்தோஷம் அத்தினத்தில் நீர் வரவேண்டியது. ஐயா மந்திரி இந்ததினத்தில் மாப்பிள்ளையுடன் அனைவரும்வந்து சேரவேண்டியது.

உத்தமகுணன்:—சரிதான் நீர்சொன்னதெல்லாம் அந்தபுதல்வன் வீட்டில் முகூர்த்தமா? அல்லது நீர்கன்னியாதானமாக புத்திரி தனை தருகின்றீரா அதைச்சொல்லும்.

சத்தியதரன்:—அய்யா! எனக்கு புத்திரரில்லாமல் ஓர்புத்திரியான படியால் யான் கன்னிகாதானமாக விவாகஞ்செய்து நேத்தி

ரோத்ஸவமாக பார்க்கவேண்டியது. ஆகையால் அவர்களுக்கு சிலவில்லாமல் யானே செய்து வைக்கிறேன்.

உத்தமகுணன்:—சந்தோஷம் அப்படியே யழைத்துவருகின் றேன் அடியேன் வரட்டுமா.

சத்தியதரன்:—அப்படியே போய்வருவீர்.

மதனசேகரன்:—அம்மா! மாமா பெண்தேடப்போனவர் இது வரைக்கும் வரவில்லை. பெண் அகப்பட்டதோ அகப்படவில்லை யோ எந்தசந்தர்ப்பமும் தெரியவில்லையே இதற்கென்ன செய் குவேன்.

சற்குணாம்பிகை:—அடா கண்மணியே! நீ எதும் துயரமடைய வேண்டாம் நாம் எவருக்கும் தீங்குசெய்தது கிடையாது அன் னவர் எப்படியும் பெண்தேடாமல் வரமாட்டார்.

மதனசேகரன்:—அம்மா இதோ மாமாவந்துவிட்டார் மாமா இந்த ஆசனத்தி லமருவீர்.

உத்தமகுணன்:—இதோ அமர்ந்தேன். ஆனால் நமதுவீட்டில் எல் லோரும் க்ஷேமமாக இருக்கின்றாரா.

மதனசேகரன்:—மாமா எல்லோரும் க்ஷேமந்தான். ஆனால் நீர் போனகாரியம் சுபமா அசுபமா தெரியச்சொல்லும்.

உத்தமகுணன்:—அப்பா மதனசேகரா! நான் போனகாரியம் பூர்த்திசெய்யாமல் வந்தால் வேந்தன் என்னை மதிப்பாரா. முகூர்த்ததினம் வைத்துக்கொண்டு வந்துவிட்டேன்.

மதனசேகரன்:—அம்மா இதோமாமா வந்துவிட்டார் நமக்கு நல் லகாரியந்தான் செய்துக்கொண்டுவந்தார்.

சற்குணாம்பிகை:—அப்படியா! இதோ வருகின்றேன் அண்ணா வந்தனம்செய்கின்றேன் நீர் சென்றகாரியம் எப்படி முடிந்தது சொல்லுமண்ணா.

உத்தமகுணன்:—அம்மா யான் சென்றகாரியம் பூர்த்திசெய்துக் கொண்டு வந்துவிட்டேன் நீங்களெல்லோரும் தயாராகுவீர்.

சற்குணம்பிகை:—அண்ணா! எந்தநாள், எந்ததேதி, எந்தவாரம், எந்தமாதம் தெரியச்சொல்லுமண்ணா?

உத்தமகுணன்:—அம்மா இந்தமாதம் இருபத்தொன்பதாந்தேதி மிதுனலக்கினத்தில் விவாகமுடிக்க ஸ்திரம் செய்துக் கொண்டுவந்துவிட்டேன். ஆனால் யிந்த வேந்தன் தனக்கு வரும்படியான மறுகனுக்கு தன்நாட்டை மகுடம் சூட்டி பார்க்க மனமுடையவராக இருக்கின்றார் உங்கள் கருத் தேது.

சற்குணம்பிகை:—அண்ணா அன்னவர் இடும்படியான நாடு நமக்கு வேண்டியதில்லை நமக்கிருக்கும்படியான நாட்டை நாம் பரிபாலித்தால் போதுமானது.

உத்தமகுணன்:—வெகு சந்தோஷம் நானும் அப்படிதான் வாக் களித்துவிட்டேன் இதற்கு அன்னவரும் வெகு சந்தோஷ மடைந்தார். ஆனால் நீங்கள் யெல்லோரும் புரப்படுவீர்.

சற்குணம்பிகை:—அப்படியே புரப்படுகின்றோம்.

---

## சத்யபுரி நாடலங்காரம்.

சத்தியதரன்:—மந்திரி! நமது நாடெல்லாம் அலங்காரம் செய்து பிரகு நமதுமாளிகைதன்னில்கல்யாணப்பந்தல்போடும்படி திட்டஞ் செய்துவிட்டும் இதல்லாமல் வரும்படியான வேந் தற்கெல்லாம்தகுந்தவிடுதிகள் தந்து சந்தோஷப்படுத்துவீர்.

நீதிலோலன்:—மகராஜ்! தங்கள் வாய்ச்சொல்வாறுமுந்தி நாடெங் கும் அலங்கரித்து கல்யாண மண்டபம் ஜோடித்துவிட் டேன் இனி நமது நாட்டிற்கு வரும்படியான வேந்தரைக் கண்டு தகுந்த விடுதிகள் தருகவேண்டும்.

சத்தியதரன்:—அப்படியே செய்குவீர்.

மதனசேகரன்:—அம்மா! இதோ சத்தியதரன் நாட்டிற்கு வந்து விட்டோம்.

சற்குணம்பிகை:—அடா யென்கண்மணியே! வெகுசந்தோஷம் ஆனால் நாம் யெங்கு தங்குவது.

மதனசேகரன்:—அம்மா! நாம் வந்தசங்கதி அவர் தெரிந்தால் நமக்கு தகுந்த இடம் தருவார்.

சற்குணம்பிகை:—வெகு சந்தோஷம்.

நீதிலோலன்:—ஆ! ஆ! வருவீர் சம்பந்தியாரே இந்த விடுதிதன்னில் தங்குவீர்.

மதனசேகரன்:—வெகு சந்தோஷம் அப்படியே அமருகின்றோம்.

சத்தியதரன்:—மந்திரி! இன்னம் தாமதமேன்? வேதியர் வரவில்லையா

நீதிலோலன்:—இதோ வேதியர் வந்திருக்கின்றார்.

வேதியர்—மகராஜ்! சீக்கிரத்தில் பெண்ணுக்கு நலுங்கிட்டு ஸ்தானபானம் செய்யவைத்து மஞ்சளாடை இருவரையும் தரிக்கச் செய்து கல்யாண மண்டபத்திற்கு சீக்கிரத்தில் அழைத்து வருவீர்.

சத்தியதரன்:—அப்படியே செய்குரேன் வேதியரே.

சத்தியதரன்:—மாதே ரத்னாங்கி நமது புதல்விதனை அலங்காரம்செய்து கல்யாணமண்டபத்திற்கு அழைத்துவருவீர்.

ரத்னாங்கி:—அப்படியே அழைத்துவருகின்றோம்.

வேதியர்:—ஐயா! இராஜகுமாரா இந்தப்பூமாலையை கையில்பிடியும். அம்மா குழந்தாய் இந்தப் பூமாலையை கையில்பிடியும். நீங்களிருவரும் பூமாலை மாற்றிக்கொள்வீர். ஐயா வேதியர்களே நீங்களெல்லோரும் மங்களாசாசனம் செய்குவீர்.

வேதியர்கூட்டம்:—மங்களம் - மங்களம் - மங்களம்.

வீரகாந்தன்:—நாயகி! இனி தாமத மென்ன நமது நாட்டிற்கு சென்று சந்தோஷமாக வாழலாகுமே.

பத்மாவதி:—நாயகா! யென்று என்னை மாங்கல்யதாரணஞ் செய்துக்கொண்டீரோ அன்றே தமக்கு சொந்தமல்லவா, ஆகையால் யான் தங்களுடன் வருக யேதும் தடையில்லை சற்று யெனது தாய்தந்தையர்க்கு சொல்லிவிட்டு வருகின்றேன்.

**வீரகாந்தன்**:—சந்தோஷம்! சீக்கிரத்தில் சொல்லிவிட்டு வருவாய் கண்ணே.

**பத்மாவதி**:—அப்படியே வருகின்றேன் நாதா.

**பத்மாவதி**:—தந்தையே வந்தனம் செய்கின்றேன்.

**சத்தியதரன்**:—அம்மா யென்னவிசேஷம் நீ சபைக்குவரக்காரணமேது தெரியச்சொல்லுமம்மா.

**பத்மாவதி**:—தந்தையே! சொல்லுகிறேன் கேளும். என்னவென்றால் என்னை மாலையிட்ட நாயகர் தமது சொந்தநாட்டிற்கு வரும்படி அழைக்கின்றார் ஆகையால் நான் யெத்தனை தினமிருந்தபோதிலும் தாய் தந்தை வீடு யெனக்கு சொந்தமாகுமா புகுந்தவீடு சொந்தமேதவிர பிறந்தமனை சொந்தமாகாது ஆனதுபற்றி தாங்கள் விடைதந்தால் போய்வருகிறேன் தந்தையே.

**சத்தியதரன்**:—அம்மணீ! நீ சொன்னது உண்மைதான் ஆனால் பிறந்தவீடு யெக்காலமும் சொந்தமாகாது. ஆகையால் நீ சென்று உனது மாமன்மாமி இவர்கள் இடும்படியான வேலைகளை யேதும் தடைசெய்யாமல் செய்து நற்கீர்த்தியுடன் வாழ்ந்து பிறந்தவீடு நல்ல புகழ்அடையும்படி பெயர் கொண்டு வறவேண்டுமம்மா.

**பத்மாவதி**:—தந்தையே! துப்பாக்கிதனில் பீறங்கி பிறந்தது போல் யான் ஆணகப்பிறந்திருந்தால் நற்கீர்த்தி வாய்த்திருக்கும் யான் பாழான பெண்ஜென்மமெடுத்தேன். உமக்கு கீழ்சொல்வாராமலும் கொண்டகணவனுக்கு அபகிந்தனையில்லாமல் வாழ்ந்து வருவேன் தவிர கெட்டபெயர்வரும் சமயத்தில் யென்னுவியை கத்திக்கிறை செய்குவேன் இது உண்மையென் றெண்ணுவீர் தந்தையே.

**சத்தியதரன்**:—வெகு சந்தோஷம் உனதிஷ்டப்படி போய்வருவாயென் கண்மணியே.

**பத்மாவதி**:—என்னை பத்துமாதம் சுமந்துபெற்ற தாயே! இதுவரைக்கும் யேது ஆபத்து மில்லாமல் காப்பாற்றி சமயமறிந்து ஓரய்யனுக்கு மாலை சூட்டிவைத்தீர் அன்னவா

தன் நாட்டிற்கு வரும்படி யழைக்கின்றார் யான் போய் வரட்டுமா அம்மணி.

ரத்னாங்கி:—யெனதரும் தவச்செல்வமே! யான் இதுகால பரி யந்திரம் ஈ யெறும்பு நாடாதபடிக்கு காப்பாற்றி நமது வீட்டில் சந்தோஷமாக இருப்பாயென்று யெண்ணமிட்ட இப்பாவி யெப்படி மனம்வந்து உன்னை தனியாக அனுப்பி விட்டு துயரமடைந்திருப்பேன் யென் கண்மணியே.

பத்மாவதி:—அம்மணி! நீ எண்ணமிடுவது நீதியல்ல என்றைக்கு நான் பெண்ணாக ஜெனித்தேனோ அன்றைக்கே பிரம்மதேவன் யெனக்கென்று ஓர் அய்யனை நியமித்திருக்கின்றார். ஆகையால் தாய்மனை யென்றைக்கும் சதமாகுமா. நீ தாமதம்செய்யாமல் கொண்ட நாயகன் பின்பற்றி போய் வருக விடைதருவீர்.

ரத்னாங்கி:—நான் பெற்ற செல்வமே! யெனக்கு நீதிபோதிக்க நீயா உகந்தவள் வெகு சந்தோஷம் கொண்ட நாதருக்கு யேதும் மறுமொழிக் கூராமல் சந்தோஷமாக வாழ்ந்து நல்ல கியாதிபெற்று வருவாய் கண்மணி.

பத்மாவதி:—சந்தோஷம் அப்படியே போய்வருகின்றேன் அம்மணி.

பத்மாவதி:—நாயகா! இனி தாமதமென்ன நமது சொந்த நாட்டிற்கு போகலாம் வருவீர்.

வீரகாந்தன்:—அப்படியே போகலாம் நாயகி.

வீரகாந்தன்:—தம்பி மதனசேகரா இதோ யெனதுபத்தினியுடன் நமது நாட்டிற்கு வந்துவிட்டேன்.

மதனசேகரன்:—வெகு சந்தோஷம். அம்மா! இதோ அண்ணனும் வந்துவிட்டார், இனி தாமதம் செய்யாமல் இன்னாட்டை அன்னவருக்கு மகுடம் சூட்டிவைக்க மனமடைந்தேன் உன் கருத்தெதுவோ தெரியச்சொல்லும் அம்மணி.

**சற்குணம்பிகை:**—அடாயென் கண்மணியே! உனது புத்திக்கும் உன் நீதிக்கும் யான் வெகு சந்தோஷமடைந்தேன் உன திஷ்டப்படி யெந்த நாட்டை மகுடம்சூட்ட மனமிட்டனையோ அன்னாட்டைமகுடம்சூட்டி சந்தோஷமடைகுவாயடா யென் செல்வமே.

**மதனசேகரன்:**—அம்மா! நான் காட்டில் நியமித்த நாட்டை மகுடம் சூட்ட மனமிட்டேன் இது உனக்கு சம்மதந்தானா சொல்லுமம்மணி.

**சற்குணம்பிகை:**—அடா யென் செல்வமே உனதிஷ்டப்படி மகுடம் சூட்டினால் கண்ணுக்கழகாகப் பார்க்கலாம்.

**மதனசேகரன்:**—அப்படியே சூட்டுகின்றேன் அம்மா.

---

புதிய நாட்டை

## வீரகாந்தனுக்கு மகுடம் சூட்டல்.

**மதனசேகரன்:**—அண்ணா! இன்னாட்டை உமக்கு மகுடம் சூட்டினேன். ஆனால் நீதி தவறிடாமல் செங்கோல் பரிபாலித்துக்கொண்டு குடிகளிடம் ஆறிலொருகடமை பகுதிபணம் பெற்று நல்ல உத்தமனென்று பெயர்வகித்து சந்தோஷமாக நாட்டை காப்பாற்றிக்கொண்டு வரவேண்டியது.

**வீரகாந்தன்:**—தம்பி மதனசேகரா! யான் கொடிய தாரித்திரிய மடைந்து தாய் தந்தைகளை பரிகொடுத்து அண்டிநிற்கமன மில்லாமல் தியங்கி மனம்வெறுத்து ஆவி விடும்காலத்தில் யென்னை ஆதரித்தவர் நீங்களன்றி வேறுண்டோ. ஆகையால் நீயெப்படி நடக்கும்படி சொல்லுகின்றாயோ அது போல் நடக்க மனமிட்டிருக்கின்றேன்.

**மதனசேகரன்:**—அண்ணா! யான் தாய்தந்தை வயற்றில்பிறந்தும் ஒண்டி மரமாக நின்றேன். தவிர கூடப்பிறந்தவர் யெவரும் காணேன். கடவுள் யென்மீது கருணைகூர்ந்து உம்மை தமயனாக கொண்டுவந்து சேர்த்தார். உம்மைவிட யென்க்கு

தமயன் வேறுகிடையாது நீர் மனகிலேசமில்லாமல் இந் நாட்டை பரிபாலிப்பீர்.

வீரகாந்தன்:—தம்பி! நீயேதும் யெண்ணமிடவேண்டாம் உன திஷ்டப்படி பரிபாலிக்கின்றேன்.

---

## தர்மாங்கதன் தர்பார்.

காவலன்:—மகாராஜ்! வந்தனம் செய்கிறேன்.

தர்மாங்கதன்:—அடா காவலனே யென்ன விசேடம் இவ்வளவு அவசரத்துடன் வரவேண்டியக் காரணமேது.

காவலன்:—மகராஜ்! நமது பட்டத்து குதிரையினுடைய குட்டி யானது வளர்ந்து வாலீபதிசையடைந்து கெம்பீரத்துடன் யெவர்களேயும் கிட்ட நாடவொட்டாமல் கடிப்பதும் வொ தைப்பதுமாக இருக்கின்றது இதற்கென்னசெய்வது.

தர்மாங்கதன்:—மந்திரி! காவலன் சொல்வதைக் கேட்டீரா?

உத்தமகுணன்:—மகராஜ்! இந்தக்குதிரையை அடக்கி ஆள்வ தற்கு நமது மருகனாகிய மதனசேகரன் எல்லா சாஸ்திர மரிந்த வல்லவர் அன்னவரை பார்த்து இக்குதிரையைப் பிடித்து அதனுடைய பலத்தை யொடுக்கும்படி சொன்னல் அதற்குத் தகுந்த மருந்துகளைக்கொடுத்து சுகப்படுத்து வார்.

தர்மாங்கதன்:—நல்லது உமதிஷ்டப்படி மருகனை அழைத்து வருவீர்.

உத்தமகுணன்:—அப்படியே அழைத்து வருகின்றேன். அடா காவலனே நீ வேகமாய்ச்சென்று மதனசேகரனை உடனே வேந்தன் அழைத்ததாகச்சொல்லி யழைத்துவருவாயடா.

காவலன்.—இதோ அழைத்துவருகின்றேன்.

காவலன்:—இராஜகெம்பீரா! வந்தனம் செய்கின்றேன்.

மதனசேகரன்:—யென்னவிசேடமடா காவலனே.

காவலன்:—ஐயா! உம்மை மகாராஜா அழைத்துவரும்படி சொன்னார் வருவீர்.

மதனசேகரன்.—இதுதானா? இதோ வருகின்றேன்.

மதனசேகரன்:—மாமா! வந்தனம்

தர்மாங்கதன்.—கல்யாண் மருகனே இந்த ஆசனத்தின்மீதமருவாய்.

மதனசேகரன்:—அப்படியே யமருகின்றேன். ஆனல் யென்னை அழைத்தக்காரியமேது தெரியச்சொல்வீர்.

தர்மாங்கதன்:—அப்பா மருகனே! நமது பட்டத்து குதிரை ஓர் குட்டிப்போட்டது இந்தக்குட்டி வாலீபதிசையடைந்து யெவருக்குமடங்காமல் திரிகின்றது நீ அஸ்வசாஸ்திரமரிந் திருக்கிறதாக தெரிந்தேன் ஆகையால் யிக்குதிரையைப் பிடித்து நிலையில் கட்டுவாயென உன்னை யழைத்தேன்.

மதனசேகரன்:—இதுவோர் பெரியகாரியமா ஆனல் அந்த அஸ்வமானது ஆறுமாதகாலம் யென்னிடத்தில் இருந்தால் சுகமடையும்.

தர்மாங்கதன்.—அப்பா மருகனே உனதிஷ்டப்படி செய்குவாய்.

மதனசேகரன்:—அப்படியே செய்கிறேன்.

## வணிகநாடு.

| | |
|---|---|
| தேசம் | அபிராமிபட்டணம் |
| வணிகத்தலைவன் | முத்துசெட்டி |
| மனைவி | மீனாக்ஷி |
| புதல்வி | அபிராமி |
| அம்மான் | தொந்துசெட்டி |

முத்துசெட்டி:—அப்பா கந்தசாமிசெட்டி, வீராசாமிசெட்டி, குப்புசெட்டியாரே நான் இதுகாலபரியந்திரம் இந்த நாட்டை பாதுகார்த்துக்கொண்டுவந்து வேண்டிய தனசம்பத்தும் தான்யசம்பத்தும் இன்சம்பத்தும் அதிகமாயிருந்தபோதிலும் யெனக்கு பின்திசையில் இதையெல்லாம் வைத்து பாராட்டுவதற்கு புத்திரபாக்கியமில்லாமல் மனக்கவலையோடிருக்க நாளாச்சுதே இதற்கேது செய்யலாம் சொல்வீர் சபையோரே.

கந்தசாமிசெட்டி:—ஐயா! நீங்களே இப்படி துயரமடைந்தால் யெங்கள்போலொத்த பேதைகள் எப்படி ஜீவிப்பது ஆனால் பகவானுடைய கடாக்ஷமிருந்தால் புத்திரபாக்கியம் கிடைக்கும் இதைப்பற்றி துயரப்படுவதேன்.

வீராசாமிசெட்டி—நல்லசொன்னீர்! நல்லசொன்னீர்! நாம்செய்ய வேண்டிய முயர்ச்சி செய்யாமல் போனால் பகவான் அருள் எப்படி கிடைக்கும். நீ சொன்னதெல்லாம் வீண்மொழி.

குப்புசெட்டி:—ஐயா! நமது வணிகக்கூட்டத்திற்கு குலதெய்வமாகிய கடற்கன்னிகைக்கு பூஜைபோட்டு பிரார்த்தித்தால் புத்திரபாக்கியம் கிடைக்கும் இதுபோல் யெனது மூத்தோர் செய்து புத்திரபாக்கியம் பெற்றதை யான் கேள்விப்பட்டிருக்கின்றேன் நீங்களெவர்மொழியும் கேளாமல் முந்தி கடற்கன்னிகைக்கு பூஜைபோடுவீர்.

முத்துசெட்டி:—சரிதான், குப்புசெட்டி சொன்னது நிக்ஷயமானமொழி அதுபோல் செய்தால் பலன் கிடைக்கும் ஓய் செட்டிகளே நீங்களெல்லோரும்யவரவர்வீட்டிற்குபோவீர் யான் அந்தபுரம்சென்று தேவிக்குதெரிவித்துவருகின்றேன்.

செட்டிகள்.—அப்படியே செய்வீர் யெங்கள் மனைக்கு போகின்றோம்.

முத்துசெட்டி:—வெகு சந்தோஷம் அப்படியே போய்வருவீர்.

முத்துசெட்டி:—நாயகி! நீ யேன் மனக்கவலையோடிருக்கின்றாய் உன் கருத்தை தெரியச்சொல்.

மீனாக்ஷி:—நாயகா! நான் யேதென்று சொல்லுவேன் நமக்கு வேண்டுமான தனசம்பத்திருந்தும் பகவான் சங்கல்பத்தால் புத்திரபாக்கியமில்லாத மனக்கவலையேதவிர மற்றக் கவலை யேதுமில்லை. நமக்குபின் இதையெல்லாம் பரிபாலிப்பதற்கு எவரும் திக்கில்லையே யென என் மனது தாமரையிலைமீதுள்ள ஜலம்போல் தத்தளிக்கின்றது.

முத்துசெட்டி:—நாயகி! நேற்றியதினம் நமது இனத்தாருடன் சந்தோஷமாய் மொழிகளாடும் சமயத்தில் யென் மனக்கவலைதனை அன்னவருடன்சொல்ல அவர்கள் யென் குறைகளைக்கேட்டு மனவருத்தமடைந்து நமது குலதேவதையாகிய கடற்கன்னிகைகள் தன்னை தியானித்து பூஜைபோட்டால் புத்திரபாக்கியம் கிடைக்குமென்று சொன்னார் ஆகையால் நாளையதினம் வெள்ளிக்கிழமை ஆனதுபற்றி பூசைபோட்டால் நலமாகும்.

மீனாக்ஷி:—அப்படியே உமதிஷ்டம்போல் செய்யலாம்.

## அந்தப்புரம்.

மீனாக்ஷி:—அடி தோழிமாரே! இதுயென்ன காலக்கொடுமை நான் கடற்கன்னிக்கு பூஜைப்போட்ட முதற்கொண்டு எனக்கு கெற்பசின்னமுண்டாகி தசமாதம் வளர்ந்து இப்போது இருந்ததுபோ லிருந்து யேதோ நோக்காடு கொள்கின்றதே இதற்கென்ன செய்வேன்.

தோழி:—அம்மா நீ யேதுக்கும் துயரப்படவேண்டாம். இதோ அரைவினாடியில் மறுத்துவமாதை அழைத்து வருகின்றேன் அன்னவளானல் தக்கப்படி சாந்தி செய்வாள்.

மீனாக்ஷி —தோழி! ஆனல் சீக்கிரத்தில் அழைத்துவா. என்னல் இந்த வேதனை சகிக்க முடியாது

தோழி.—இதோ அரைவினடியில் வருகின்றேன்.

தோழி:—அடி பாட்டி யென்ன செய்கின்றாய் ?

மருத்துவச்சி:—அடியம்மா நான் ரொம்ப அலசல்பட்டு இப்போதுதான் வந்தேன் உடனே நீ வரக் காரணமேது தெரியச் சொல்.

தோழி.—அடி பாட்டி நீ யேதுக்கும் பயப்படவேண்டாம். ஆனல் நமது நாட்டிலிருக்கும்படியான பெரியசெட்டியார் தேவி கர்பவேதனையுடன் அதிக தொந்திரவு படுகின்றாள். உன்னை சீக்கிரத்தில் அழைத்துவரும்படி கூறினர்.

மருத்துவச்சி:—ஐயோ தெய்வமே! அப்படியா அன்னவர் நிலத்தில் வீடுகட்டிக்கொண் டிருப்பதால் நாம் போகாவிடில் இதைவிட்டுத் துரத்துவார். இதோ வருகின்றேன் வா. போகலாம்.

தோழி:—ஆனல் புறப்படு.

மருத்துவச்சி:—அடியம்மா இதென்ன அலங்கோலம். சரிதான் சரிதான்! தலசன் புதல்வனல்லவா தோன்றாத யெண்ணம் தோன்றும் அம்மா சற்று நேரம் பொருத்துக்கொண்டு இரும். அம்மா! இதோ பார்த்தாயா நவகோடி சந்திரர் உதயமானதுபோல் ஓர் திவ்யமாகிய பெண்குழந்தை பிறந்தது. எனக்கு சேரவேண்டிய கட்டளை தருவீர் யான் போகவேண்டும்.

தோழி:—பாட்டி இதோ தந்தேன் பெற்றுக்கொள்.

மருத்துவச்சி:—வெகு சந்தோஷம் யான் போய் வருகின்றேன்.

தோழி.—அய்யா செட்டியாரே உமது தேவியார் தெய்வலோகப் பதுமைபோலும் தங்கத்தை காய்ச்சுருக்கி ஊற்றின சிலை போலும் ஓர் பெண் குழந்தையைப் பெற்றார்.

முத்துசெட்டி:—வெகு சந்தோஷம். இதோ நமது புரோஹிதரை யழைத்து நாமகரணம் செய்து தகுந்த நாமதேயமிடவேண்டும்.

தோழி:—அப்படியே செய்குவீர்.

முத்துசெட்டி:—ஐயா, கந்தசாமிசெட்டியாரே நமது புரோஹிதரை அழைத்துவருவீர்.

கந்தசாமி செட்டி:—இதோ அழைத்து வருகின்றேன். சுவாமி புரோஹிதரே உம்மை நாட்டுசெட்டியார் அழைத்துவரும்படி சொன்னார் வருவீர்.

புரோஹிதர்:—இதோ வருகின்றேன்.

முத்துசெட்டி:—சுவாமி வந்தனம் செய்கின்றேன்.

புரோஹிதர்:—சுகீபவ ! சுகீபவ ! ஐயா, செட்டியாரே இவ்வளவு அவசரத்துடன் யென்னை அழைத்தக் காரியமேது தெரியச் சொல்லும்.

முத்துசெட்டி:—சுவாமி ! மற்றேதுமில்லை நமக்கு ஓர் பெண்குழந்தை பிறந்தது அதற்கு நாமகரணம் செய்து தகுந்த நாமதேயமிடவேண்டியதா லும்மை வரவழைத்தேன்.

புரோஹிதர்:—ஐயா செட்டியாரே ! உமது பேருக்கும் பிறந்த லக்கினத்திற்கும் பார்த்தால் இக்குழந்தையால் உமக்கு நற்கீர்த்தி பெருகி சுகபதவி யடைவீர். ஆனால் இந்தக்குழந்தைக்கு அபிராமியென பெயரிட்டால் நன்மையாயிருக்கும்.

முத்துசெட்டி—வெகு சந்தோஷம் அப்படியே பெயரிட்டழைக்கின்றோம். ஐயா கந்தசாமி செட்டியாரே இந்த வேதியருக்கு தகுந்த வெகுமதி கொடுத்தனுப்புவீர்.

கந்தசாமிசெட்டி:—அப்படியே கொடுத்து அனுப்புகின்றேன்.

முத்துசெட்டி:—நான் அந்தப்புரம்சென்று வருகின்றேன். நீங்களெல்லோரும் அவரவர் வீட்டிற்கு சென்று வருவீர்.

செட்டிகள்:—அப்படியே சென்று வருகின்றோம் பெரிய செட்டியாரே.

முத்துசெட்டி:—நாயகி! நமது புதல்விதனை நமது நாட்டிலிருக்கும்படியான பாடசாலைக்கு அனுப்பி தகுந்த வித்தைதனை புகட்டி வைத்தால் நமக்கு நற்கீர்த்தி யமைக்கும் உன் கருத்தெதுவோ தெரியச் சொல்.

மீனாக்ஷி:—நாயகா! நமது குலத்தில் மாதர் வாசித்தது கிடையாது. ஆனாலும் நமக்கு தவபலத்தால் அழகு பொருந்திய பெண் குழந்தை பிறந்தது. உமதிஷ்டப்படி பாடசாலைக்கு அனுப்புவீர் நான் யென்ன தடை சொல்லப்போகின்றேன்.

முத்துசெட்டி:—சரிதான்! வெகுசந்தோஷம் அப்படியே அனுப்புகின்றேன்.

உபாத்தியாயர்:—அடா பசங்களே உங்கள் பாடங்களை கொண்டு வருவீர்.

சுப்பன்:—ஐயா! இராத்திரி நான் சாப்பிடும்போதுயென் பாடத்தைக்கூடச் சாப்பிட்டுவிட்டேன் அதற்கேது செய்யலாம் நல்ல பேதிக்கு உம்மிடத்தி லிருக்கிறதா.

உபாத்தி:—அடா சீனா! இவன் அதிக தலைக்கொழுத்தவன்இவனை பிந்தி விசாரிக்கிறேன் ஆனால் உன் பாடம் கொண்டுவா.

சீனன்:—ஐயா, நீர் சொன்ன பாடம் சொல்கிறேன் ஆனால் அதற்கு உரை சொல்லவேண்டியது

சந்ததமும் சாராயம் குடிக்கவேண்டும்
சதாமீன் கருவாடை தின்னவேண்டும்
வந்தவிருந்தாளியை தடியா லடிக்கவேண்டும்
வஞ்சனை செய்துபலர் குடியைகெடுக்கவேண்டும்
பந்தயம் கட்டி சூதாடவேண்டும்
பனங்கள்ளை பால்போ லுண்ணவேண்டும்

பாடினலென்னைப்போல் பாடவேண்டும்
படித்தாலும் ககாரமதை படிக்கவேண்டும்
ஆடினல் சக்கிலிக் கூத்தாடவேண்டும்
அடித்தாலும் குருக்களை யடிக்கவேண்டும்
சூடினல் யெருக்கன்பூ சூடவேண்டும்
சுழித்தாலும் நாய்வால்போல் சுழிக்கவேண்டும்
தேடினல் பிறர்பொருளை தேடவேண்டும்
நீ சேருவீர் வைகுந்தம் சித்தந்தானே.

**சீனன்:**— ஐயா! இந்தப் பாட்டை இராத்திரி நமது வீட்டில் படித்துக்கொண்டிருந்தேன் அயல்வீட்டிலிருந்தொருவர் வந்து இதைக்கேட்டு கலகலவென்று சிறித்து அடா பய லே உபாத்தியாயர் இந்தப் பாடத்தைதான கற்றுக் கொடுத்தார் நல்ல உபாத்தியாயர் நல்ல சீடன்யென கேலி செய்தார் ஆகையால் இதற்கு உரை சொல்லாமல்போனல் யென்னை யேளனம் செய்வார்.

**உபாத்தி:**—அப்படியா நீ நல்ல புத்தியுடையவன் நான் சொல்லப் பட்ட வுரைதனை கேட்டுக்கொண்டு அன்னவருக்கு சொல்ல வேண்டும்.

**சீனன்:**—அப்படியே சொல்கிறேன் சொல்வீர்.

**உபாத்தி:**—சொல்கிறேன் கேளடா! எப்படியென்றல்(சந்ததமும் சாராயம் குடிக்கவேண்டும்) சந்ததமும் யென்றல் நம்மு டன் இருக்கப்பட்ட காமக்குரோத லோப மதமாச்சரிய மென்னும் ஒன்பதுபேரும் யேகமனதாகநின்று "சாராய மென்னும்" வாசியோகத்தை தினந்தோறும் அனுசரிக்க வேண்டியது. இன்னம் (சதாமீன் கருவாடு தின்னவே ண்டும்) சதா யெக்காலமும் இடைவிடாமல் மீன் யென்பது சூர்யகலை, கருவாடு யென்பது சந்திரகலை, இந்த சூரிய கலை சந்திரகலைதனை அனுசரித்தேயோகமென்னும்வாசியை நிலைநிருத்த வேண்டும். (வந்தவிருந் தாளியை தடியாலடிக்க வேண்டும்) யென்றல் நாம் யோகநித்திரை செய்யுங் காலத்

தில் அதை கெடுக்கும்படி காமக்ரோத லோபமதமாச்சரிய மென்னும் ஐந்துபேரை நாம்அடித்துதுரத்திவிட்டால்நாம் கோரிய யெண்ணம் நிறைவேறும். (வஞ்சனைகள் செய்து பலர் குடியைக் கெடுக்கவேண்டும்) யென்றால் நாம் இவர்களுடன் அனுசரித்ததுபோலிருந்து இந்த ஐவருடைய குடும்பத்தை அழிக்க வேண்டும். (பந்தயங்கள்கட்டி சூதாடவேண்டும்) இந்த ஐந்துபேருடன் வைராக்கியமிட்டு சூதுமார்க்கமாக நாம் யோகத்தை யனுசரித்து ஞானுட்டமாடவேணும். (பனங்கள்ளை பாலைபோ லுண்ணவேண்டும்) யென்றால், இந்த யெண்ஜாண் மரத்தில் யேணிபோட்டு பதிணுருபடியேரி, இம்மரத்தின் பாளைக்கு மூடியிருக்கப்பட்ட குடத்தை யெடுத்து அதிலிருக்கும்படியான அமுர்தக்கள்ளை குடித்து ஆனந்திக்கவேணும். (பாடினால் யென்னைப்போல் பாடவேண்டும்) ஆனால் இந்த மனதை நிலைநிறுத்தி ஞானக்கதவை திறந்து பார்க்கவேணும். (படித்தாலும் ககாரமதை படிக்கவேணும்) நாம் எப்படி ஆடினபோதிலும் ககாரவட்ட மென்னும் மெஞ்ஞான பொருளை தேடவேணும். (ஆடினால் சக்கிலிக்கூத் தாடவேண்டும்) ஆனால் இல்லரத்தி லிருந்தபடியே இந்த யோகசாதனம் செய்து மேலானபடி யேரி, திவ்யமாக நடனம் புரியவேணும். (அடித்தாலும் குருக்களை யடிக்கவேண்டும்) குருக்கள் யென்னும் பொருள் யேதென்றால் கோபமென்னப்பட்ட குரங்கு, அந்தக் குரங்குக்கு நானாவிதமான புத்திமதிகளைச் சொல்லி அடக்கினால் நலம். (சூடினால் யெருக்கன்பூ சூடவேண்டும்) இந்த யெருக்கன்பூ மத்தியில் இருக்கப்பட்ட அறுகோணம்போல் நாம்பிரமாணத்துடன் அக்கோணத்திலிருக்க வேணும். (தேடினால் பிறர்பொருளைத் தேடவேண்டும்) இந்த ஒன்பது பேர்களுடைய பொருளை நாம் சம்பாதித்து அதன்பிறகு ஞானவீட்டை யடைந்து நிர்மலமாக சுடரைக்கண்டு, தெளிந்தாடினால் (சேருவீர் வைகுந்தம் சித்தம் தானே.) நாம் மரு ஜென்ம மடையாமல் பேரின்ப பதவியடைந்து முக்தராகலாம். இதுதான் இதனுடைய பொருள் தெரிந்துக்கொண்டீரையா?

சீனன்:—குருநாதா நான் ஆனந்தக்கடலில் மூழ்கினேன்.

முத்துசெட்டி:—சபாஷ்! இப்பேர்க்கொற்ற உபாத்தியாயரிடம் நமது புதல்விதனைவிட்டால் நல்லநீதிமாற்கம் போதிப்பார். ஐயா வந்தனம் செய்கின்றேன்.

உபாத்தி:—ஐயா நீர்யார்! இங்கு வந்தக் காரியமேது தெரியச் சொல்வீர்.

முத்துசெட்டி:—ஐயா! என்னை இன்னூட்டில் பெரிதனசெட்டியென்பார். என் புதல்வியை பாடசாலைக்கு அனுப்புகின்றேன் வித்தை புகட்டுவீர்.

உபாத்தி:—செட்டியாரே! உமதிஷ்டப்படி வித்தை புகட்டுகின்றேன் ஆனல் நாளையதினம் அனுப்புவீர்.

முத்துசெட்டி:—அப்படியே அனுப்பிகின்றேன்.

## முத்துசெட்டி மனை.

முத்துசெட்டி:—நாயகி! நமதுபுதல்விதனை பாடசாலைக்கு அனுப்புவதற்கு யென்னதடை

மீனாக்ஷி:—நாயகா! உமதிஷ்டப்படி அனுப்புவீர்.

முத்துசெட்டி:—அம்மா! அபிராமி உனக்கு வித்தை புகட்ட வேண்டுமென யெண்ணமிட்டேன் உன் இஷ்டத்தைச் சொல்.

அபிராமி:—தந்தையே! உமதிஷ்டப்படி வித்தை கற்றுக்கொள்ளுகிறேன்.

முத்துசெட்டி:—சரிதான் என் பின்பற்றி வருகுவாயம்மா.

அபிராமி:—இதோ வருகின்றேன் தந்தையே.

முத்துசெட்டி:—ஐயா! உபாத்தியாயரே! இப் புதல்விக்கு நாலு வேதமும் ஆறுசாஸ்திரமும் அறுபத்திநான்கு கலைக்கியானமும் புகட்டுவீர்.

உபாத்தி:—அப்படியே புகட்டுகின்றேன் விட்டுப்போவீர்.

முத்துசெட்டி:—இதோ விட்டுப்போகின்றேன். அம்மா அபிராமி இந்த உபாத்தியாயர் சொல்லும்படியான வித்தை யெல்லாம் நன்ருகக் கற்றுக்கொண்டு மனைக்கு வருவா யம்மா.

உபாத்தி:—அம்மா! அபிராமி இந்த யேட்டைக் கையில் பிடியும் இதோ நான் சொல்கிறபடி நீயும் சொல்லுவாயம்மா.

அபிராமி:—அப்படியே சொல்லுகின்றேன் உபாத்தியாயரே.

உபாத்தி:—(ஹரி நமோத்துசிந்தம்) இதுபோல் நீயும் சொல்.

அபிராமி:—(ஹரி நமோத்து சிந்தம்) ஐயா நானும் நீர் சொன்னதுபோல் சொன்னேன் ஆனல் இதற்கு மூலமந்திரமென்பதை விபரமாகச் சொல்லும்.

உபாத்தி:—இப்படியல்லவா கேழ்க்கவேண்டும். நமது பாடசாலை தன்னிலிருக்கப்பட்ட பிள்ளைகளெல்லாம் பிள்ளைகளா. கேவலம் பெண்ணுசப் பிறந்த புதல்வி கேட்ட கேள்விக்கு நாம் எப்படி விடைதருகுவோம் ஆனாலும் பெரிதல்ல நமக்கு தெரிந்தமட்டுக்கும் சொல்வோம். அம்மா! ஹரிநமோத்துசிந்தம் யென்னும் பதமானது மும்மூர்த்திகளும் அடங்கிய பொருள். எப்படியென்ருல் அகர. உகர, மகர மென்னும் இம்மூன்றும் ஒன்ருகக்கூடி ஓம் யென்ற பிரணவம் சப்திக்கின்றது. ஆனதுபற்றி சர்வத்திற்கும் மூலமந்திரம் ஓம் யென்னும் பொருளே தவிர மற்றது கிடையாது. இதுவே பிரம்மம், இதுவே விஷ்ணு, இதுவே சிவம் ஆகையால் இந்த ஓம் என்னப்பட்டப் பிரணவத்தை எவர் பக்தி விஸ்வாசத்துடன் தியானிக்கின்ருரோ அன்னவருக்கு இகபர சுகத்தைக் காட்டி பேரின்பக் கடலில் மூழ்கி மோக்ஷப் பதவியடைவார். இதுதான் சர்வத்திற்கும் மூலமந்திரம்.

அபிராமி:—குருநாதா! உம்மால் நாலுவேதம் ஆறு சாஸ்திரம் அறுபத்திநான்கு தத்துவங்களை நன்ருக தெரிந்துக்கொண்டேன்.

உபாத்தி.—சந்தோஷம். இனி உனது வீட்டிற்கு போகலாம் வருவாயம்மா!

உபாத்தி.—ஐயா! செட்டியாரே உமது புதல்வி நம்மிடத்தில் நன்ருக படித்துக்கொண்டாள் இனிஉமது புதல்வியை வீட்டில் நிருத்திக்கொள்வீர்.

முத்துசெட்டி.—சந்தோஷம் உபாத்தியாயரே இதோ வேண்டிய வெகுமதிகள் பெற்றுக்கொள்வீர்.

உபாத்தி:—சந்தோஷம் உம்மால் கொடுக்கப்பட்ட வெகுமதிகளைப்பெற்றுக்கொண்டேன் யான் போய்வருகின்றேன்.

முத்துசெட்டி.—சந்தோஷம் போய்வருவீர்.

முத்துசெட்டி:—ஆ! ஆ! நாயகி! நமது புதல்விக்கு வயதோ ஈரெட்டாகிவிட்டது இனி விவாகம் செய்யாமற்போனல் நம்மை நால்வரும் நகைப்பார் ஆகையால் உன் கருத்தெதுவோ தெரியச்சொல்.

மீணுக்ஷி:—நாயகா! நன்ருகச் சொன்னீர். என்று நமது கர்பத்தில் புதல்வி பிறந்தனளோ அன்றே தாய்தந்தையரால் ஓர் மாப்பிள்ளைக்கு மாலை சூட்டிவைக்கவேண்டிய கடமை. இப்படியிருக்க நீர் ஏன் என்னை சோதிக்கின்றீர் உமது இஷ்டப்படி செய்ய ஏதும் தடையில்லை

முத்துசெட்டி:—நாயகி! எனது தங்கைப் புதல்வனுகிய தொந்துசெட்டிக்கு விவாகம் செய்துவைக்கலாமென யெண்ணமிட்டேன் உன் கருத்தேது.

மீணுக்ஷி:—நாயகா! கரும்புதின்னக் கூலிகேட்கவேண்டுமா? உமது எண்ணப்படி முடிப்பீர்.

முத்துசெட்டி:—சரிதான் இதோ புரோஹிதரை அழைத்து விவாகத்திற்கு நாள் குறிப்பிட்டுக்கொள்கிறேன். அடா காவலனே நீ உடனே சென்று புரோஹிதரை அழைத்து வா.

காவலன்.—இதோ அழைத்துவருகின்றேன். ஐயா! புரோஹிதரே உம்மை முத்துசெட்டியார் உடனே அழைத்துவரும்படி சொன்னர் வருவீர்.

புரோஹிதர்.—அப்படியா? இதோ வருகின்றேன். சுகீபவா எம்மை அழைத்த காரியமேது தெரியச் சொல்லும்.

முத்துசெட்டி:—ஐயா! புரோஹிதரே மற்றொன்றுமில்லை. இப்பொழுது யெனதருந்தவப் புதல்வியாகிய அபிராமிக்கு விவாகம் செய்ய யெண்ணம். ஆகையால் யெந்தமாதம் யெந்தவருடம் யெந்தநாள் யெந்தவாரம் யெந்த திதி யெந்த யோகம் யெந்த கரணம் சுபதினமாக இருக்கிறது அதை தெரியச் சொல்லும்.

புரோஹிதர்:—ஐயா! முத்துசெட்டியாரே. இந்தவருடம் சித்திரை மாதம் முதல் தேதி செவ் - மேஷம் மிதுன புத கணக்கு போட உத்தமம் இந்தயோகத்தில் விவாகம் செய்ய நலம்.

முத்துசெட்டி:—சந்தோஷம் ஆனல்யான் சாமக்கிரியைகளை தயார் செய்துக்கொண்டு உம்மை அழைக்கின்றேன் வெகுஜாக்கிரதையுடன்வர வேண்டியது.

புரோஹிதர்:—அப்படியே வருகின்றேன் போய் வரட்டுமா?

முத்துசெட்டி:—போய் வருவீர். நாயகி! புதல்விக்கு விவாகம் செய்ய நாள் பார்த்துவிட்டேன். இனி சீக்கிரத்தில் நமது தேசமெங்கும் அலங்காரம்செய்து விவாகம் முடிக்கவேண்டியது.

மீனாக்ஷி:—வெகு சந்தோஷம் உமதிஷ்டப்படி செய்குவீர்.

முத்துசெட்டி:—அடா காவலனே! நீ சீக்கிரம் சென்று நமது நாட்டிலிருக்கப்பட்ட பந்தல் வேலைக்காரனை அழைத்து வருவாய்.

காவலன்:—இதோ அழைத்து வருகின்றேன் ஐயா பந்தல்வேலை செய்பவரே உம்மை முத்துசெட்டி யழைத்து வரும்படி சொன்னார் வருவீர்.

பந்தல்காரன்:—இதோ வருகின்றேன். ஐயா! வந்தனம் எம்மை அழைத்காரியமேது சொல்வீர்.

முத்துசெட்டி:—ஐயா பந்தல் வேலைக்காரரே நமது நாடெங்கும் பந்தல் போட்டு நமது வீட்டில் கல்யாணப் பந்தல் போட வேண்டும் என்ன துகை பிடிக்கும்.

பந்தல்காரன்:—ஐயா நீர் சொல்லும்படியான பந்தல் போடவேண்டுமானல் பத்தாயிரம் வராகன் கொடுத்தால் பந்தல் போட்டுத்தீரும்.

முத்துசெட்டி:—சரி இதோ பத்துவராகன் கொடுக்கின்றேன் வைத்துக்கொண்டு பந்தல் வேலை தீர்ந்தவுடன் மற்றப் பணத்தை தருகின்றேன்.

பந்தல்காரன்:—சந்தோஷமப்படியே செய்கின்றேன்..

## அபிராமி அந்தப்புரம்.

அபிராமி:—ஆச்சிமாரே நாமெல்லோரும் பூங்காவனத்திற்குச் சென்று திவ்ய புஷ்பங்களைப்பரித்து கொண்டைசூடி சற்று விளையாடி வருகலாம் வருவீர்.

தோழி:—அம்மா! ஆம் நீ சொல்வது சரிதான் இந்த சமயத்தில் பூங்காவனம் போகாமல் போனல் நாளை விவாகமான பிறகு யெங்கு போகக்கூடும்.

அபிராமி:—சகி இச்சமயத்தில் நீ சொல்வது மகா ஆச்சரியமாகயிருக்கிறது விவாகமாவது யென்ன? இன்றுதான் கேட்டேன் ஆனல் அதின் உண்மையை தெரியப்படச் சொல்லும்.

தோழி:—அம்மா! சொல்வதைக்கேளும் யெப்படியென்ருல் நேற்றையதினம் உமது தந்தைகொலுவில் புரோஹிதரை வரவழைத்து தங்களுடைய அம்மானகிய தொந்து செட்டிக்கும் உமக்கும் பொருத்தம்பார்த்து இன்றைக்கு எட்டாம் நாள் முகூர்த்தம் நியமித்து நாடெங்கும் மணவோலையனுப்பிவிட்டு நமது நாட்டை அலங்காரம் செய்கின்ருர்கள் இது சந்தற்பம் யானறிந்து உமக்கு தெரிவித்தேன்.

அபிராமி:—அடி சகி! நன்ருக தெரிவித்தனை செக்கு உலக்கை போலிருக்கும் அந்தத் தடியனையா நான் விவாகம்செய்துக் கொள்வது எனக்கு தகுந்த புருடன் இருந்தாலல்லவா யான் விவாகம் செய்துக்கொள்வேன் ஆனல் நீங்கள் செல்வீர் யான் நந்தவனத்திற்கு வரமாட்டேன் நடக்கிறதை பார்க்கின்றேன.

தோழி:—அப்படியே செய்வீர்.

மதனசேகரன்:—நாம்நமது மாமனிடத்தில் குதிரையை பழக்கி தருவதாகச் சொல்லி வெகுநாளாச்சுது ஆகையால் இன்றை யதினம் குதிரையேறி சவாரிசெய்துப் பார்ப்போம். ஆ! ஆ! யென்ன ஆச்சரியம் நாம் குதிரையேறினமாத்திரத்தில் நம்மை யெங்கேயும் நிறுத்தாமல் வடமுகமாக நோக்கிப் போகின்றது அய்யோ தெய்வமே இதென்ன காலகெதி நம்மை கொல்ல நினைத்ததோ அல்லது நம்மைகொண்டு போய் எதாகிலும் குட்டையில் தள்ள நினைப்பிட்டதோ தாய் தமயன் மனைவி முதலானோர் நாம் வரவில்லையென்று என்னவருத்தமடைகிறார்களோ பொழுதும் அந்தியாய்விட்டது.நாம் துயரப்பட்டால் குதிரை நிற்கப்போகிறதில்லை வரும் விதிவழி தங்காது பிரம்மன்யிட்ட விதிப்போல்தான் முடியும். ஆ! ஆ! இது யென்ன நாடோ இந்த பூங்காவனம் யாருடையதோ தெய்வவனமோ அல்லது பரதேவதைகள் வாசஞ்செய்யுமிடமோ நாம் யேது மரியோம் இந்தப் பூங் காவனத்தில் நமது குதிரை நின்றுவிட்டது இந்தவிடத்தில் பச்சென்று புல் இருப்பதால் இது மேய்வதற்கு தங்கினது போல் காட்டுகிறது சரி இதை சற்று மேயவிட்டு அதின் பிறகு நமதிருப்பிடம் போவோம் நமக்கு தாக மதிகரிக் கிறது இந்த தடாகத்தில் தாகமருந்தி இந்த மேடை மீது சற்று நித்திரைசெய்து பொழுது விடிந்தவுடன் நமது நாட்டிற்கு போவோம்.

முத்துசெட்டி:—அய்யா கந்தசாமி செட்டியாரே யெல்லா பந் துக்களும் வந்துவிட்டார்கள். இனி காலதாமதமென்ன புரோஹிதரை வரவழைத்து முகூர்த்தம்நடத்தும்படிசெய்ய லாகாதா.

கந்தசாமிசெட்டி:- இதோ புரோஹிதரும் வந்துவிட்டார்.

புரோஹிதர்:—அய்யா செட்டியாரே இன்னமும் தாமதமென்ன கல்யாணப்பெண்ணையும், மாப்பிள்ளையையும் ஸ்தானபானம் செய்யவைத்து பந்தலுக்கு அழைத்து வரலாகாதா.

முத்துசெட்டி:—இதோ அழைத்து வந்துவிட்டோம் தாமதமில்லாமல் முடிப்பீர்.

புரோஹிதர்:—விவாகம் முடிந்துவிட்டது இனி இதேராத்திரி தினத்தில் நிஷேக முகூர்த்தமும் நடத்திவிடுவீர்.

முத்துசெடி:—அப்படியே.

அந்தப்புரமலங்காரம்.

கடற்கன்னி—ஆ! ஆ! நமது வரத்தினால் பிறந்த இந்த மாதுக்கு தகுந்த மணாளன் நந்தவனத்தில் வந்திருக்கின்றான் ஆகையால் இப்போது நிஷேகமுகூர்த்தமென்று நிச்சயித்திருக்கின்றார்கள். ஆனதுபற்றி இந்த கல்யாண மாப்பிள்ளை தெருத்திண்ணையில் படுத்து நித்திரைசெய்கின்றான். இவனையெடுத்துக்கொண்டுபோய் வைக்கப்போரில் போட்டுவிட்டு அந்த ராஜப்புதல்வனைக் கொண்டுவந்து இந்தத் திண்ணையில் படுக்கவைத்தால் அவர்கள் யெழுப்பிக்கொண்டு போவார்கள். இப்படி செய்தால் நமதெண்ணமுடியும்.

மீனாக்ஷி:—தம்பி தொந்துசெட்டி இன்னம் தாமதமா; யெழுந்து அந்தப்புரம் போய் சயனித்துக்கொள்.

மதனசேகரன்:—இதென்ன கொடுமை நாம் நந்தவனத்திலிருக்க நம்மை யாரோ ஓர் மாது வலிய வந்து அந்தப்புரம் போய் சயனித்துக்கொள்ளென சொல்லுகின்றார் இன்னம்யென்ன நடக்கிரதோ பார்ப்போம். இருட்டு வேளையாதலால் மனிதரை தெரியாமல் மனிதரை யெழுப்புகின்றார் போல் தோன்றுகிறது நிதானிப்போம்.

மீனாக்ஷி:— இன்னும்யேண்டா போகாமல் இருக்கின்றாய் புரோஹிதர் வைத்த நாழிகை தப்பிவிடும்போலிருக்கிறது. (யெனச்சொல்லி வேந்தனை அழைத்துக்கொண்டுபோய் படுக்கை யறையில் விடுவது.)

மீனாக்ஷி:—அம்மா அபிராமி நாயகன் படுக்கை யறை சென்று வெகு நேரமாச்சுது இன்னம் போகாமல் இருக்கலாகாது போவாயடி.

அபிராமி:—இதோ போகின்றேன். ஆ! ஆ! நாம் யெப்படி மனம் சம்மதமடைந்து இந்த தடியனுடன் சயனிப்பது! அந்தப்புரம் சென்று நமது பிராணனை போக்கிக்கொள்வோம் இது நிக்ஷயம்—ஆ! ஆ! இவர்யார் மாரனோ மன்னுதி மன்னனோ மாதற்கரசனோ என் மனக் கவலை தீர்க்க வந்த பொய்மாரனோ உத்தாரனோ நாம் அருகில் சென்று பார்ப்போம். ஆ! நாயகா இன்னம் தாமதமா.

மதனசேகரன்:—மாதே எனக்கு தாகமெடுக்கின்றது ஜலம் கொண்டுவருவாய்.

அபிராமி:—நாயகா சற்றுநிதானிப்பீர் இதோ நிமிஷநேரத்தில் பாலைக்காய்ச்சி தருகின்றேன். நாம் இன்னேரத்தில் தீ மூட்டுவதற்கு யேதும் காணேமோ சி! சி!! நமது சேலையில் கொஞ்சம் துணிக்கிழித்து தீ முட்டுவோம்.

இங்கு சேலையில் கிழித்த சரிகையை
மதனசேகரன் தன் மோதிரவிரலில் சுற்றிக்கொள்வது

அபிராமி:—நாயகா இதோ காய்ச்சின பாலை குடிப்பீர்.

மதனசேகரன்:—சந்தோஷம் குடித்துவிட்டேன் தாகந் தனிந்துவிட்டது. சூரியன் உதயமாக ஓர் ஜாமமிருக்கிறது ஆகையால் யான் ஸ்தானத்திற்கு சென்றுவருகின்றேன்.

அபிராமி:—அப்படியே சென்று சீக்கிரம் வருவீர்.

மதனசேகரன்—நாம் இங்கிருப்பது நலமல்ல தெய்வச்செயலால் இப்படி விதிமுடிந்தது கொடிய சீக்கிரத்தில் நமது நாடு போய் சேருவோம்.

தோந்துசேட்டி:—ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம் நமக்கு விவாகம் செய்துவைத்து நிஷேக முகூர்த்தத்திற்கு நம்மைக் கொண்டு வந்து வைக்கப்போரில் போட்டுவிட்டு யிந்தப் பெண்ணை யெவனுக்கு மாருதல் செய்தாரோ தெரியவில்லை. நாம் சென்று பார்ப்போம். அடி நாயகி என்ன இப்படி உட்கார்ந்திருக்கின்றாய் எழுந்துவா.

அபிராமி:—சீ! சீ! தடிக்கழுதை மன்னரசாமிபோல் இருந்து மயக்கவந்தாய். உன்னை மாலையிட்டதார், மடித்து பேசினால் மார்மீதுதைப்பேன் அப்புரம் போ.

தோந்துசெட்டி:—சரி இவ்வளவு மரியாதை போதுமானது. மாமனாரிடத்தில் போய்ப்பார்க்கலாம் மாமா இப்படியும் செய்யலாமா? உமது பெண்ணை எனக்கு விவாகம் செய்வித்து இதரமானவர்க்கு சேர்த்துவைக்கலாமா, இந்த வணிகக் கூட்டத்தில் இப்படியும் தொழிலுண்டா? இது நமதுஜாதிக் கடுக்குமா?

முத்துசெட்டி:—கந்தசாமி செட்டியாரே இவன் சொன்னதைக் கேட்டீரா? இவனை உதைத்து நாமெல்லோரும் சென்று இந்தக்குற்றத்தை வேந்தனிடம் சொல்லி இவனுக்கு தகுந்த தண்டனை விதிக்க நியமிக்கவேண்டும்.

கந்தசாமிசெட்டி:—அப்படியே செய்யலாம் எல்லோரும் புறப்படுவீர். அடா தொந்துசெட்டி நீயும் வா.

தோந்துசெட்டி:—இதோ வருகின்றேன்.

அபிராமி:—தந்தையே நானும் வருகின்றேன் இப்படி சொல்பவரின் வாயில் செரங்காமண்ணை கொட்டாவிட்டால் குலத்திற்கழகல்ல.

முத்துசெட்டி:—அப்படியே வருவாயம்மா.

முத்துசெட்டி:—யார் ஐயா துவாரத்தில்?

சேவகன்:—நீங்களார்? எங்கிருந்து வந்தீர் தெரியச்சொல்வீர்?

முத்துசெட்டி—அய்யா! நாங்களிருப்பது வணிகநாடு. வேந்தனிடம் பிரியாது கொடுக்கவந்தோம்.

சேவகன்:—ஆனால் போவீர்.

முத்துசெட்டி:—அப்படியே போகின்றோம். மஹாராஜா வந்தனம்.

தர்மாங்கதன்:—சந்தோஷம் என்னசெய்தி இப்படி கூட்டத்துடன் வரக் காரணமேது தெரியச்சொல்வீர்.

முத்துசெட்டி:—அய்யா மற்றொன்றுமில்லை யெனது புதல்வியை இதோ நிற்கின்ற என் தங்கை புதல்வனாகிய தொங்குசெட்டிக்கு விவாகம்செய்துவைத்தேன். அன்றேஇராத்திரி நிஷேகமுகூர்த்தம் நடந்தது இவன்மறுநாள்உதயமாகுமுன்எழுந்து என்னிடம் வந்து எனக்கு விவாகம் செய்துக்கொடுத்த பெண்ணை இதரமானவர்க்கு சேர்த்துவைக்கலாமா என பேசினான். இதைக்கேட்ட எமதுஜாதியாரெல்லாம் எம்மை ஜாதிக்கட்டு செய்தார்கள் ஆகையால் இதை தீர விசாரித்து இருவரையும் ஒத்து சேர்க்கவேண்டி உம்மிடம் வந்தேன்.

தர்மாங்கதன்:—சரிநீர் பாரைவிட்டு யிரங்கும் ஓய்தொங்குசெட்டி இந்த பாரில் நில். நிஜத்தை சொல் இல்லாவிட்டால் தண்டனைக்கு ஆளாகுவாய்.

தொங்குசெட்டி:—அய்யா உண்மையைச் சொல்லுகின்றேன் கேளும் எப்படியென்றால், இவர் புதல்வியை இராத்திரி பத்து மணிநேரத்திற்கு லக்கினம்பார்த்து எனக்கு விவாகம் செய்து வைத்தார். பிறகு பனிரெண்டு மணிக்கு நிஷேகமுகூர்த்த மென்று நிக்ஷயித்தார். அதிக சந்தோஷ மடைந்திருந்தேன் நிஷேகமுகூர்த்தம் திண்டாட்டமாகி வைக்கப்போரில் கடந்தேனே தவிர மற்றபடி யான் ஒரு சுகத்தையுமறியேன் உதயமாகி வந்து கேட்டால் யெல்லோரும் அடித்து உம்மிடம் பிரியாது செய்தார். இதுதான் தெரியும் நியாயாதிபதி நீங்களே யோசிக்கவேண்டியது.

தர்மாங்கதன்:—சரி நீ அப்புரம் போ. அம்மா அபிராமி இப்படி வா. தந்தையென்றும் தாயென்றும் பாராமல் உண்மையைச் சொல்.

அபிராமி:—மஹாராஜ் அப்படியே சொல்லுகின்றேன். எனக்கு கலியாணமென்று தெரியாது தாதிகளால் சொல்லக்கேட்டேன் ஆ! ஆ! நமது விதி இப்படியும் மூடனுக்கு லபிக்க காலமாச்சுதென பெரும் துயரமடைந்து கல்யாண பந்த

லில் நின்றேன். இத்துயரத்தில் மாங்கல்யம்தரித்தவர் இன்னு ரென்றறியேன் இதுவுமல்லாமல் அன்று இராத்திரி நிஷேக முகூர்த்தமென நியமித்து என் தாயார் என்னை படுக்கரைக் குக் கொண்டுபோய் விட அவ்விடத்தில் யான் திகைத்துப் பார்க்க மாரனைப்போல் கெம்பீரர் ஒருவரிருக்க அன்னவ ரைக்கண்டு ஆலிங்கனம் செய்தேன் அன்னவர் தாகமென்று கேட்க என் சேலையைக்கிழித்து நீமூட்டி பாலைக் காச்சி தந் தேன் அவரன்றி இவனல்ல என் கணவன். அன்னவரைச் சொன்னால் மறுவிவாகம் செய்துவைப்பீரா?

**தர்மாங்கதன்:**—உனதிஷ்டப்படி செய்கின்றேன் உண்மையைச் சொல்.

**அபிராமி:**—அய்யனே உமதருகில் வீற்றிருக்கும் பூபாலர் மோதிர விரலில் சுற்றியிருக்கும்படியான சேலைத்துண்டுதனை அவிழ்த்துப் போடச்சொல்லும்.

**தர்மாங்கதன்:**—மருகனே விரலில் இருக்கும் சேலைத்துண்டுதனை அவிழ்த்துப் போடும்.

**மதனசேகரன்:**—இதோ அவிழ்த்துப் போட்டேன்.

**அபிராமி:**—அய்யா இதோ பார்த்தீரா சேலைக்கும் துண்டுக்கும் ஒத்துமையாக யிருக்கிறது. இவர்தான் என் நாயகன்.

**தர்மாங்கதன்:**—மந்திரி இந்த குற்றத்திற்கு யேது தண்டனை விதிக்கலாம் சொல்வீர்.

**ஆகாயவாணி:**—ஒய் அரசனே! அவசரப்பட்டுத்தண்டனை விதிக்க லாகாது. சற்று யென்மொழிதனை கவனித்துக் கேள் எப் படியென்றால்; கடற்கன்னி வரத்தால் இம்மாது பிறந்தவள். இவளுக்காக அம்மான்கார்த்திருந்தான் விவாகமானவுடன் கடற்கன்னி சூதால் மதனசேகரன் அஸ்வமேரி சவாரி செய்ய அந்த அஸ்வமானது வணிக நாட்டிற்கு கொண்டு போய்விட அச் சமயத்தில் கடற்கன்னிகள் இவரிருவருக் கும் நேசம்செய்து வைத்தார்கள் ஆகையால் இவர்கள்மீது குற்றம் கிடையாது இவரிருவருக்கும் மறுவிவாகம்செய்து நேத்திரோத்ஸவமடைவீர்.

**தர்மாங்கதன்:**—ஆ! ஆ யென்ன ஆச்சரியம் ஆனல் ஆகாயவாணி சொன்னது, உண்மையாகவேதானிருக்கும். இவர்கள் எல் லோரையும் போகச்சொல்வீர்.

மந்திரி:—ஓய் வணிகரே நீங்களெல்லோரும் இம்மாதை இங்கு விட்டு விட்டு உங்கள் நாட்டிற்கு போகுவீர்.

முத்துசெட்டி:—அய்யா யானும் யெனது தேவிமாத்திரமிங் கிருக்கின்றோம் மற்றவரெல்லோரும் போகின்றார்.

மந்திரி:—சந்தோஷம்.

மதனசேகரன்:—மாமா எனக்கு விவாகமென மணவோலைஎழுதி அன்பத்தாறு வேந்தருக்கும் தெரிவித்து கொடிய சீக்கிரத் தில் நாட்டை அலங்காரம் செய்வீர்.

தர்மாங்கதன்:—இதோ உனதிஷ்டப்படி மணவோலை யெழுதி அன்பத்தாரு வேந்தருக்கும் அனுப்புகின்றேன். மந்திரி சீக்கிரம் மணவோலை யெழுதி மருகன் சொன்னதுபோல் அனுப்புவீர்.

மந்திரி:—இதோ உமதிஷ்டப்படி அனுப்புகின்றேன். நாட்டையும் அலங்காரம் செய்கின்றேன். அடா சேவகா இந்த மணவோலையை யெடுத்துக்கொண்டு அன்பத்தாரு வேந்தருக்கும் கொடுத்துவருவாய்.

சேவகன்:—அப்படியே கொடுத்து வருகிறேன்.

## அமராபுரி நாடு.

சேவகன்:—யார் ஐயா துவாரத்தில்?

சேவகன்.—நீயார் எங்கிருந்து வந்தவன் தெரியச்சொல்.

சேவகன்:—நான் இருப்பது தர்மாபுரி. வேந்தரைக் காணவந்தேன்.

சேவகன்.—அப்படியானல் போவீர்.

சேவகன்:—இதோ போகின்றேன். வந்தனம்! வந்தனம்.

கருணாகரபூபாலன்:—நீயார் எந்தநாடு இங்குவந்தக்காரணமேது

சேவகன்.—அய்யா நான் இருப்பது தர்மாபுரி. யான் எனது வேந்தன் துவாரத்தை காற்கும் சேவகன். எங்கள் வேந்தன் உம்மிடம் மணவோலைதந்து வரும்படி சொன்னர் ஆகையால் அதைக் கொண்டுவந்தேன்.

கருணாகரன்:—சந்தோஷம் எதோ கொடு பார்ப்போம் ஆ! ஆ! சந்தோஷம் அப்படியே வருகிறதாகச்சொல்.

சேவகன்:—அப்படியே சொல்லுகின்றேன்.

கருணகரன்:—மந்திரி நாமெல்லோரும் தர்மாபுரி நாட்டில் விவாகம் நடக்கின்றதாம் போகலாம் வருவீர்.

மந்திரி:—அப்படியே.

## தர்மாபுரி அலங்காரம்.

தர்மாங்கதன்:—மந்திரி எல்லா வேந்தருக்கும் தகுந்த விடுதிகள் தந்து தக்க மரியாதைகள் செய்குவீர்.

மந்திரி:—அப்படியே செய்கின்றேன்.

புரோஹிதர்.—ராஜோத்தமா காலதாமதமாகின்றது ஆகையால் கல்யாண மண்டபத்திற்கு பெண்ணையும் மாப்பிள்ளையும் அலங்காரம் செய்து அழைத்து வருவீர்.

தர்மாங்கதன்:—அய்யா வேதியரே நால்வர்மாதரும் வந்திருக்கின்றார்கள். மாப்பிள்ளையும் வந்திருக்கின்றார்.

புரோஹிதர்:—சந்தோஷம் மாப்பிள்ளையின் தாய்தந்தையரே வந்து பாதபூஜை செய்துக்கொள்வீர்.

மதனசேகரன்:—சற்று நிதானிப்பீர்! இந்தசபைதனில் வந்திருக்கப்பட்ட இராஜாதிராஜரே யெனது மனக்கவலைதனை கேட்பீர்! யெப்படியென்றால் நான் அதோ உட்கார்ந்திருக்கப்பட்ட (கருணகரபூபாலருடைய) ஜேஷ்டபுதல்வன். யான் பிறந்து வளர்ந்து பதினறுவயதில் யெனது தந்தைதனை பாலக்காடு தேவையென்று கேட்க அன்னவர் அதுபோல் தந்து கூலிஆட்களை வைத்து காட்டை சுத்தப் படுத்தும்சமயத்தில் அங்கு 12-அண்டா பொருள்கிடைக்க அதை ஆட்கள் வந்துசொல்ல அந்தப் பொருளுக்கு ஆசைப்பட்டு என்னை பலிகொடுக்க யெண்ணமிட இதையறிந்த என் சிறிய தாயார் மனம்பொருக்காமல் என் தாயிடம் வந்து முறையிட என் தாயார் அதைக்கேட்டு என்னை அழைத்துக் கொண்டு காட்டுமார்க்கமாக வரும்சமயத்தில் இந்த அம்பிகை யென்னுப் மாதால் வேண்டிய பொருள்கிடைத்தது. இன்னாட்டில் வ துசேர்ந்து நான் புதிய நாடுண்டாக்கி வாழும் சமயத் கொல்லத்துணிந்ததந்தை கல்யாணத்திற்கு

வந்து கலந்தாரே இவரல்லவா தந்தை இது வரைக்கும் இறந்தானோ பிழைத்தானோயென்று பார்க்காதவர் இன்று வந்தாரே இதுவே உத்தமம்.

கருணாகரன்:—அடா யென் செல்வமே மதியீனத்தால் உன்னைக் கொலைசெய்ய யெண்ணமிட்டது உண்மைதான். நான்செய்த குற்றமதை இந்த நால்வர் முன்னிலையில் சொன்னதே போதுமானது ஆகையால் இனி மனக்கவலையிடாமல் சந்தோஷமாக மாங்கல்யந்தரித்து சுகமனுபவிப்பாயடா கண்மணியே

சற்குணாம்பிகை:—நாயகா இதோ வந்தனம் செய்கின்றேன்.

கருணாகரன்:—சந்தோஷம் சந்தோஷம் என் கோத்திரம் விர்த்தியடையும்பொருட்டு புதல்வனை காப்பாற்றிய பதிவிரதை நீயன்றி வேறுகிடையாது காலதாமத மாகின்றது சடங்கு நடத்தும்.

புரோஹிதர்:—அய்யா இராஜோத்தமா இந்தமாங்கல்யம் யெடுத்து இந்நால்வர் கண்டத்திலும் தரிப்பீர்.

மதனசேகரன்:—இதோ தரித்துவிட்டேன்.

புரோஹிதர்:—யெல்லோரும் மங்களம் சொல்வீர்கள்.

மங்களம்! மங்களம்!! மங்களம்!!!

முற்றிற்று.